உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பெரிய புராண வாராய்ச்சி

இதன் ஆசிரியர் :

வா. மகாதேவ முதலியா ரவர்கள்

(கிறித்தவ கலாசாலைத் தமிழாசிரியர்)

மை பதிவு ஆயது] [விலை ரூபாய் 1-8

1924

KALANILAYAM PRESS, GEORGE TOWN, MADRAS.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நூல் வரலாறு ... ... ... | 1 |
| நூலாசிரியர் வரலாறு ... ... | 4 |
| நூற்பெயர் ... ... ... | 10 |
| காலம் ... ... ... | 17 |
| நூற்பாயிரம் ... ... ... | 18 |
| செய்யுணலம் ... ... ... | 24 |
| சிறப்புச் செய்கைகள் ... ... | 26 |
| ஆசிரியர் திருமணப்பாங்கு ... ... | 139 |
| ஆசிரியர் பன்முக ஞானம் ... ... | 148 |
| சில தடைகளுக்கு விடை ... ... | 162 |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 22 | யினரே | யின்றெ |
| 5 | 15 | முதலியவற் | முதலியவற்றை |
| 12 | 7 | னென்னபப | டென்னப்ப |
| 13 | 16 | அப்பெயா | இப்பெயா |
| 15 | 10 | எனறும | எனனும |
| 21 | 11 | கணைணுகக | கணைணுகக |
| 42 | 12 | மிசை | மிகை |
| 55 | 13 | இஞ்ஞானது | இஞ்ஞான்று |
| 56 | 18 | ளாபோற | ளாபொற |
| 59 | 6 | சேவாகளானும | சேவகாகளானும |
| 68 | 16 | எனைய | எனைய |
| 70 | 10 | வாயின | தாயினது |
| ,, | 11 | சித்தமாயின | சித்தமாயினது |
| 89 | 11 | நோஙகி | நோககி |
| 100 | 1 | கேளிதே | கெளிதே |
| 122 | 6 | மூதநும | மூததும |
| 128 | 5 | பெயரெசசம் | பெயரெசச |
| 138 | 7 | எகதேசவுருகவணி | ஏகதேசவுருவகவணி |
| 168 | 24 | மேலீட்டு | மேலிட்டு |

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

சற்று முன்பின்னாக இருபது ஆண்டுகட்கு முன்ன ரொருபகல் வைணவப் புலவரொருவர் சைவப் புலவ ரொருவரொடு சொல்லாடுழிக் கம்பராமாயண கவி சில கூறி அவற்று ணயஞ் சில மொழிந்து அச் சைவப் புலவரை நோக்கிப் 'புலவீர்' நும் பெரிய புராணத்து இத்தகைய நயமுண்டோ? உண்டேல், இரண்டொரு பாக்கள் கூறி நயம் மொழிக' என்றார். அப்போது அச் சைவப் புலவர் ஒன்று முரையாது வாளாதிருந்த னர். அது கண்ட யாம் அவவிருவ ரிடைப்புக்கு ஏதேனு முரைபபப பரிந்தன மெனினும், அதற்குக் காலமு மிடனும் வாய்த்தில பெரிய புராணத்துத் தொட்ட தொட்ட விடங்களிலெல்லாம் நயம் பலவுள வென்னும் உண்மையைப் பலரு மறிய நூல் முகமாகத் தெரித்தல் வேண்டுமென அப்போதே துணிந்தனம். அன்று தொட்டுத் தெய்வப்புலமைச் சேக்கிழார் பெருமாஞ ரிருங்கவிகளிற் பெரும்புலவர் கண்டுரைத்த அரும்பொருள்களையும், யாம பன்முறை படித்துப் படித்து ஆழ்ந்து சென்று நுனித்தறிந்த நுண்பொருள்களையும் அப்போதைக் கப்போது குறித்து வைத்திருந்து அவையிற்றை ஒன்று திரட்டி ஒழுங்குபடுத்து நூ லெழுதப் புக்கனம். நூல் விரிந்து சென்றது, எமக்கு அச்சம் பெரிதாயிற்று. என்னை? நூல் விரியுமேல், அச்சிடற்குப் பொருள் தேடற் றுன்பம் பெரிதாம். அது பற்றி நூலைச் சுருக்கிச் சுருக்கி ஓராற்றான் முடித்தனம். முடித்தும், எமது முயற்சிக் குறைவான் அச்சிற்குத் தர ஓ ராண்டிற்குமேற் சென்றது.

இந் நூலிற் குறை குற்றங் காணப்படின் அறிவுடை யுலகம் அவற்றைப் பாராட்டாது பொறுத்துக் கொள்ள வேண்டுகின்றனம்

இந் நூல் வெளிவர முயன்று எம்பொருட் டுழைத்த எமது மாணுக்கரு ளொருவராகிய திருவாளா மா அ. கனகசபை முதலியார் [Clerk, Correspondence Dept., G. P. O.] செய்த நன்றியை ஒரு போதும் மறவேம்

இந் நூலை மிகச் சிறிய காலவெல்லையின் அழகு பெற அசசிட்ட 'கலாநிலைய' அசசியந்திரசாலை யுடையாரக்கு எமது வந்தனம் உரித்தாம்

## இந்நூலை அச்சிடற்குப் பொருளுதவி செய்த அன்பர்கள்

| | ரூபா |
|---|---|
| திருவாளர் கா-நமச்சிவாய முதலியார் அவர்கள் (Lecturer, Queen Mary's College.) | 50 |
| பிரம்ஹஸ்ரீ க-இராமரத்நம். ஐயா, அவர்கள் B.A. | 25 |
| திருவாளர் மா-அ-கனகசபை முதலியார் அவர்கள் | 25 |
| ,, கா-இராஜாராம் பிள்ளை அவர்கள் | 10 |
| ,, ரா-துரைசாமி நாயகர் அவர்கள் | 10 |
| திருவல்லிக்கேணி ஸ்ரீநடராஜ பக்தஜன சபையார் : | |
| திருவாளர் அ-சண்முக முதலியார் அவர்கள் | 10 |
| ,, அ-கனகசபை முதலியார் ,, | 10 |
| ,, அ-தங்கவேலு நாட்டார் ,, | 10 |
| ,, ம-மு-இராமலிங்க முதலியார் ,, | 10 |
| ,, கு-வேதாசலத் தேவர் ,, | 10 |
| ,, மா-பார்த்தசாரதி முதலியார் ,, | 10 |
| ,, க-முருகப்ப முதலியார் ,, | 5 |

சென்னை
12-5-1924 } வா—ம.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பெரிய புராண வாராய்ச்சி

---

## (க) நூல் வரலாறு.

‘மும்மைப் புவனங்களின் மிக்கதன் றேயம் மூதூர்
மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளுந் தருவார்திரு வால வாயி
லெம்மைப் பவந்தீர்ப் பவர்சங்க மிருந்த தென்றால்’

நமது ஆசிரியர் சேக்கிழார் நாயனாரும்,

‘அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நா
டொத்தி ருக்குமென் றுலுரை யொக்குமோ
வெத்தி றத்தினு மேழுல கும்புகழ்
முத்து முத்தமி ழுந்தந்து முற்றுமோ’

எனக் கம்பரும் போற்றிக் கூறிய அருந்தமிழ்த்து மொவ்வாத இருந்தமிழ் மொழிக்கணுள்ள ஞானநூல்கள் பலவற்றுள்ளும் ‘சிவஞான சித்தியார்’ ஒப்புயர் வின்றிச் சிறந்து நிற்றல் போலப் புராணங்கள் பலவற்றுள்ளும் ஈடுமெடுப்பு மின்றிச் சிறந்து நிற்பதெனத் தெரிப்பான்,

'தொண்டர் புராணந் தொகைசரிதை யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்'

என உமாபதிசிவம் வரையறை செய்து கூறிய கெழுமிய சொல்லும் விழுமிய பொருளும் அமைந்து எத்திசையு மணக்கும் பத்திச் சுவை மலிந்த இப் பெரிய புராணம் வந்த வரலாறு கூறுதும் :—

'மழமுனி என்னும் இயற்பெயர் கொண்ட வியாக்ரபாத (புலிக்கான்) முனிவர்க்கும் வசிட்ட முனிவர் உடன்பிறந்தாளுக்கும் மகவாய்த் தோன்றிக் குழவிப் பருவத்திற் பசிக்குப் பாற்கடல்பெற்ற உபமன்யு மாமுனிவர் பல்லாயிர முனிவரும், யோகியரும் தம்மைப் புடைசூழத் திருக்கைலை மலையின் தாழ்வரையின்கட் சிவத்யானபரராய்ச் சிவானந்தபலிதராய் எழுந்தருளியிருப்புழி அங்கு ஆயிரஞ் சூரிய ரொரு காலத்து உதித்தாற் போல்வதொரு பேரொளி தோன்றிற்று அப்போது முனிவரும் யோகியரும் உபமன்யு மாமுனிவரை நோக்கி 'அடிகாள்! இஃதென்ன காட்சி! எக்காலத்தும் அடியேங்கள் காணாதொன்று!' என வினவ, முனிவர் பெருமான் சிறிது போது மோன நிலையுற்று ஞானக்கண் கொண்டு கண்டு 'தென் திசையில் அவதரித்த சுந்தரமூர்த்தி நாயனார் ஐயன் அருளால் அணைகின்றார்' என விடுத்து இருக்கை விட் டெழுந்து திசை நோக்கித் தொழுது பேரின்பத்தோடு மீட்டும் இருக்கையின் எழுந்தருளினர் முனிவரரிடத்து ஒரு நாளும் நிகழாத நிகழ்ச்சியைக் கண்ட முனிவரும் பிற

ரும் பெரிதும் வியந்து, 'பிரானீர்! இது புதுமையினும் புதுமை! பசுபதியை யன்றி வேறொரு தெய்வத்தையும் நீர் இறைஞ்ச அடியேம் இதுவரையுங் கண்டதில்லையே! இன்று இப் பேரொளியைக் கண்டு இருக்கை விட்டெழுந்து இறைஞ்சினீரே! அது பற்றி ஐயம் பெரிதுடையேம்; அகற்றுக' என்ன, முனீந்திரர் 'நாயனார் நாம் தொழும் தகுதி யுடையா' ரென்ன, அவர்கள் அவரை வணங்கி 'அந் நாயனார் அருமந்த வரலாற்றைக் கேட்டும் விருப்பம் மிக்குடையேம்; அருள் புரிக' என்னக் குறையிரந்து வேண்டினர் முனிசிரேஷ்டர் அதற்கு ஒருப்பட்டு 'அன்புடையீர்! கேட்பீராக! என அவ் வரலாற்றை விரிவுறக் கூறுமுகத்தானே நாயனார் அருளிசசெய்த 'திருத்தொண்டத் தொகை' யுளடங்கிய அடியார்கள் அருஞ் செயல்களையுங் கூறிய நூலே 'உபமன்யு பக்தவிலாசம்' எனப்பெறு மெனக் கொள்க இங்ஙனம் கொள்ளாது, சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறொன்றே அன்னார் கூறினர்; அடியார் அறுபான் மூவர் அருங் கதை அவர் கூறிற்றில ரென்னின்,

> 'என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை
> யன்று சொன்ன படியா லடியவா
> தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
> யின்றெ னாதர வாலிங் கியம்புகேன்'

என்னும் நூலுடையார் கூற்றொடும், பின்னர் நிகழும் அடியார் அறுபான் மூவர் அரிய கதைகளை உமையம்மையார்க்கு முன்னர் அருளிச் செய்த சிவபெருமான் 'இவ்

வடியார் சரிதம் பின்னொரு ஞான்று உபமந்யுமுனிவர் உலகின் வெளிப்படுமென்னத் திருவாய்மலர்ந்தன ரென்னுஞ் சிவரகசியத்து நவாம்ச வுரையொடும் மாறுபடுத லின் அவர் கொள்கை ஏலாதென விடுக்க

'தொகையா நாவ லூராளி தொடுத்த திருத்தொண [டப்பெருமை
வகையால் விளங்க வுயர்நம்பி யாண்டார் வகுப்ப [மற்றதனைத்
தகையா வன்பின் விரித்துலகோர் தம்மை யடி [மைத் திறப்பாட்டி
னுகையா நின்ற சேக்கிழா ரொளிர்பொற் கமலத் [தாள்பணிவாம்'

எனக் கச்சியப்ப முனிவர் அருளியவாறே சேக்கிழார் தொகைநூலாகிய திருத்தொண்டத்தொகையைத் தமது பெரியபுராணத்திற்குப் பாயிரமாகப் போற்றிக் கொண்டு, நம்பியாண்டார்நம்பிகளருளிச்செய்த திருத்தொண்டர் திருவந்தாதியை அடியொற்றியதே யன்றி உபமந்யு பக்தவிலாசத்தையுந் தழுவின ரெனலே சால்புடைத் தென்க

## (2) நூலாசிரியர் வரலாறு.

ஆசிரியர் சேக்கிழார் 'சான்றோருடைத்' தெனத் தமிழ் மூதாட்டி அறுதியிட்டுச் சாற்றிய பண்டை மேம்பாடுடைத் தொண்டை நன்னாட்டின்கண் தாளாண்மை குன்றாத வேளாளர் கோட்டங்களாகிய புழல், புலியூர், ஈக்காடு, மணவூர், செங்காடு, பையூர், எயில்,

தாமல், ஊற்றுக்காடு, களத்தூர், செம்பூர், ஆமூர், ஈதூர், வெண்குன்றம், பலகுன்றம், இளங்காடு, காலி யூர், சிறுகாரை, படுவூர், கடிகை, சந்திரிகை, குன்றபத் திரம், வேங்கடம், வேலூர என்னும் இருபத்து நான் கனு ளொன்ருகிய புலியூர்க் கோட்டத்தி னடங்கும் குன்றத்தூர், பேறூர், மாங்காடு, பம்மல், கோட்டூர் என்னும் ஐந்து ஊர்களி லொன்ருய குன்றத்தூரிற் சேக்கிழார் மரபிற் பிறந்து 'அருண்மொழித்தேவ' ரென்னும் பிள்ளைத் திருநாமம் உற்றுத் தமது பிற் ருேன்றலாகிய பாலருவாயருடன் நலம் பாராட்ட வளர்ந்து பதினுருண்டு நிறையு முன்னர்த் தமிழிலக்க ணம், இலக்கியம், சாத்திரமுதலிய ஐயந்திரிபறக் கற் றுப் பன்முக ஞான மடைந்தனர் இவரது இக்கண தாரண சக்தி, பிரதிபை முதலியவற்றையும் அடக்கம், பொறுமை, இன்மொழி, சிந்தைநிறைவு முதலியவற் யும் இவரது ஆசிரியரும், சகபாடிகளும், இவருடன் பழகினேரும், சொல்லாடினேரும் பெரிதும் வியந்து பேசுவாராயினர் அங்ஙனம் பேசவே, நாளடைவில் இவர் புகழ் எங்கெங்கும் பரவிற்று இஃதிவ்வாருக, * அநபாய சோழன் ஒரு பகல் தனது பண்டித மண்

* இது கர்ணபரம்பரையின் வந்த கதையென்க. 'ஞாலமலே கடறன்னிற் பெரியதெது வெனவெடுத்து ஞால மாள்செங், கோலரச னனபாயன் வினவியமுத் திறக்குறிப்பைக் குறிப்பி ஞேர்ந்து, சாலவுயர் திருக்குறணமூன் றிறையாக வெழுதிழு வ னரசு தாங்கி, வாலறிவாற் றிருத்தொண்டர் புகழ்விரித்த சேக்கிழார மலர்த்தாள் போற்றி' என்னுஞ் சிதம்பர சபாநாத புராணப் பாவினை ஈண்டறிக.

டலத்தை நோக்கி 'நிலம், மலை, கடல் இவற்றினும் பெரியன யாவை?' என வினவினன் அதற்கு அம் மண் டலத்தி லொருவரும் விடை பகரா திருப்பவே, 'விடை பகர்வா ருளரேற் போதருக' வென்று பறை சாற்று வித்தனன் இச் செய்தி சின்னுளின் அருண்மொழித் தேவா திருச்செவிக் கெட்டிற்று உடன் சோழன் வினுக்களுக்கு விடையாக,

'காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது'

'நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப பெரிது'

'பயன்றூககாா செயத வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது'

என்னும் மூன்று திருக்குறள் வெண்பாக்களை எழுதி விடுத்தனர். அது கண்ட அரசன் மனம் பூரித்து அவரைத் தனது அவைககு வருவித்து அவரைத் தழீ இக்கொண்டு 'இன்றுதொட்டு நீர் எனது அமைசச ராகுக' வெனக்கூறி இசைவித்து 'உத்தம சோழப் பல்லவ' ரென்னும் பட்டமுந் தந்து,

நாலாவான்

'மந்திரியு மாவான் வழிக்குத துணையாவா
னந்த வரசே வரசு'

எனக் கொண்டு மிக்க மதிப்புடன் அவர் சொற் கேட்டு வந்தனன்.

ஆசிரியர் இங்ஙனம் தமது முயற்சியி னொரு பழுது

மின்றி நடந்து வருகையில் 'திருநாகேச்சுரம்' என்னுந் திருப்பதியிற் பற்று மிக்குத் தாம் பிறந்த வூராகிய குன்றத்தூரின் மடவளாக மாக்கித், திருக்கோயில் கட்டுவித்து அதற்குத் திருநாகேச்சுரமெனப் பெயர் சாற்றிப் பூசை, விழா முதலிய சிறப்பொடு செய்து வருவாராயினர் அவ்வாறு சின்னாட்கள் செல்லவுழிச் சமணக் கொடி கொழுந்து விட்டோங்கிச் சைவமாமரத்தை மறைத்தலைக் கண்ட ஆசிரியர் அக் கொடியை அறுத்தெறிதற் கேற்ற காலத்தை எதிர்பார்த்து நின்றனர் நிற்கையில், சமணப் புலவர் சிலவர் அவ் வப்போது அநபாயன்மாட்டு வந்து 'சிந்தாமணி' யினின்றுஞ் சிலகவிகளெடுத்துக் கூறி அவற்றின்கட் சொன்னயம் பொருணயம் காட்டியுஞ் சீவகன் கதையைச் சுருக்கிக் கூறியும் அவனை மகிழ்வித்தனர். அது கண்ட ஆசிரியர் ஒரு பகல் அரசன் செவ்வி யறிந்து 'அன்புடைய அரச! இம்மையும் மறுமையுந் தருவனவாகிய இன்புடைய சிவ கதைகள் பலப்பல இருக்கவும், அவகதை கேட்டனையே! இஃதென்னை?' என்ன, 'அக் கதை அவகதையாயின் நீர் நமது சிவ கதையைக் கூறும்' என்றனன் அரசன் அன்று தொட்டு ஆசிரியர் அடியார் சரிதங்களை நேர்ந்த போதெல்லாம் அரசற்குக் கூறி வருவாராயினர். அரசன் அத் திவ்விய சரிதங்களைக் கேட்கக் கேட்க விருப்பும் வியப்பும் மேன்மே லோங்கி, 'அத்தகைய அடியார்களுடைய அற்புதச் செய்கைகளை யெல்லாம் விரித்தொரு புராணம் யாப்பினால் யாத்தருள்க' வென, ஆசிரியர், 'சிற்றம்பலஞ் சென்று ஆண்டுத் தங்கி இயற்று

தும்' எனக் கூறி விடைபெற்றுப புலியூர் புக்குச் சிவகங் கையின் ஆடி நித்திய கருமானுஷ்டானங்களை முடித்து விசுவரூப விநாயகரை வணங்கிப் பொன்னம்பல நாதன் திருமுன் சென்று வணங்கி நின்று அன்பு பெருகி அக முருகி என்பு நெகிழ்ந்து இருக்கின்றார் இறைப்ப, 'அள விலாத பெருமையராகிய அளவிலா அடியார், பெரு மையை என்னென் றறிந்து யாங்ஙனம் உரைப்பன் யான்' என் றுன்னிய வளவில் அருச்சகர் விபூதி தர, ஆகாயவாணி 'உலகெலாம்' என அடியெடுத்துத் தர இன்புருக் கொண்டு,

> உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
> னிலவு லாவிய நீரமலி வேணிய
> னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
> மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்'

எனப் பாவினை நிறைத்துப் பேசியே கலியில் வரந் தரு தெய்வமாகிய பெருமா னருட்டிறத்தைப் பாராட்டி வியந்து ஆயிரக்கால் மண்டபம் எய்தி யிருந்து 'எடுக்கு மாக்கதை' என்று தொடங்கிப் புராணத்தை இனிது முடித்தனர். புராணம் முடிவுபெற்ற செய்தி யறிந்த சோழன் தன் பரிவாரங்களோடு தில்லையை யடைந்து ஆசிரியரைக் கண்டு அவரோடும் பிறரோடும் பொற்சபை புகுந்து பெருமானை வணங்குகையில் 'அநபாய! நாம் உலகெலாம் என அடியெடுத்துத் தர நமது அன்பன் சேக்கிழான் நாயன்மார் திருத்தொண்டின் றிறங் களைச் செய்யுளினமைத்துப் புராண மாக்கினன். அதன் அரும்பொருளை நன்குகேட்டி' என்றோர் அசரீரியும்

திருச்சிலம் பொலியும் எல்லோரும் கேட்க எழுந்தன. ஆசிரியர் தில்லை மூவாயிரவர் கூடிய அவைக்களத்தே இருந்து அரசனும் அன்பரும் கேட்பச் சித்திரை மதியிற் றிருவாதிரை நாளிற் றொடங்கி நாடோறும் பொருள் விரித்து அடுத்த சித்திரை மதியிற் றிருவாதிரை நாளிற் புராண முடித்தனர் முடித்ததும் அரசன் புராணத்தையும் ஆசிரியரையும் யானைமீ தேற்றித் தான் சாமரப் பணி மாறிக் கொண்டு திருவீதி வலம் வந்து ஞானசபை சேர்ந்து ஆசிரியர்க்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' என்னுந் திருநாமஞ் சூட்டி வணங்கிப் புராணத்தைச் சைவத் திருமுறைகளோடு *பன்னிரண்டாவதாக எண்ணிச் செப்பேடு செய்து சந்நிதியில் ஏற்றுவித்தனன். ஆசிரியர் பெருமை யுணர்ந்த பின் அவரைத் தன்கீழ் அமைச்சராய் வைத்து ஏவுதற்கு அஞ்சிக் குன்றத்தூ

---

| | | | |
|---|---|---|---|
| * திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரத | | | |
| ,, | திருமுறை | ,, | 3 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் | ,, | ,, | 3 |
| சுந்தர மூர்த்தி சுவாமிகள் | ,, | ,, | 1 |
| மாணிக்க வாசக சுவாமிகள் | ,, | ,, | 1 |
| ஒன்பது நாயன்மா ரருளியன | ,, | ,, | 1 |
| திருமூலர் திருமந்திரம் | ,, | ,, | 1 |
| பதினொராந் திருமுறை | ,, | ,, | 1 |

ஆகப் பதினொரு திருமுறைகளுட னிப் பெரியபுராணமும் பன்னிரண்டாவது திருமுறை யாயிற் றென்க.

'தோடுடைய' எனத் தொடங்கி 'உலகெலாம்' என்று முடிதலின் அஃதாவது 'ஓ' என்று தொடங்கி மகரமெய்யின் முடிதலின் இப் பன்னிரண்டு திருமுறைகளும் பிரணவார்த்த மென்ப.

ரில் திருநாகேச்சுவரப் பெருமானுக்குத் தொண்டு செய்திருந்த அவர் திருத்தம்பியாரை வரவழைத்து அவர் பதவியி னமர்த்திக் கொண்டு அவர் விரும்பியவாறே அவரைச் சிதம்பரத்தினகண் இருக்க விட்டனன். அவர் அங்குச் சிலகாலஞ் சிவத்தியானபசராய் வைகிச் சிவானந்தப் பெருவாழ்வு பெற்றனா

'கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண டிங்கண முதல்வன்' (திருமுகத்திற்

குறித்தவாறே பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து முத்தி கொடுத்த முன்னோராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் ஆசிரியர் சேக்கிழார் புராணத்தை யாப்பின் யாத்தன ரென்றறிக.

## நூற் பெயர்

ஆசிரியர் நூற்பாயிரத்துள்,

'இங்கிதனுமங் கூறி னிவ்வுல கத்து முன்னாட்
டங்கிரு ளிரண்டின் மாக்கள் சிந்தையுட் சார்ந்து
நின்ற
பொங்கிய விருளை யேனைப் புறவிருள் போக்கு
கின்ற
செங்கதி ரவன்போ னீக்குந் திருத்தொண்டர் புரா
ண மென்பாம்'

எனக் கூறியவாற்றாற் 'திருத்தொண்டர் புராணம்' என்பதே நூற்பெயராதல் காண்க.

'ஸர்க்கச்ச ப்ரதிஸாக்கசச
வம்சோ மந்வந்தராணிச
வம்சாநு சரிதஞ் சேதி
புராணம் பஞ்ச லக்ஷணம'

என்ப வடநூலார் அதன்படி உலகசிருட்டி, பிரதிசிருட்டி, மன்னா முனிவர் வமிச வர்ணனம், அன்னோர் வமிசக் கிரம வர்ணனம், மநுவந்தரம் ஆகிய இவை ஐந்தும் புராணத்தின் இயலெனப் போதருமென்க அவ்வைந்தியல்களுள் ஒன்றேனும் இப் புராணத்திற்கிலது. அற்றேல், அப் பெயர் இந் நூற்கு எற்குமாறு யாண்டையதெனின், 'புராணம்' என்னுஞ் சொற்குத் தாதுப்பொருள் 'பழமையுடையது' என்ப வாகலின், ஈண்டு அச் சொல் 'பழைய கதை' என்னும் பொருட்டாய் நூற்குப் பெயராயிற்றென்க இனி, 'தொண்டர் புராணம்' என்றது பொருந்துமாறு கூறுதும் :—

'தொண்டர்கா ளேசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணியுந் தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோநா மல்லற்படை வாராமே'

என்னும் பாசுரத்திற் போலத் 'தொண்டர்' என்னுஞ் சொல் மெய்த்தொண்டாகிய கைத்தொண்டு செய்யுஞ் சரியையரைப் பெரும்பான்மை யுணர்த்துமேனும்; சரியையர், கிரியையர், யோகியர், ஞானியர் ஆகிய இந் நாற் பாதத்தினரும் முறையே மெய்த்தொண்டும், மெய்த்தொண்டொடு மனத்தொண்டும், மனத்தொண்டும், ஞானத்தொண்டுஞ் செய்பவ ராகலின், அச் சொல்

அந் நாளில் தில்லையினரையுஞ் சிறப்பான்மை யுணர்த்துமெ ன்க

'நன்கு டம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்க டன்னடி யேனையுந் தாங்குத
லென்க டன்பணி செய்து கிடப்பதே'

'என்றுயோ கொன்னப்ப னேழேழ் பிறவியு
மன்றே சிவனுக் கெழுதிய வாவண
மொன்று யுலகம் படைத்தா னெழுதினை
னின்றுன் முகில்வண்ண னேரெழுத தாயே'

'கற்றுக் கொள்வன வாயுள நாவுள
விட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுள னுமுளோ
மெற்றுக் கோநம னுன்முனி வுணபதே'

'நாடி நாரண னுன்முக னெனறிவா
தேடி யுந்திரிந் துங்காண வல்லரே
மாட மாளிகை சூழ்திருத் தில்லையுள
ஆடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே'

'ஞானத் தாற்றொழு வாாசில ஞானிகள்
ஞானத் தாற்றொழு வேனுனை நானலேன
ஞானத் தாற்றொழு வார்க டொழக்கண்டு
ஞானத் தாலுனை நானுந் தொழுவனே'

இன்னோ ரன்ன அருளிச் செயல்கள் மேற்கூறிய பொருளை வற்புறுத்துமென்க 'தொண்டர்' என்னும் இப்பெயர் சரியையர்க்கே யுரித்தெனின், 'திருத்தொண்

டத்தொகை' என்னும் பெயா ஆளுடைய நம்பிகள அருளிச்செய்த 'தில்லைவாழந்தணர்த மடியார்க்கு மடியேன்' என்றற் றொடக்கத்துத் திருப்பதிகத்திற்கு மேலாமை காண்க ஆசிரியர் தம் நூற்குப் பாயிரமெனப் போற்றிய அத் திருபபதிகத்தின் பெயர் கொண்டே அதற்குப் பெயரிட்டனரென் றறிக இதனைப் பின்னா விரிக்குதும். இன்னும், 'தொண்டர்' என்பது 'ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே' என்னும் உபலட்சணவிதி பற்றி ஏனை மூவரையும் உணர்த்திற் றென்றலு மொன்று அஃதிருக்க; இந் நூற்குப் 'பெரிய புராணம்' என்னும் பெயர் இப் பெரியோர் இக் காலத்து இக் களத்து இட்டதெனத் துணிந்து கூறுதற் குரிய சான்று ஒன்றேனு மின்று ~~பொ...தொராகிய~~ உமாபதி சிவாசாரியர் சேக்கிழார் நாயனூர் புராணத்தும் இப பெயரைக் குறிப்பானேனுங் கூறிற்றிலர். அதனால் அவர் காலம்வரை அப் பெயர் வழங்கிலதென்பதே தக்கதென், (க பின்னர் இப் பெயர் வழங்கலாயிற்று. ஏனைத் தமிழ்ப புராணங்கட் கின்றி இதற்கு இது வழங்குதலும் இதன் மேன்மையைத் தெரிக்கு மென்க. எனின், இப் பெயர் வழங்குதற்குப் புராணத்துள் ஏதேனும் ஏதுவுண்டோ வெனின், ஆசிரியர் ஆயிரக்கான் மண்டபத் திருந்து புராணந் தொடங்குழி 'எடுக்குமாக்கதை' என்றமையி னுண்டென்க. 'மாக்கதை' எனினும் 'பெரிய புராணம்' எனினும் ஒக்கும்.

கச்சியப்பசிவாசாரியர்.

'இறைநில மெழுதுமு னிளைய பாலகன்
முறைவரை வேனென முயல்வ தொக்குமா
லறுமுக முடையவோ ரமலன் மாக்கதை
சிறியதோ ரளவினேன் செப்ப நின்றதே' எனவும்

'நடையி னின்றுயா நாயகன் ஏற்றதி
னிடைநி கழ்ந்த விராமாவ தாரப்போத
தொடை நிரம்பிய தோமறு மாககதை
சடையன் வெணணெய்நல் லூர்வயிற றந்ததே' எனவும்

முறையே அவையடக்கத்துள்ளும் நூல்வரலாற்றுள்ளும் 'மாக்கதை' என்றாரலோ வெனின், அவ் விரண்டிற்கும் இதற்கும் வேறுபாடுண்டு. கச்சியப்பசிவாசாரியர் 'அறுமுக முடையவோ ரமலன் மாக்கதை' என்றும், கம்பர் 'இராமாவ தாரப்போர்த் தொடை நிரம்பிய மாக்கதை' யென்றும் பிறிதினியைபு நீக்கிய விசேடணங்களோடு கூற ஆசிரியர் அத்தகைய விசேடண மொன்று மின்றி 'எடுக்கு மாக்கதை' என்றனர் ஈண்டு 'எடுக்கும்' என்பதற்குச் 'சிறந்து விளங்கும்' என்றும், '(பிறவிப் படுகுழியினின்றும் உயிர்களை) எடுக்கும்' என்றும் பொருள் கூறுவரேனும் '(யான் இயற்றத்) தொடங்கும்' என்பதே நேரிதாதல் காண்க

இனி, ஒரு சிலர் விரிநூலாகலின் 'பெரிய புராணம்' என வழங்கிற்றென்ப விரிநூலைப் பெருநூலென்றன் மரபன்மையானும், ஈண்டுப் 'பெரிய' என்னும் அடைமொழி தன்மையை யுணர்த்து மென்றலே சிறப்

பதன்றி அளவினை யுணர்த்து மென்றல் சிறவாமையா னும் அது பொருந்தாதெனவிடுக்க.

## நூற் பொருளும் ஆசிரியர் திறமும்

அன்பின் பெருமை வலிமை பயன் இவை அங்கை யினெல்லிபோல இனிதின் விளங்கவும், அற்புதச் சுவை ததும்பி வழிந்தோங்கவும் ஏனைச் சுவைகள் சாங்காங்குத் தோன்றவும் அமைந்த அறுபான் மூவர் நாயன்மார் அருஞ் சரிதை நூற்பொருளென்க அடியார்கள் இப் புராணத்துள் நாயன்மாரென்று வழங்கப் பெறு வர். 'நாயன்' என்னும் வடசொற்குப் பொருள் 'வழிகாட்டி' அல்லது 'நடத்துவோன்' என்பது; வட மொழியில் 'ஸோநாய:' 'அசுவநாய :' முதலிய பிரயோ கங்கள் இருத்தல் காண்க 'மார் விகுதி பெற்று வரு தலின் இது னகரமெய் யீற்றுப் பெயரெனவும், அஃது 'ஆழ்வியார்' 'திருக்கோவையார்' என்புழிப்போல உயர்வு பற்றி வரும் 'ஆர்' விகுதி ஏற்று வருமெனவும், அவ் விகுதி யேற்றுவரினும் வாரா தொழியினும் "திருக் கோயில்' 'திருவாயில்' 'திருவலகு' என்பவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் 'திருநாயனார்' என்றுதது போல வெனக்கொள்க" எனப்பேராசிரியரும், 'நாயனை யடியா னேவுங் காரிய நன்று' என ஆசிரியரும் கூறியவாறு இறைவனையுமுணர்த்தி நிற்கு மெனவும் அறியாது 'நாயனார்' என்பதே சொல்லெனக் கொண்டு 'நாய்போன்றார்' அஃதாவது 'நன்றியறி வுடையார்' எனப்பொருள் கூறுப. அவர் கூற்று வறிதென் றொழிக்க.

அடியார் அருஞ்சரிதை கூறப் புக்கார் அவ் வடியார் பரிபாக நிலையையும் முற்றுணர்வனாகிய பசுபதி அவர் பெருமை உலகிற் குணர்த்தும் வகையையும் அவன் அவர்க்கு அருள் செய்யும் முறையையும் அவன் அவர்க் களித்த பேற்றின் தகுதியையும் இன்னோரன்ன பிற நுண்ணிதி னுண்ணிய பொருள்களையும் நுனித்தறிதலே கைகூடாதாயின் அவையிற்றைப் பிறரறிய வாயிட்டுக் கூறுதலும் ஒன்றாமோ? இதனா லன்றே பெரியாரும்,

கருங்கடலைக் கைநீந்துக் கொளவெளிது ' முந்நீர்க்
கடற்கரையி னெய்மணலை ' யெண்ணியள விடலாம்
பெருங்கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்
டென் றெண்ணிப்
பிரிதெழுதிக் கடையிலக்கம் ' பிரித்துவிட லாகுந்
தருங்கடலின் மீனையள விடலாகும் வானத்
தாரகையை யளவிடலாஞ் சங்கரன்ற டமது
சீரங்கொடிருத் தொண்டர்புரா ணத்தையள விட [நஞ்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கு மரிதே'

என்றும்,

'தூக்கு சீர்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபி ரானெங்கள்
பாக்கி யப்பய னாப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி யிருத்துவாம்'

என்றும் வியந்தனர். பேரறிவாளராகிய ஆசிரியர் அவையிற்றை வாயிட்டுக் கூறுந் திறம் பெற்றது ஈசன்

எடுத்துத் தந்த 'உலகெலாம்' என்னும் வாக்கின் வலிமையா லென்பதொரு பொருளும் மேற்காட்டிய பாவிற் பெறக்கிடத்த லறிக

பற்பல நூல்களிற் சிதறுண்டும் மறைப்புண்டுங் கிடக்குஞ் சீரிய பொருள்களையெல்லாம் ஒருங்கு திரட்டிக் * கட்டி பூசிக் கடு வருத்துவார்போல அடியார் சரித்திர வாயிலாக அறிவுறுத்தலின், இந்நூலை பல்லோர் படிக்கவும் கேட்கவும் இடனாயிற்றென்க அதனால், பூதி சாதன நெறி நின்றதென்றறிக இது பற்றியே,

ஆதிப் பெருமா னடியாரறு பான்மூவர்
நீதிச சரிதையெங்கே நீளெங்கே—யோதிச
செவிக்குமொழி யைநதெங்கே சேக்கிழா னெந்தை
புவிகுவரா லின்றேற் புகல்' என்றதூஉமென் றறிக.

## காலம்

அநபாய சோழனென்பான் முதலாவது குலோத்துங்க னென்ப

'சென்னி யபயன் குலோத்துங்கச்சோழன் றில்லைத் [திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரேறென்றும் [புவிகாக்கு
மன்னா பெருமா னநபாயன் வருந்தொன் மரபின் [முடிசூட்டுந்
தன்மை நிலவு பதியைந்தி னொன்றாய் நீடுந் தகைத் [தவ்வூர்'

---

* இதனை வடநூலார் குளஜிஹ்வாரியாய மென்ப. குளம்-வெல்லம், ஜிஹ்வா-நா.

என்னுந் திருப்பாவு மதனை வலியுறுத்து மென்க.

அவன் காலம் பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியென்று அறிஞர் தக்க ஏதுக்கள் கொண்டு வரையறுத்தனராகலின், ஆசிரியர் காலம் சற்றேறக் குறைய கி-பி-1070 எனக்கொள்க

## (5) நூற் பாயிரம்.

ஈண்டுப் பாயிரமாவது தற்சிறப்புப் பாயிரமாம். தற்சிறப்புப் பாயிரமென்பது தெய்வ வணக்கமுஞ் செயப்படுபொருளும் அடங்கக் கூறுவது; என்னை? 'தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும், எய்த வுரைப்பது தற்சிறப் பாகும்' என்ப தோத்தாகலின் தெய்வவணக்கங் கூறப்புக்க ஆசிரியர் ஏனைச் சைவவாசிரியர் கூறுமாறு விநாயகர் வணக்கங் கூறாது நடேசர் வணக்கங் கூறினர். இது மரபு வழூ வன்றோவென வினவின்; அன்று, ஆசிரியர் சிவகங்கையின் நீராடி ~~அதனை~~ டானை ~~ஜெப~~ முடித்து விநாயகர் ~~சந்நிதிப்புக்~~கு வணங்கி ஏத்திப் பின் நடேசர் ~~சந்நிதி~~ புக்கு நிற்புழி அம்முதலவர் புராணத்திற்கு அடியெடுத்துக் கொடுக்கத் தாம் அவ்வடியினைப் போற்றிக்கொண்டு பாவினை அவர் திருமுன் நிறைத்தமையி னென விறுக்க. பின்னர் ஆயிரக்கால் மண்டபத் திருந்து நூலியற்ற எடுப்புழி,

> ' எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
> நடக்கு மேன்மை நமக்கருள் செய்திட
> தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
> கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்'

எனச் சைவமரபிற் கேற்ப விநாயகர் வணக்கம் கூறி னமை காண்க. இப் பாயிரத் தமைந்த பாக்கள் எல்லா வற்றிற்கும் பொருள் விரிப்பிற் பெருகு மாகலின், இப் பாவொன்றன் பொருளையே ஒருவாறு சுருக்கிக் கூறுதும் :—

பா 1 'உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்'

பொருள் : சீவன் முத்தர் யாவரும் (அருண்ஞா னத்தான்) அறிந்து வைத்தும் (இன்ன தன்மைய னென்று) எடுத்துச சொல்லுதற்குக் கூடாதவனும், பிறை தவழ்ந்து கங்கை நிறைந்த சடையினை யுடைய வனும், அளவில்லாத பேரொளிப் பிழம்பானவனும், சிற்சபைக்கண் ஆனந்த நர்த்தனஞ் செய்பவனும் ஆகிய இறைவனது (உலகெலாம்) விரிதற் கிடமாகிய திருச் சிலம் பணிந்த திருவடிகளை (யாம்) வாழ்த்தி வணங்கு வாம் (என்பது)

அமைதி : வடநூலார் தெய்வ வணக்கத்தை நூற் கு மங்கல மெனவும், அம் மங்கலம் வாழ்த்து (ஆசீர்) வணக்கு (நமஸ்கிரியா) பொருளியல் புரைத்தல் (வஸ்து நிர்த்தேசம்) என முத்திறப்படு மெனவுங் கூறுபவாக லின், இத் திருப்பா இப பெரிய புராணத்திற்கு மங்கல மாய், 'வாழ்த்தி' என்றதனால் 'வாழ்த்தும்' 'வணங் குவாம்' என்றதனால் 'வணக்கும்' 'உலகெலாம்

உணர்ந்தோதற்கரியவன்' 'நிலாவுலாவிய நீர்மலி வேணி யன்' 'அலகில் சோதியன்' 'அம்பலத் தாடுவான்' என்றதனாற் பொருளியல் புரைத்தலு மாயிற் றென்க

அம் மங்கலத்தும் திதியக்கர மாகலின மங்கல வர்ணமெனப்படும் உகரவுயி முதலா னிற்கப் பெறாஉம் 'உலகு' என்னுங் கழிபெருமங்கலமொழி முதன் மொழியாதல் காண்க. 'வாழ்த்தி வணங்குவாம்' என வாக்கு வழிபாடுங் காய வழிபாடுங் கூறினமையின் உபலக்கண மென்னு மிலக்கணம் பற்றி நினைத்தலாகிய மனவழிபாடுங் கொள்க. முதலடி இரண்டாமடி நான் காமடி இவற்றின் முதற்கண் முறையே உகரம், அக ரம, மகரம் ஆகிய பிரணவாங்கங்களை அமைத்திருத் தலறிக. பிரணவும் குருமுகத் தறிதற் குரிய மந்திரமா மாகலின் அதன் உறுப்புக்களை முறை பிறழ வைத் தாரென்க ஈற்றடியில் 'சிலம்பு' 'வணங்குவாம்' இவை யிற்றின் முதற்கட் சிகர வகரங்கள் நிற்றலாற் பஞ்சாக் கர மந்திரமுந் தொடங்கி யிருத்த லுணர்க நாயன் மார்கள் நானெறி நின்றா ரென்பது குறித்தற்கு நாற் சீரடியா னமையுங் கலிவிருத்தத்தி னெடுத்தாரென வும், அவர்களிற் றனியடியார் அறுபான் மூவரும் தொகையடியார் ஒன்பதின்மருமாக எழுபானிருவ ரு ளரென்பது குறித்தற்குப் பதப்பிரிவு செய்து எண்ணி டின் எழுபானிரண்டு எழுத்துக்களா லாமாறு இயற் றின ரெனவுங் கூறுவாரு முளர்.

**சிறப்புரை :** பொருளியல் புரைக்கப் புக்க ஆசிரியர்

சொரூபம் தடத்தம் என்னும் இருவகைப் பதி இலக்கணங்களுள் முதற்கட் சொரூபங் கூற வெழுந்து ' உலகெலா முணர்ந் தோதற் கரியவன் ' என்றார். எனவே, பரமபதி அகண்டாகாரநித்த வியாபகன் என்றபடி யாயிற்றென்க

'மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னி னல்லா
னொப்புடைய னல்ல னொருவ னல்ல
னோரூர னல்லனோ ருவம னில்லி
யப்படியு மந்நிறமு மவ்வண் ணமு
மவனருளே கண்ணாகக் காணி னல்லா
லிப்படிய னிந்நிறத்த னிவ்வண் ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே'

எனக் குருநாதன் பணித்தவாறு சீவன் முத்தர்களும் பசு கரணங்களெல்லாம் பதி கரணங்களாக மாறி அவனோடு அத்துவிதமாய் நிற்கு நிலையி லச் சொரூப சிவனை யுணர்வரே யன்றிக் கணபோது அந் நிலையிற் பிரிந்து பிரபஞ்ச நோக்குறின் அச் சிறுபோதும் அவனை உணர்தலுஞ் செல்லாது; செல்லின், "யதாகாரீ யதாசாரீ ததா பவதி"-பிருகதாரண்யகோபநிஷத்-எவரெதனைச் செய்கின்றனரோ எவரெதனை ஆசரிக்கின்றனரோ, அவர் அஃது ஆகின்றனர், "ஸர்வே தர்மா ஆத்மநஸ் ஸந்தி" ஸர்வக்ஞானோத்தராகமம்-எல்லாத் தருமங்களும் ஆத்மாவுக்குள-என்றவாறு உயிர் சார்ந்ததன் வண்ணமாய் நிற்பது என்னும் இலக்கணஞ் சித்தியாது அவனியல் புணர்தல் அவ்வழிக் கூடாதாக அதனை

ஓதல் யாங்ஙனம்? ஆகலின் உணர்தலும் உணர்ந்த வாறு ஓதலுங் கூடாவாயின ~~கூறாது பரமாசாரியா~~ திருக்கோவையாரில 'உணர்ந்தாக் குணர்வரியோன்' என்றதற்கு மிதுவே திருப்பரிய தென் றுணர்க இங்ஙன மன்றிச் ~~சகிதமும்~~ ஞானத்தான் ஒருகாலேனும் உணர்தற் குரிய னெனின், 'அகண்டன' என்னும் இயலபிலனும் இறையலனும் முடிவன். அற்றாக, 'உலகெலாம் உணர்தற்கும் ஓதற்கும அரியவ' னென்றும், பேராசிரியருரையைப பின்பற்றி 'ஒருகால் தன்னை யுணாநதவாகட்குப் பின்னுணர்தற்குக் கருவியாகிய சித்தவிருத்தியு மொடுங்குதலான், ஓதற் கரியவன்' 'தவத்தானுந் தியானத்தானும் எல்லாப பொருள்களையும் முணர்ந்தவர்க்கும் ஓதற்கரியவ' னென்றும் பொருந்தா வுரை வரைந்து போயினா ஒரு சிலர் அது நிற்க, மேல் நடத்தங் கூறப்புக்க ஆசிரியர் அது சரியையர், கிரியையா, யோகியராகிய மூவர்க்கும் முறையே தோன்றும் சகளம், சகளநிஷ்களம், நிஷ்களம் என்னும் மூன்றாகலின் அம் மூன்றையுங் குறித்தற்கு 'நிலவுலாவிய நீர்மலி வேணியன்' 'அம்பலத் தாடுவான்' 'அலகில் சோதியன்' என்றார் என்னை? 'நீாமலி வேணிய' னென்பது மான் மழு சதுர்ப்புஜ காளகண்ட திருநேத்ர சகித சகள வடிவத்தையும்,"

> 'சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
> ஆர்க்கும யகர மபயகரம்—பாாக்கிலிறைக்
> கங்கி நகர மடிக்கீழ் முயலகனா
> தங்கு மகரமதுதான்'

ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடு
மகர முதரம வளர்தோள் சிகரம்
பகருமுகம வாமுடியப் பார்'

என்றவாறு 'அம்பலத்தாடுவான்' என்பது மந்திரவடிவமாகிய சகள நிஷ்கள வடிவத்தையும் 'அலகில் சோதியன்' என்பது நிஷ்களவடிவத்தையும் தெரித்தலின் மந்திரம் சகளநிஷ்களமாமாறு யாங்ஙனமெனின் வரிவடிவஞ் சகளமும் ஒலிவடிவம் நிஷ்களமுமாமென்க

இனி, 'நிலவுலாவிய' 'நீர்மலி' என்னும் அடைமொழிகண் முறையே தக்கசாபத்தின்படி ஒவ்வொரு கலையாகத் தேய்ந்து ஒற்றைக் கலையோடு நின்ற சந்திரன் காலின் விழ அவனைத் தலையின் வைத்த பேரருளுடைமையையும், உலகம் யாவும் அழிக்கவெழுந்த கங்கையைக் கண்டஞ்சிப் பிரமாதி தேவர்கள் சரண்புக, அவ்வாபத்திற் றலைகொடுத்துத் தாங்கிய அளவிலாற்றலுடைமையையுந் தெரித்தலின்,

'எட்டுக் கோலாமவ னீறில் பெருங்குணம்'
'எண்குணத்தான், றாளை வணங்காத் தலை'

என்றவாறு ஈசர்க்குரிய எண்குணங்களாகிய தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை ஆகிய இவற்றின் ஏனை ஆறினையும் உபலக்ஷணத்தாற் கொள்க 'உலகு' 'நீர்' 'சோதியன்' 'ஆடுவான்' 'சிலம்பு'

இம் மொழிகள் முறையே நிற்றலின்; (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்) ஆகிய பஞ்சபூதமும் அவன் வடிவங்களே என்பது குறிப்பினுணர்த்தப்பட்ட தென்பாருமுளர் அவர் சிலம்பு நாதத்தையும் நாதம் அதன் குணியாகிய ஆகாயத்தையும் உணர்த்திற் றென்ப.

இலக்கணம்: 'உலகெலாம்' என்னுந் தொடர் பின் ஈரிடத் தியைந்து பொருளை விளக்குதலின் இது முதல்விளக்கணி 'உணர்ந்து' என்புழி உம்மை தொக்க தென்க 'அரியவன்' எனபுழி அருமை இன்மை குறித்தது மலர்சிலம் பென்றேனும், மலரடி யென்றேனும் முடிவு செய்க 'வணங்குவாம்' என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை முற் றென்க.

## செய்யுணலம்

'புவியினுக்கணியாயான்ற பொருடந்து புலத்திற்றாகி
யவியகத் துறைகள் டாங்கி யைந்திணை நெறிய [ளாவிச
சவியுறத் தெளிந்து தண்ணென் ரொழுக்கமுந் [தழுவிச சான்றோ
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் [கண்டார்'

எனக் கம்பரும்,

கல்லார் கவிபோற் கலங்கிக் கலைமாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பலவான் றுறைதோன்ற வாய் [ந்தது

செல்லாறு தோறும பொருளாழ்ந்து தெளிந்து [தேயத்
தெல்லாரும வீழ்ந்து பயன்கொள்ள விறுத்த [தன்றே'

எனப் பரஞ்சோதிமாமுனிவருங் கூறிய பா வியல்புகள் நமது ஆசிரியர் பாக்களின் அமைந்துள வென்றல் யாவர்க்கும் ஒபபமுடிந்த தொன்றே அஃ தொரு புறமிருக்க, படிப்போர்க்கும் படித்துப் பொருள் விரிக்கக் கேட்போர்க்கும் ஒருணர்ச்சியை யெழுப்பிப் படிக்குந் தோறும் கேட்குந் தோறும் பின்னும் புதிதாய் இன்பந் தருவனவே பாக்களாம் பெரிய புராணப பாக்களும் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் அவ்வா றொருணர்ச்சியை யெழுப்பிப் படிக்குந்தோறும் பின்னும் புதிதாய் இன்பந் தருவனவேயாம் இருப்புக்கடலை போறன்றனவும் வழங்கு முறை போன்றனவும் பாக்க ளாகா. இப் பாக்களோ கதலீபாகமாய்ப படிக்கப படிக்க வாய் மணபபனவாம் சொல்லும் பொருளுந் தேடி வருந்தி இடர்ப்பட்டியற்றின பாக்க ளாகா இப பாக்கள் சொல்லும் பொருளுந் தேடி யடைந்து எதிர் நிற்ப ஆசிரியர் அவற்றுள் வேண்டுவ கொண்டமைத்தனவா மென்பதனைப் பாவாணர் ஒருவரும் மறு ரென்க எனவே, தொகுத்துக் கூறின், இப் பாக்கள் சுருங்கிய சொல்லும் நெருங்கிய பொருளும் நல்லோசையும் பெற்றனவாய், செறிவு தெளிவு முதலிய குணங்களுந் தன்மை உவமை முதலிய அணிகளும் நன்கமைந்தனவாய்,மேன்மேல் நயந் தோற்றி இன்பம் பயப்பனவாய், சுவை மலிந்தனவாய்,

செம்பாகம் பொருந்தினவாய், இயல்பி னியன்றனவா யுள்ளன இவை இந்நூற்கேயன்றி நல்லிசைப் புலவ ரியற்றிய நூல்கள் எவற்றிற்கும் உரியனவேயாம்.

---

## 1. சிறப்புச்செய்கைகள்.

பெருங்கவிக ளியற்றிய நூலக ளெல்லாவற்றினும் காணபபடும் மேறகூறிய இயல்க ணிறப, ஒவ்வொரு நூலினும் சிறபபுச செய்கைகளும் பல வுண்டு கம்ப ராமாயணத்திற் காணப்படும் இச சிறபபுச் செய்கை களேயே கம்ப சித்திரமெனவுங் கம்பசூத்திர மெனவும் புகழ்ந்து கூறுப அஃதொப்பவே, இந் நூலினும் பல சிறப்புச் செய்கைக ளுள அவற்றின் எஞ் சிற்றறிவிற் கெட்டின சிலவற்றை யோராற்ருன் முறைப்படுத்துக் கூறுதும்:

### (1) முன்னேன் வாக்கினை முவிடத் தமைத்தல்

ஈசன் திருவருட் டிறத்தைத் தாம் மறவாமை குறி த்தும், பிறர்க்கும் அறிவுறுத்தல் வேண்டியும், நூற்குக் கடவுட் டன்மை மிகுதல கருதியும் அவன் அடியெடுத்து அருளிய 'உலகெலாம்' என்னுந் தொடரினை முதற் கண் வைத்ததே யன்றி,

> சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
> மீது தாழ்ந்துவெண் ணீற்ரொளி போற்றிநின
> ருதி யாரரு ளாதலி லஞ்செழுத
> தோதி யேறின ருய்ய வுலகெலாம்'

என நூற்கு நடுவேனும்,

‘என்று மின்பம் பெருகு மியல்பினே
டொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்’

என அதற்கு ஈற்றினும் வைத்தன ரென்க

(2) முன்னோர் நூல்களை யடியொற்றல்.

ஆசிரியர் ‘திருத் தொண்டத் தொகை’ என்னுந் தொகைநூற் பெயரைக் கொண்டு தம் நூற்குத் ‘திருத் தொண்டர் புராணம்’ என்னும் பெயர் வைத்து, அத் திருத் தொண்டத்தொகை பதினொரு பாசுரங்கள் கொண்ட தாகலின் தம் நூலைப் பதினொரு சருக்கங்க ளாகப் பாகுபடுத்து அப் பாசுரங்களின் ஆதியைக் கொண்டு அச் சருக்கங்களுக்குத் ‘ தில்லைவா ழந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், மும்மையா லுலகாண்ட சருக்கம் முதலிய பெய ரமைத்து வகைநா லுடையா ராகிய நம்பியாண்டார் நம்பிகள் ஒவ்வொரு பாசுரத் தினும் அடங்கின நாயன்மார்கள் அருஞ்செயலைக் கூறி முடித்ததுஞ் சுந்தர மூர்த்தி நாயனர் வணக்கங் கூறு தல் போலவே, தாமும் ஒவ்வொரு சருக்கத்தி னிறுதி யிலும் அந் நாயன்மார் சரிதம் கூறி முடித்ததும் அவ் வாசிரியர் வணக்கங் கூறினர் இன்னும் ஆளுடைய நம் பிகள் நாயன்மாருக்குத் தந்த அடை மொழிகளையும் பினபற்றி அவற்றிற்குத் தகத் தாமும் மேம்பாடு கூறு கின்றார். அதற் கெடுத்துக்காட்டாக ஓரிடங் காட்

டுதும்' கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்பர்க் கடியேன்' என்றவழிக் காணும் 'கலைமலிந்த சீர்' என்னு மடைமொழிக்கு 'விற்கலை முதலிய நிறைந்த சீர்த்தியுடைய' என்றும், 'ஒருகலையு மோதில னேனும் எல்லாக் கலைகளும் நிறைந்த சீர்த்தியுடைய' வென்றும், 'கலைபோல விரிந்த சீர்த்தியுடைய' வென்றும் பொருள் கூறற் கிடமுண்டாயினும் 'சந்திரனை யொத்த சீர்த்தியையுடைய' எனப் பொருள் கொண்டு அதற்கேற்ப,

'ஆனவத் திங்கள் செல்ல வளவில்செய் தவத்தி னாலே
பான்மதி யுவரி யீன்ற தெனமகப் பயந்த போது'

என்றும்,

'வண்ணவெஞ் சிலையு மற்றப் படைகளு முரைக் கற்றுக்
கண்ணுறு கன்சாயல் பொங்கக் கலைவளர் திங்க ளேபோ
லெண்ணிரண் டாண்டின் செவ்வி யெய்தினா ரெல்லை யில்லாப்
புண்ணியந் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு போல்வார்'

என்றும் உரைத்தா ரென்றறிக அதனொடு அமையாது தம் நூலகத்தும்,

'கலை மலிந்த புகழ்க் காழிக் கணநாதர் திருமுரைப்பரம்' என அவ் வடைமொழியினைப் போற்றி அமைத்துக் கொண்டமை காண்க. மேலும் நக்கீரதேவர்

நாயனா ருளிய 'திருக்கண்ணப்ப தேவர் திருமறம்' என்னும் நூலின்கண்,

> 'நில்லு கண்ணப்ப நில்லுகண் ணப்பவென்
> னன்புடைத் தோன்ற னில்லுகண் ணப்பவென்
> றின்னுரை யதனொடும்'

என்றவழி 'நில்லுகண் ணப்ப' வென்பதனை மும்முறை யடுக்கியது நோக்கியும் 'இன்னுரை' யென்பதனை நோக்கியும் ஆசிரியர்,

> 'செஙகண்வெள் விடையின் பாகர் திண்ணனார் தம [மை யாணட
> வஙகணர் திருககா ளததி யற்புதர் திருககை யன்பா
> தஙகணமுன் னிடக்குங கையைத தடுககுமுன் றடு [க்கு நாக
> கங்கண ரமுத வாக்குக் கண்ணப்ப நிற்க வென்றே'

எனனுந் திருப்பாவின் மூன்றடுக்கு எனவும், அமுத வாக்கு எனவுங் கூறியது அருளாளர் கருத்தினின்றும் அவர் அனுவளவும் பிறழாமைதெரிதது நின்றதென்க. இனி, 'தங்கண்முன் னிடக்குங் கையைத் தடுக்குமுன் றடுக்கு நாக,கங்கண ரமுத வாக்குக் கண்ணப்ப நிற்க வென்றே' என்னும் பாட[illegible] கூறுவாரு முளரா லோ வெனின், அப் பாட[illegible] சிறவா தென் றொழிக்க.

## (3) தேவாரப்பதிக முதற்குறிப்புடன் அப்பதிக மருளிச்செய்த சந்தர்ப்பங் கூறல்.

சமயாசாரிய சுவாமிகள் ஒரு தலத்திற் பல பதிகங் களோதி யிருக்கக் காண்கின்றோம். ஆயினும் இன்ன

இன்ன சந்தர்ப்பத்தில் இன்ன இன்ன திருப்பதிகம் ஓதபபெற்றதென அறிதல் நமக்குக் கூடாது ஆசிரியர் அவ் வத் திருப்பதிக மோதிய சந்தர்ப்பத்தை இனிது விளக்கினர். இதற்குச சில உதாரணங் காட்டுதுங் காண்க:

சுந்தரமூர்த்தி நாயனர் திருமுதுகுன்றிற் பன்னீ ராயிரம் பொன் பெற்று அவற்றை மணிமுத்தாற்றிட்டுத் திருவாரூ ரடைந்து பரவைநாய்ச்சியார்க்கு அச செய்தி யறிவித்து அப் பன்னீராயிரம் பொன்னைக் கோயிலின் மேலைக் குளத்தி லெடுத்துத் தருதுமென அவரை அழைத்துச் சென்று குளத் திறங்கித் தடவுதலும் பழமலைநாதர் நாயனர் பாடல் விரும்பி விளையாட்டாக அப் பொன்னை அங்கண் வருவியாதிருப்ப அது கண்டு பரவையார் பரிகாச வார்த்தை சொல்ல அச சந்தர்ப்பத்தில் அங்கிருந்த வண்ணமே பழமலை நாதரைப் பாடியது 'பொன் செய்த மேனியினீர்' என்னுந் திருப் பதிகமெனவும், திருவேகம்பதஐெந்தையை இறைஞ்சி அப் பெருமான் மலைவல்லி தனச்சுவடும் வளைத்தழும் பும் திருமேனியில் தோற்று திருபபதிகம் பாடி யாடிப் பரவசராய்ப் பணிந்த நாயனர்க்குப் பெருமான் உமா பதிசுரூபத்தைக் காட்டுதலுங் கண்டு மகிழ்ந்து அங்குச் சிலநாள் தங்கித் திருவாரூரைத் தரிசிக்க வேண்டும் என்னும் ஆதரம் பெருக அவ்வழிப் பாடியது 'அந்தியு நண்பகலும்' என்னுந் திருப்பதிக மெனவுங் குறித்தமையை

"நீற்றழகர் பாட்டுவந்து. திருவிளையாட் டினினின்று
மாற்றறுசெம் பொன்குளதது வருவியா தொழிந்
[தருள
வாற்றினிலிட் டுக்குளததிற்றேடுவீ ரருளிதுவோ
சாற்றுமெனக் கோற்றொடியாா மொழிந்தருளத்
[தனிததொணடர் "

"முன்செய்த வருள்வழியே முருகலாபூங குழற்
[பாவை
தன்செய்ய வாயினகை தாராமே தாருமென
மின்செய்த நூன்மார்பின் வேதியர்தா முதுகுன்றிற்
பொன்செய்த மேனியினீ ரெனப்பதிகம் போறறி
[சைத்து"

"மாமலையாண முலைசசுவடும் வளைத்தழுமபு மணா௩த
[மதிப்
பூமலிவார் சடையாரைப் போற்றியரு ளதுவாகத்
தேமலர்வாா பொழிற்காஞ்சித் திருநகரங கடந்த
[கல்வார்
பாமலர்மாலைப்பதிகர் திருவாரூர் மேற்பரவி "

" அந்தியுநணபகலுமெனவெடுத்தார்வத்துடனசைவா
லெந்தைபிரான் றிருவாரூ ரென்றுகொலெய் துவ
[தென்று
சந்தவிசை பாடிப்போய்த தாங்கரிய வாதரவு
வந்தணைய வன்பருடன் மகிழ்ந்துவழிக் கொள்கின்
:"

என்னும் பாக்களாற் றெரிந்துகொள்க. ஸ்தாலீ புலாக நியாயம் பற்றி இரண்டோ ருதாரணங்களை ஆங்காங் தக் கூறுதுமெனினும், இன்னும் அத்தகைய பலவுண்டு,

அவற்றைக் கூற்றுத் தெளிக (பின்வருவன எல்லாவற்றிற்கு மிஃதொக்கும்)

திருவாரூர்த் திருக்குளத்திற் பொன் பெறுது திருப் பதிகம் பாடுகையில் எட்டுப் பாசுரங்களோதியும் பொன் வெளித் தோன்றிற்றில்லையாக ஒன்பதாவது பாசுரம் பாடியவுடன் அஃதெழுந்ததெனவும், திருமறைக் காட்டின் ஆளுடையவரசு திருக்கடைக்காப்பினுள்,

இரக்கமொன்றிலீர் எம்பெருமானீரே'

எனப் பாடி யிறைஞ்சும் வரையும் திருக்கதவந் திற வா திருந்து திறப்பவும் ஆளுடைய பிள்ளையார் எடு த்த பாசுரத்து 'இதுநன் கிறைவைத் தருள் செய்த வெனக்குன், கதவந் திருக்காப்புக் கொள்ளுங்கருத் தாலே' என்னலும் உடன் திருக்காப்புச செய்ததெனவும், திருமயிலையின்கட் சிவநேசச் செட்டியார் பாவை என் பினைப் பெண்ணுருவாக் காணத் திருப்பதிக மோதப் புக்கு முதற் பாசுர மோதிய வளவில் என்பு பெண்ணு ருப் பெற மேல் எட்டுப் பாசுரங்களோதிய வளவில் அப் பெண் பன்னிரண்டாண்டு நிரம்ப, பத்தாம் பாசுர மோதிய வளவிற் குடமுடைந்து பாவை வெளித் தோன்றப் பின்னர்த் திருக்கடைக்காப்பு விரித்தா ரெனவும் வரையறை செய்தல்,

இட்டளத்தை யிவளெதிரே கொடுத்தருளு மெனுந் [திருப்பாட்

டெட்டளவும் பொன்காட்டா தொழிந்தருள வேத் [துவார்'

'ஏத்தாதே யிருந்தறியே னெனுந்திருப்பாட் டெவ்
[வுலகுங
காத்தாளு மம்பலத்துக் கணைஞுளனுங் கண்ணுதலைக்
கூத்தாதந் தருளாயிக் கோமளத்தின் முன்னென்று
நீத்தாருந் தொடாவரிய நெறிநின்றார் பரவுதலும்''

தெண்ணீ ரணிந்தார திருக்காப்பு நீக்கத் தாழ்க்கத்
[திருக்கடைக்காப்
பெண்ணீரக்க மொன்றில்லீ ரென்று பாடி யிறை
[ஞ்சுதலும்''

வேத வனத்தின் மெய்ப்பொருளி னருளால் விள
[ங்கு மணிக்கதவங்
காத லன்பர் முன்புதிருக் காப்புநீங்கக் கலைமொழிக்
[கு
நாதர் ஞான முனிவருடன் றொழுது விழுந்தார்
[ஞாலத்து''

சணைபை யாளுந் தமிழ்விரகர் தாமுந் திருநா வுக்க
[ரசர்
பணையின் மொழிந்த வுரைகொண்டு பதிகம் பாடு
[மவ்வளவிற்
கணைபொற் பலமைந்த நுதற்கான கண்ட ருளாற்
[கடிதுடனே
திணைபொற் கதவுத திருக்காப்புச் செய்த தெடுத்த
[திருப்பாட்டின்''

'எடுத்த பாட்டினில் வடிவ்பெற் றிருநான்கு திருப்
[பாட்
டடுத்த வமமுறைப் பின்னிரண் [illegible] வணை
[ந்து

தொடுத்த வெஞ்சமண பாட்டினிற் றேன்றிடக்
[கணடு
விடுதத வேட்கையர் திருக்கடைக் காப்புமேல்
[விரித்தார்'

என்னும் பாக்களாற் பெறபபடுதலின் இன்ன தேவாரப
பாசுரம் இன்ன பயத்த தென்றலும் ஆசிரியரது செய்
கைகளி னென்றென் றுணர்க

(4 தேவாரப் பாசுரங்கட்குச் சொற்பயன் விரித்தல்.

சீகாழித் திருப்பதியிற் பிரமதீர்த்தக் கரைமேற்
பிள்ளையார் உமையம்மையார் ஞானப்பா லூட்ட வுண்டு
நிற்கையிற் செபமுடித் தெழுந்த அவர் திருத்தாதையார்
'எச்சின் மயங்கிட வுனக்கீ திட்டாரைக் காட்டு' என்று
அச்சுறுத்துழி ஒரு திருக்கை விரற் சுட்டி,

'தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்
[மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி யென் னுள்ளங்கவர்
[கள்வ
னேடுடைய மலரான் முனைநாட் பணிந்தேதத வருள்
[செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே'

என்னுந் திருப்பதிக மருளிச் செய்தனர்.

தமிழ்மறை யோதப்புக்க பரமாசாரியர், 'தோடு
டைய செவியன்' என்று தொடங்கியதன் உட்கிடை
தெரிப்பான்,

"எல்லையிலா மறைமுதன்மெய் யுடனெடுத்த வெழு
[துமறை
மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரை
[சிறப்பப்
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பாற்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச
[சிறப்பித்து"

என்றமை நோக்குக. இத் திருப்பதிகத்துப் பாசுரங் களுண் மற்றுஞ் சிலவற்றிற்கும் உட்கிடை கூறுதல் காண்க

பாண்டி நாட்டைச் சமணக் காடு மூடியவழிப் பாண்டியனும் அவ்வழிப்பட்டான் அவன் மனைவி யார் மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் எஞ்ஞான்று மீள்வன்? எங்ஙனம் மீள்வன்? என்றி ருக்கையிற் பிள்ளையார் திருமறைக்காட்டின்கண் எழுந் தருளினமை கேட்டு நாடு கெட்ட கேட்டைத் தெரி வித்து அவரை மதுரைக் கெழுந்தருளவித்தனர். அங் கண் ஒரு மடத்திற் பிள்ளையார் எழுந்தருளியிருந்த செய்தி யறிந்த சமணர்கள் அம் மடத்திற்குத் தீ வைப் பப பிள்ளையார் அது கண்டு,

"செய்ய னேதிரு வாலவாய் மேவிய
வைய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே"

எனத் திருப்பதிகம் ஓதி யருளினர் ஈண்டுப்

'பையவே சென்று' என்றதன் நோக்க மின்ன தென்று தெரிப்ப,

"பாணடிமா தேவியாா தமது பொற்பிற யயிலுநெடு
[மங்கலநாண பாது காத்து
மாண்டகையார் குலசசிறையா ரன்பினுலு மரசன்
[பா லபராத முறுத லாலு
மீணடுசிவ நெறியடையும் விதியி னுலும் வெணணீறு
[வெப்பகலப் புகலி வேந்தா
தீணடியிடப் பேறுடைய ஞதலாலுந் தீப்பிணி
[யைப் பையவே செல்க வென்றா

எனப் 'பையவே' என்னுஞ் சொற்குப் பயன் விரித்த னர். 'பையவே' என்னுக்கால் பாண்டியன் உடனே இறந்து பட்டிருப்பானெனக் குறித்தமை யுணர்க அங்ஙனம், 'பையவே சென்று பாண்டியற்காகவே' எனப் பிள்ளையாரருளிச் செய்தவுடன் அவ் வழல் பாண் டியனைச் சுரநோயாக மேவ அமணர் அது தீர்க்க என்ன என்னவோ முயற்சிகள் செய்தும் ஒன்றேனும் பலித்தி லது. பின்னர்ப் பிள்ளையார் எழுந்தருளி அவனைத் தமது திருக்கையாற் றடவுதலும் அந் நோய் நீங்கி உடல் குளிர்ந்தான். அதன்மேற் பிள்ளையார் சமணர்களைக் கனல் வாதத்தின் வென்றார். அவர்கள் அப்போதும் வாளா தொழியாது 'புனல் வாதஞ் செய்தும்' எனப் பிள்ளையாரும் அதற் கிசைந்து ஏட்டி லொரு திருப்பதிக மெழுதி வையையாற்றின் எதிரேறவிட்டனர். அத் திருப்பதிகத்துப் பாசுரங்கட் கெல்லாம் ஆசிரியர்

சொற்பயன் விரித்தார். அவற்றையெல்லாம் ஈண்டுக் கூறின் நூல் பெருகுமாகலின்,

1 ‘ வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே ’ ’

என்னும் முதற் பாசுர மொன்றற்கே அவர் விரித்த சொற்பயன் கூறுதும் :—

வேட்போராகிய அந்தணரும் அவர் வேட்டலையும் அவி கொண்டுண்டு பசி தீரும் வானவரும் வேட்டற்கின்றியமையாத உபகரணங்க, ளுதவும் ஆனினமும் உலகின்கண் நிலைபெறுக வென்பார் ‘வாழ்க வந்தணர் வானவரானினம’ என்றுரெனவும், அங்ஙனம் வேள்வி பல்கவே, ‘வேள்வி நற்பயன் வீழ்புன லாவது’ என்பதற் கொப்பச் சிவார்ச்சனைக்கு நல்லுறுப்பாகிய மழை பெய்க வென்பார் ‘வீழ்க தண்புனல்’ என்றுரெனவும், அந்தணரையும் ஆனினத்தையும் வேள்வியையுங் காத்தற்குரியான் அரசனாகலின அவன் மேம்படுக வென்பார் ‘வேந்தனு மோங்குக’ என்றுரெனவும், பிறசமயங்கள் யாவும் அழிக வென்பார் ‘ஆழ்க தீயது’ என்று ரெனவும், உயிர்கள் யாவையும் அஞ்செழுத்து ஓதிச் செழிக்க என்பார் ‘எல்லா மரன பெயர் சூழ்க’ என்று ரெனவும், உலகத்தார் இம்மை மறுமைத் துன்பங்களைக் கெடுக்க வென்பார் ‘வையக முந்துயர் தீர்கவே’ என்று ரெனவுஞ் சொற்பயன் விரித்தமை,

"அந்தணர் தேவரா னினங்கள் வாழ்கவென்
றிந்தமெய்ம் மொழிப்பய னுலக மின்புறச்
சந்தவேள் விகண்முதல சங்க ரர்க்குமுன்
வந்தவாச சனைவழி பாடு மன்னவாம்"

"வேள்வி நற்பயன் வீழ்புன லாவது
நாளு மர்ச்சனை நல்லுறப் பாதலா
லாளு மன்னனை வாழ்த்திய தர்ச்சனை
மூளு மற்றிவை காக்கு முறைமையால்"

"ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே" ...

"ஆழ்க தீயதென் றோதிற லயனெறி
வீழ்க வென்றுவே றெல்லா மானபெயா
சூழ்க வென்றது தொல்லுயிர் யாவையும்
வாழியஞ் செழுத் தோதி வளரவே"

சொன்ன வையக முந்துயர் தீர்கவே
யென்னு நீர்மை யிகபரத் திற்றுயர்
மன்னி வாழுல கத்தவர் மாற்றிட
முன்னர் ஞானசம் பந்தர் மொழிந்தனர்"

என்னுந் திருப்பாக்களாற் றெளிக

## (5) பிறர் மத மறுத்தல்

'தோடுடைய செவியன்' என்னுந் திருப்பாசுரத்து 'ஏடுடைய மலரான் முன்னாட் பணிந்தேத்த வருள செய்த' என ஆளுடைய பிள்ளையார் முற்பிறப்பிற் றாம் மலர்கொண் டருச்சித்து வணங்கி ஏத்தத் தமக்குப் பெருமான் அருள்செய்தமை சாற்றின ரென்பர் ஒரு சாரார் அவர் 'முன்னாள்' என்பதற்கு 'இதற்கு முற்பிறப்பில்' என்னும் பொருள் வலிந்துகொள்வ தொன் றென்

பதையும், 'மலராற் பணிந்தேத்த' என்னும் முடிபு நேரிதன றென்பதையும், இத் திருப்பதி பிரமபுர மென வும் அதன்கண் தீர்த்தம் பிரமதீர்த்தம் எனவும், அதன் கட் பெருமான் பிரமேசனெனவும் பேசப்படுதலின் ஈண்டு 'மலரான்' எனனுஞ் சொல் பிரமனை யுணர்த்து மென்றலே பொருத்தமுடைத் தென்பதையும் நோக்கி லர்போலும் பிள்ளையார் சிவகுமாரா திருவவதாரமல்லர்; சாம்சித்தரே யாவ ரென்னுந் தங் கொள்கையை நிறுத்து தற்கு இவர் இத்தகைய அபார்த்தங் கூறி அவல முறுவா

நமபியாண்டார் நம்பிக ளருளிச் செய்த 'திரு ஞான சம்பந்தர் திருமும்மணிக்கோவை' யுள்,

'காழி நாடன் கவுணியா தலைவன்
மாமழை நோககி மலைமகள் புதல்வன்'

எனவும்,

'பொறபமர் தோளா நற்றமிழ் விரக
மலைமகள் புதல்வ கலைபயி லுவ'

எனவும் புணித்தவாறு ஆசிரியர் பிள்ளையாரை அரனார் திருமகனரவதாரமேயென அறிவுறுத்த வேண்டி,

'கருத்துமுடிந் திடப்பரவுங் காரிகையார் மணிவயிற்றி லுருதெரிய வரும்பெரும்பே றுலகுய்ய வுள்தாக'

எனவும்,

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY

'பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்
(பரமர்
மணந்தவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்
(தருளத்
தொண்டினிலே தரவருவார் தொடாந்தபிரி வுணர்
(வொருகாற்
கொண்டெழலும் வெருக்கொண்டாற் போலமுவா
(குறிப்பயலாய்'

எனவும்,

'அன்ப ரீட்டங் களிசிறப்ப வாண்ட வரசுஞ் சிவக்
[கன றும்'

எனவும்,

'இந்த மாநிலத் தின்னருணீங்கிட
வந்த வைதிக மாமணி யானவா
சிந்தை யாரமு தாகிய செஞ்சடைத்
தந்தை யார்கழ ருழ்ந்தெழுந் தேகினர்'

எனவும்,

'ஈசர் மிழலை யிறையவர்பா லிமையப் பாவை திருமு
[லைப்பால்
தேச முய்ய வுண்டவர்தாந் திருமா மகனு ராதலி
[னாற்
காசு வாசி யுடன்பெற்றார் கைத்தொண் டாகு மடி
[மையினால்
வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்'

எனவும் மொழிந்தன ரென்க.

## ௐ புராண கதைகளை இயைத்தல்.

'யாதவன்றவ ரைக்கிறை யாகிய
மாதவன்முடி மேலடி வைத்தவன்
பூதநாதன் பொருவருந் தொண்டினுக்
காதி யந்தமி லாமை யடைந்தவன்'

என்றார் இதன்கண், உபமந்யு கண்ணனுக்குச் சிவதீக்ஷை செய்த கதை யுளது அக் கதை யென்னை யெனின், கண்ணன் சிவார்ச்சனை செய்த மலர்கள் ஆற்று நீரின் மிதந்து போகையில், உபமந்யு அவற்றை எடுத்துச் சென்று அவற்றைக் கொண்டு சிவார்ச்சனை செய்யக் கண்ட கண்ணன் வியந்து உபமந்யுவை யணுகி, 'அடிகாள்! இஃதென்ன? நின்மாலியங்களைக் கொண்டு சிவார்ச்சனை செய்தீரே' என்ன, அதற்கு அவர் 'அவை நின்மாலியங்களாகா; சிவதீக்ஷை பெறாத நீ யருச்சித்தவை யாகலின்' என்றார் அது கேட்டு, 'ஐய! அங்ஙன மாயிற் சிவதீக்ஷை செய்க' எனப் பணிந்து நிற்ப, அவர் பக்குவங் கண்டு சிவதீக்ஷை செய்தன ரென்பதாம்.

இனி, 'அந்த மிலாமை யடைந்தவன்' என்பது சிரஞ்சீவி பதம் பெற்றவன் 'என்னும் பொருட்டு. இங்ஙனங் கூறியதற்கு ஆதாரம் யாண்டுள தெனின், வாயு சங்கிதையிலுள தென்பதாம்.

வாயுசங்கிதைக் கதை: பாற்கடலைப் பெறுதற்குப் பெருமானை நோக்கித் தவம்புரிந்த உபமந்யுவைப் பெருமான் பிராட்டிபாற் றந்து 'இஃதுன குழந்தை' என்றவளவிற் பிராட்டி அக் குழவியின் சிரமேற் றிருக்கரம்

வைத்து 'நீ சிரஞ்சீவி பத முறுக' என்றனை னென்பது. இதனை,

பணிந்த வவனை யுழைக்கூவி யுச்சி மோந்து பர
[மேட்டி
பிணங்கு விழிமா தினைநோக்கி யுன்றனை பிள்ளை
(யிவனென்ன
வணங்கு மருங்குன் மற்றவளு மலாக்கையவன்றன்
(றலைமேல்வைத
துணங்கி யிறவாப் பதந்தன்னை யடைதி யென்ன
(வுதவினளால்'

என்னும் வாயுசங்கிதைச செய்யுளா னறிக

இன்னும்,

'வானவ ருயய வேணடி மறிகட னஞ்சை யுணடீர்
தானவா புரஙகள் வேவ மூவரைத தவிாததாட்
(கொணடீர்
நான்மறைச சிறுவாக் காகக காலனைக் காய்ந்து
(நட்டீர்
யான்மிசை யுமக்கின ரூறு லென்செய்வீர் போதா
(தென்றா'

என்றார்

இத் திருப்பாவின் முதலடியினும் மூன்றாமடியி னும் அமைந்த ~~விட~~முண்ட கதையும் காலனைக் காய்ந்த கதையும் ~~பிரசித்த மானவை~~ இரண்டாமடியின் அமைந்த கதை கூறுதும்:

பொன், வெள்ளி, இரும்பு ஆகிய இவற்றா லாகிய மூவரணங்களி லிருந்து யாண்டும் அவற்றோடு பறந்து

சென றிறங்கி உயிர்களுக்குக் கேடிழைத்த தாருகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி என்னும் மூவசுரர் சிவபத்தியிற் சிறந்தமையின் ஊறின்றி வாழ்க்கையில் அவர்கள் கொடுமை பொறாத தேவர்கள் திருமாலுழைச் சென்று அதை விண்ணப்பிக்க, அத் திருமால் புத்தனாய்த் தோன்றி அவர்களை மயக்கிக் கைலை புக்குப் பெருமாற்கு அவர்கள் கொடுமை கூறி அழிக்குமாறு குறையிரப்பப் பெருமான் பூரதமேறி மேருவிற் கொண்டு சென்று அம் மூவரண மடைந்து நகைத்த வளவில் அவை நீறாக மற்றை யாவரும் வெந்தொழியச் சுதன்மன், சுசீலன், சுபுத்தி என்னும் மூவரே பிழைத்துப் பெருமான் பணித்தவாறே காஞ்சியில் இலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்துக் கைலையில் இருவர் வாயில்காப்போராகவும் மற்றொருவர் முழாமுழக்குபவ ராகவும் நியமிக்கப் பெற்றன ரென்பது இதனை 'மூவர் புரங்க ளெரித்த வன்று மூவர்க்கருள்செய்த' என ஆளுடைய பிள்ளையாரும்,

'மூவெயில்செற்றஞான் றுய்ந்தமூவரிலிருவர்நின்
(றிருக்கோயிலின்வாய்தல்
காவலாளரென்றேவியபின்னையொருவனீகரிகாடரங்
(காக
மானைநோக்கியோர்மாநடமகிழமணிமுழாமுழக்க
(வருள்செய்த
தேவதேவநின்றிருவடியடைந்தேன்செழும்பொழி
[ற்றிருப்புன்கூருளானே'

என ஆளுடைய நம்பிகளும் பணித்தமை காண்க.

## (7) சில தல புராண கதைகளை விடுத்தல்.

ஸ்ரீகைலாசபதி ஒரு நாள் தனது பிம்பத்தை நிலையாடியிற் கண்டு தலையசைத்து 'வருக' வெனறழைக்க அழகெல்லாந் திரண்டு வந்து திருமுன நின்று வணங்கப பெருமான் 'சுந்தரன்' என்றழைத்தனன். அசுரர் அமுதம் பெறல் வேண்டி மந்தரகிரியை மத்தாக நாட்டி வாசுகியைக் கயிறாகப்பூட்டித் திருபபாற்கடல கடைந்த ஞான்று வாசுகி யென்னும பாம்பு ஆற்றாது நஞ்சினை யுமிழப அஃது துயிரனைத்து முணடிட வெழ அபபோது திருமால பெருமானை யணுகி,

> 'இதுபொழுது காத்திலையே லெமக்கிறுதி யின்றே [யாம்
> விதுமுடித்த பெருங்கருணை வெள்ளமே'

யென்றிரப்பப பெருமான் சுந்தரனை நோக்கி, 'அந் நஞ்சினைக் கொணர்தி' யென்ன, அங்ஙனமே கொணர்ந்த காரணம் பற்றி 'ஆலாலசுந்தரன்' எனப பெற்றனன். அது நிற்க, சுந்தரன் நிலை ஆடியினின்றும் வெளிவந்த வபபோதே அம்பிகை தனது பிம்பத்தை அந் நிலையாடியிற் கண்டு இரண்டு கண்களாற் குறிசெய்து 'வருக' வென் றழைத்தனள். இரண்டு கண்களி னழைத்தமையான் மகளி ரிருவர் வெளிபபோந்து அம்மை திருவடியின்கண் வீழ்ந்து வணங்கினா அவாகள் அநிந்திதை, கமலினியெனப் பெற்றார்என வடமொழிப புராணங்கள் கூறுதலின்,

"ஒருதின மாடி யிற்றன் ஞெளிமேற்று விம்பநோக்கிச்
சுருதியோர் நான்குங காணுந் தூயவெம் பெருமா
[னிங்கு
வருதியென் றுளமகிழ்ந்து மலர்முடி யசைக்க
[மன்னுந
திருவமா கைலை வாழுஞ் சிவகணங் களிற்சி றகக"

"அந்த முற்றுந் திரணடுரு வாகியே
சுநத ரன்னெனத் தோன்றின னண்ணன்முன"

"அன்ன சுந்தரற் காலால மாழியின்
முன்ன முன்னவ னுணணமற் றன்னதைத
தன்ன கஙகை தழீஇக்கொடு நல்கலாற்
றன்னு மாலால சுந்தர நாமமே'

"அம்பி கைவிளங காடியிற் றன்னுரு
விம்பந் தன்னை விழிகொ டழைத்தனன்"

"கருணை கூறிரு கணக ளழைககவே
யிருமடக்கொடி யின்னெழி ருநகிவர்
திருவி மாசல மீன்றம ஞேகரி
மருமவர்ப்பத மேவி வணஙகினார்'

எனப் புராணங்களை மொழிபெயர்த்த பின்னோர் நூல்களுங் கூறுகின்றன. சுந்தரர், அநிந்திதை, கமலினி இவர்கள் வரலாற்றைப்பற்றி ஆசிரியர் ஒன்று முரைத்தா ரில்லை.

கோதாவரிநதிக் கரையிற் சாந்தமாமுனிவரென்பார் முனிவர் பலர் தம்மைப் புடைசூழ்ந்து இருந்து

செவியார வுண்டு தேக்கச் சிவசரித்திராமிர்தத்தை அன்ஞர்க்குப் புகட்டுகையில் அங்குப் போந்த வாகீச முனிவர் அவரை நோக்கி 'ஐயரே! நீர் உரைப்பன யாவும் பயனில் சொல் சிவன் ஒருவ னுண்டோ? இல்லை, இல்லை சினனே பரன்; அவன் சீர் பகரும் வாயே வாய்' என்றனர். அது கேட்ட சாந்தமாமுனிவா 'இத்தனை முனிவர்களுக்கும் மலைவு பிறக்க இங்ஙனங் கூறினமையின், நீர் சைனசமயம புக்குச் சிலகால மிருந்து பின்னர்ச் சூலை கொண்டு திரும்புக' என வெகுண்டு கூறினர் என வடமொழி நூ லொன்று கூறுமென்ப. இத்தகைய கதையொன்றும் ஆசிரியர் குறித்திலா

மனுச்சோழன் சரித்திரத்தில் இறைவன் ஆணை யும் இயமன் கன்றாகவும் வந்தனரெனத் தலபுராணங் கூறிற்றேனும் ஆசிரியர் யாண்டும் அப பொருள் குறித்திலரென்க அற்றாகச் சிலா,

'தனிப்பெருந் தருமந் தானோர் தயாவின்றித தானை (மன்னன்
பனிப்பில்சிந் தையினிலுண்மைப் பான்மை சோ' (தித்தா லென்ன
மனித்தர்தம் வரவு காணு வண்ணமோர் வணண (நல்லான்
புனிற்றிளங கன்று துள்ளிப் போந்ததம் மறுகினூ (டே

'பழிப்பறை முழக்கோ வார்க்கும் பாவததி னெலி (யோ வேந்தன்

வழித்திரு மைந்த னாவி கொளவரு மறலி யூர்திக்
கழுத்தணி மணியி னார்ப்போ வென்னத்தன் கடை
(முன் கேளாத்
தெழித்தெழு மோசை மன்னன் செவிப்புலம் புக்க
(போது’

என்னுந் திருப்பாக்களின் ஆசிரியர் ‘தனிப்பெருந்தருமம்’ ‘மைந்தனாவிகொள வருமறலி’ என அரசனைச் சோதிப்ப ஆணைகபோந்த அறவாழியந்தணனாகிய அத்தனையும் அரசன் ஒருமகன் ஆவிகொள்ள ஆன்கன்றாய்ப் போந்த கூற்றுவனையும் உய்த்துணரவைத்தன ரென்ப. இது பிறிதோராற்றாற் சரித்திர முணர்ந்தபின் வலிந்தும் நலிந்தும் அதன்கட் பொருளைப் பொருத்துவதாமென விடுக்க இச்சரித்திரத்திற் பின்னும், மனுச்சோழன் ஆவினைத் தேரின் வைத்துத் தானே அத்தேரை நடத்தினனென்ப இப்பொருள் ‘போற்றிப் பஃறொடை’ யென்னும் நூலின்கண்,

‘ஓடிய தேரின்கீ ழுயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவமன்றே நீங்குமென — நாடித்தன்
மஞ்சனையு மூர்ந்தோன் வழக்கே வழக்காக’

என்னும்அடிகட்கு அந் நூல் உரைகாரர் ‘பாவந் தீரும்படி தேரிலே தாய்ப்பசுவை வைத்தூர்ந்து கொன்றது மகனை யமன் பிடித்து வருத்தாதபடிக்குச் செய்த கிருபையே’ எனக் கூறிய உரையானும் அறிதற்பாலது

இதனையும் ஆசிரியர் யாண்டுங் குறித்திலரென்றுணர்க.

இனி, அருச்சுனன் கண்ணப்ப நாயனாராக வுதித்தன னெனச் சீகாளத்திப் புராணங் கூறும். ஆசிரியர் நாயனாரது முற்பிறப்பினைப்பற்றி ஒன்றுஞ் சொற்றன ரல்லர். ஆயினும்,

'சிலையினைக் காப்புக் கட்டுந் திண்புலிநரம்பிற்செய்த
நலமிகு காப்பு நன்னா ளுகளர் பயந்த நாகக்
குலம்விளங் கரிய குன்றின் கோலமுன் கையிற்
[சேர்த்தி
மலையுறை மாக்க ளெல்லாம் வாழ்த்தெடுத் தியம்பி
[னாகள்'

என்னுந் திருப்பாவில், 'நாகக் குலம் விளங்கு அரிய குன்றின்' என்பதற்கு '(நிவாத கவசகாலகேயர்களைக் கொன்று தன் தந்தையாகிய இந்திரனோடு ஆசனத்திருந்தி) தேவர் குழுவின் நாப்பண் விளங்கிய அரிய குன்றுபோன்ற திண்ணனாரின்' என்னும் பொருளுங் குறிப்பிற் பெறப்படுதலின், ஆசிரியர் நாயனார் முற்பிறப்பினை ஓராற்றானுணர்த்தின ரெனச் சிலர் கூறுப. அவர் கூற்று வலியுடைத்தன் றென் றொழிக.

மேலும், பெருமான் சிறுத்தொண்ட நாயனாருக்குப் பத மளிக்கையில் அவர் பெருமானை நோக்கி, 'யான் அரசன் பொருளைக் கொண்டு அடியார்க்கு அமுதருத்தினேன் ஆதலின், அவற்கும் பேறருளல் வேண்டுமென அதற்குப் பெருமான் 'அன்ப! இற்றைக்கு இருபத்தொன்று நாள் வடக்கு வீதியிற் சண்பகமணம் வீசும், அக்

காலை யவற்கு யாம்பேறளிப்பம்' என் றவ்வாறே அற்றைக்கு இருபத்தொன்று நாள் வடக்கு வீதியிற் 'சண்பகப் பூ மணம் வீச அரசற்குப் பேறளித்தன னென்ப.* அதனையும் ஆசிரியர் தொட்டா ரில்லை

இன்னும் சோமாசிமாற நாயனார் நாடோறுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக் குதவுமாறு வழுதுணங் காயுங் கீரையுங் கொணர்ந்து தந்தன ரெனவும், ஒரு நாள் ஆற்றில் வெள்ளம் பெருகினமையின் அக் கைங் கரியம் முட்டுற்ற தெனவும், அன்று சுவாமிகள் வழுதுணங்காய்க் கறியும் கீரையு மின்மையின் அதற்குக் காரணம் வினவி நாயனார் அவற்றை நாடோறுந் தந்து வந்தமையையும் அன்று வாராமையையும் அறிந்து அவரைக் காண விரும்பின ரெனவும், மறுநாள் அவர் வந்தபோது அவரைச் சுவாமிகள் திருமுன் விடச் சுவாமிகள் 'ஏன் நாடோறுங் காயுங் கீரையுந் தந்தீர்?' என வினவ, அதற் கவர் 'அடிகாள்! யான் ஒரு வேள்வி செய்யுங் கருத்தினன். தியாகேசன் அவி கொள்ளுமாறு தேவரீர் செய்யவேண்டு' மென விடையிறுப்பச் சுவாமிகள் 'அங்ஙனமே யாகுக. ஈசன் இன்ன வடிவோடு வருவா னென்று கூற வொண்ணாது நீர் அவன் எவ்வடிவோடு வரினும் அவனை அறிந்து அவிற்பாகத் தரல் வேண்டு'மெனச் சாற்றின ரெனவும், அதன்பின் நாயனார் வேள்வி புரிகையிற் பெருமான் புலையனாகவும் பெரு

* திருச்செங்காட்டங் குடியிற் சண்பகப்பூத் திருவிழா நடைபெறுத லறிக.

மாட்டி புலைச்சியாகவுங் கட்குடங்கள் சுமந்துகொண்டு நான்கு வேதங்களாகிய நாய்களோடு வர வேள்விச் சாலையின்கட் பார்ப்பா ரெல்லாரும் பரவியோடவும் நாயனார் மயங்கவும் அடுத்த தொரு கோயிலின்கண் எழுந்தருளியிருந்த விநாயகப் பெருமான் குறி காட்டவும் நாயனார் தெளிந்து புலையனும் வந்த பெருமானுக்கு அவி யுதவின ரெனவு மொருகதை கூறுப * இதனையும் ஆசிரியர் காட்டினாரில்லை.

(8) சில தலபுராணக் கதைகளோடு மாறு கொளல்

திருநீலகண்ட நாயனார் ஓரிரவு ~~சூதாடுதலைத் தரிசித்துத்~~ திரும்பி வருகையிற் பெருமழையால் நனைந்து ஒரு கணிகை மாதின் வீட்டு வாயிற் புறத் தொதுங்கி நிற்ப, அதனை யறியாத அக்கணிகையின் பணிப்பெண் உண்ட கலத்தைக் கழுவிய நீரினைப் பலகணி வாயிலாக வீதியின் வீச அது நாயனார்மேற் பட, அவர் சினந்து 'இது செய்தார் யார்?' என உரைப்ப, அவ்வோசை கேட்ட கணிகை மாது விரைந்து வெளிப் போந்து நிகழ்ந்ததனை யறிந்து கர நெரித்து வயிறு பிசைந்து 'அடிகாள்! அறியாது செய்த அபசாரத்தைப் பொறுத்தருள்க'வென வேண்டி அவரை அழைத்துக் கொண்டு உட்புகுந்து எச்சில் நீங்க மஞ்சன மாட்

---

* சோமயாஜி மாற நாயனார் திருப்பதியாகிய அம்பர் மாகாணத்திற் கொருகற் றூரத்துப் பொங்குசாராயநல்லூர் இருந்ததறிக. அப்பேர் இற்றை ஞான்று கோங்கராயநல்லூ ரென மாறி வழங்குகிற தென்ப.

டிச் சந்தனக் கலவை பூசி நிற்ப, அவட் கின்மொழி வழங்கி நாயனார் தம் மனை புக அவர் மனைவியார் தங் கணவனார் காலந் தாழ்த்து வந்தமையான் அவர் ஒழுக்கத்தின் ஐயங் கொண்டு வினவ, அவர் நிகழ்ந்தமை கூற, அதனை நம்பாது மனங் கொதித்து அவர் தம்மைத் தீண்ட வந்துழித் திருநீலகண்டத்தின் மீது ஆணை நிகழ்த்தின ரென வடமொழி ஏமசபாநாத மான்மியங் கூறு மென்ப சைவப் பெரியா ரொருவரும் இங்ஙனங் கூறுமையானும் இங்ஙனம் கூறின் நாயனா அன்பின் றன்மைக்கும் அவர் மனைவியார் கற்பின் பொற்பிக்கும் அழிவு நேர்தலானும் ஆசிரியர் இது வடமொழிவாண ரொருவர் கட்டுக்கதை யென்றே கழித்தனர்போலும் ஆசிரியர் ~~அச் சரிதங்~~ அப் பரவாது கூறுமாற்றின் றகுதியைப் பின் விரிப்பாம்.

இனி, வடமொழிச் சீகாழி மான்மியம் அநாதி மல முத்தனாகிய ஐயன் அறுமுகனை நோக்கி 'நமது அடியாரையும் அருமறைகளையும் இகழுஞ் சமணர்களையும் புத்தரையும் வென் றொழித்துப் பூதி சாதனமுறையை உலகின் நிலைபெறுத்துக' வென்ன, அவ்வாறே இளையபெருமாள் சீகாழியிற் பிரமதீர்த்தக்கரையிற் றவம் புரிந் திருந்த சிவபாதவிருதயர் முன் இளஞ்சூரியனைப் போன்ற குழந்தையாய் வந்தன ரெனக் கூறுமாகலின் அதனைத் தமிழின் மொழிபெயர்த்த அருணாசல் கவிராயரும்,

"முத்தன துணர்ந்து மூவிரு கமல முகவனை நோக்
(கிமண ணிடைநம
பத்தரை மறையைப் பனுவலை யிகழும் படிறரை
(வல்லம ணரைவெம
புத்தரைத் தடிந்து சைவவை திகவெண பூதிசா தன
(முறை நாட்டி"

"தலந்தொ ழப்பதி னாயிரம் பதிகத் தண்டமிழ் (ம
(மாலிகை சாத்தும
பொலங்கொள் காரண முண டாதலி னுலகிற் பிறந்
:திவண வருகென மகிழ்கூர்ந
திலங்குநீர் வேணி யணணலாங் கருளி யெணணி
(ரண டாயிரங் கணத்தை
நலங்கிள ரடிய ராகவென் றேவ நாமவேன் முரு
[கனு நயந்தான்"

"பூதல மதனிற் காழிமா நகரிற் புண்டரீ கன்றடத
(தொருசாா
மாதவம புரிவோன் முன்னிளங் கதிர்போன் மத
(லையாய் வந்தனன் கந்தன்"

என்றாராலோ வெனின், அவ்வடமொழி மான்மிய வுரை யுந் தமிழகத் தான்றோ ருரை கடந்து சேறலின் அத னையு மாசிரியர் கொண்டில ரென்க.

## (9.) தல நாயகர் பெயர் மொழிதல்

திருத்துருத்தி யென்னுந் திருப்பதியிற் பெரு மான் வடமொழிப்பெயர் 'உக்தவேதீசுவரர்' என்பது. தமிழின் அதற்கு நேர் 'சொன்னவா றறிவார்' என்பது.

பிள்ளையார் திருத்துருத்தி யென்னுந் திருப்பதி புக்குப் பெருமானைத் தொழுதா ரென் றுரைக்கப போந்த ஆசிரியர்,

'பொன்னி மாநதிக் கரையினின் மீணடுபோந் (தணைந்து
சொன்ன வாறறி வார்தமைத் துருத்தியிற் றொ (ழுதார்'

எனத் தல நாயகர் பெயரையுங் கூறினா ரென்க

'மின்னுமா மேகஙகள பொழிந்திழிந் தருவிவெடில் படக்
கரையொடுந திரைகொணாந் தெற்று
மன்னமாங காவிரியாங கரையுறைவா ரடியிணை
தொழுதெழு மன்பரா மடியாா
சொன்னவா றறிவாா துருததியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச செடியனே னுயே
னென்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
யென்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானை'

என்னும் ஆளுடைய நம்பிகள் திருத்துருத்தித் திருப் பதிகத்தும் 'சொன்னவாறறிவார்' என்றமை யறிக

இன்னும், மாந்தா வென்னும் அரசன் மூப்பின் வருந்தி விரைவின் மடித்தற் கோ ருபாயங் கேட்ப [illegible]லய தருமங்களைக் குறைப்பின் மரணம் நேரு மெனச சிலர் கூறக் கருணீகனை அழைத்து எல்லாக் கோயிற்றருமங்களையுங் குறைத் தெழுதி வருமாறு ஏவ அவன் அவ்வாறே எழுதிவந்து தர அதைப் படிக்கையில்

'திருவொற்றியூர் நீங்கலாக' வென்றெழுதியிருக்க, அது கண்டு அரசன் அவனைச் சினந்து பேச அவன் தான் அஃதெழுதியதில்லையென மறுப்ப, அரசன் தானே அச் சொற்களைக் கீறித் தன்னிடஞ் சேமித்து வைத்திருந்து மறுவலும் பார்க்கையில் கீறலழிந்து பழையபடி 'திருவொற்றியூர் நீங்கலாக' வென் றிருக்க, அது பெருமான் எழுத்தென வறிந்து அவ னருட்டிறம் வியந்து திருவொற்றியூர் சென்று திருக் குளத்தின் மூழ்கி இளமையோ டெழுந்தன னென்பது கதை அத் தலத்துப் பெருமானுக்கு எழுத்தறியும்பெருமான் என்னுந் திருப் பெயருமொன் றுண்டு இத் திருப்பெயரை ஆசிரியர்,

"எழுதாதமறையளித்த வெழுத்தறியும் பெருமானைத்
தொழுதாரவ முறநிலத்திற் றோய்ந்தெழுந்தே யங்
(கமலா
முழுதாய பரவசத்தின் முகிழ்த்தமயிர்க் கான்மூழ்க
விழுதாரை கணபொழிய விதிர்ப்புற்று விம்மினார்"

என்னுந் திருப்பாவின் வைத்தமை காண்க

## (10) ஆலயங்களின் பெயர் சாற்றல்

திருவாரூர் ஆலயத்தின் பெயர் 'பூங்கோயில்' எனல் தெரிப்பான்,

அனைய தனுக் ககமலரா மறவனூர் பூங்கோயில்'

என்றும்,

திருவெண்ணெய் நல்லூர் ஆலயத்தின் பெயர் 'திருவருட்டுறை' எனல் தெரிப்பான்,

திருவருட் டுறையே புக்கார் கணடிலர் திகைத்து
(நின்றார்'

என்றும்,

கருவூர் ஆலயத்தின் பெயர் 'ஆனிலை' எனல தெரிப்பான்,

அந்நிலை யரனா வாழ்வ தானிலை யென்னுங் கோயில்'

என்றும்,

புகலூர் ஆலயத்தின் பெயர் 'வர்த்தமானேசசுரம்' எனல தெரிபபான்

மனனும் புகலூருறைவாரை வர்த்தமான வீசசுரத்து'

என்றுங் கூறுதலின் ஆலயங்களின் பெயர் கூறுதலும் இவர் செய்கைகளுளொன் றென்க.

## ( 11.) சில ஆலயங்களின் முன்னை நிலைமை தெரித்தல்

ஆலயங்கள நிலைமாறுதலு முண்டு திருவண்ணு மலை ஆலயம இஞ்ஞான்று மலையடிக்க ணுளது முன்னொரு ஞான்று மலைமீ திருநத தென்பதனை,

"செஙகண விடையார் திருவண்ணு மலையைத
தொழுது வலங்கொண்டு
துஙக வரையின மிசையேறித் தொண்டர் தொழு
[ம்புக் கெதிர்நிற்கு
மஙக ணரசைத தொழுதெழுந்து திளைததுத திரு
[நா வுக்கரசா
தஙகு' பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை
[சாதித்தார்'"

"தெண்ணீர் முடியார் திருவண்ணு மலையைச சென்
[று சேர்வுற்றார்"

அங்க ணனைவார் பணிந்தெழுந்து போற்றி செய்
[தம் மலைமீது
தங்கு விருப்பில் வீற்றிருந்தார் தாட்டா மரைக
[டம்முடிமேற்
பொங்கு மார்வத தொடும் புனைந்து புளக மலர்ந்த
[திருமேனி
யெங்கு மாகிக் கண்பொழிபு மின்ப வருவி பெருக்
[கினர்"

என்னுந் திருப்பாக்களாற் றெரித்தனர்

திருக்காளத்தி ஆலயமும் மலைமீ திருந்த தென் பதனை,

மலைச்சிகர சிகாமணியின் மருங்குமுன் னேநிற்குஞ்
சிலைத்தடக்கைக் கண்ணப்பர் திருப்பாதஞ் சேர்ந்
[திறைஞ்சி
மலைத்து விழுங் கண்ணருவி யாகத்துப் பாய்ந்தி
[ழியத்
தலைக்குவித்த கையினராய்த் தாழ்ந்துபுறம் போந்
[தணைந்தார்"

அயன்மாறே டு
மருந்துவெளி யேயிருந்த திருக்காளத்தி
மலையடிவா ரஞ்சார வந்து தாழ்ந்தார்"
தாழ்ந்தெழுந்து திரு[illegible]லையைத் தொழுதுகொண்டே
தடஞ்சிலா தலசோபா னத்தா லேறி
வாழ்ந்திமையோர் குழாநெருங்கு மணிநீள் வாயின்
மருங்கிறைஞ்சி யுட்புகுந்து வளர்[illegible]ற் கோயில்
சூழ்[illegible]லங் கொண்டிறைவர் திருமுன் பெய்தித்
[illegible]தலைமேற்கொண்டு செங்கை போற்றி
வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண் பார்போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்"

என்னுந் திருப்பாக்களாற் றெரித்தலுங் காண்க.

(12) சிவஸ்தலங்களுண்மை காட்டி நிலச்சிறப்புரைத்தல்.

நல்வினை 'எட்டுத் திசைகளினுந் தென்றிசை மேம்பட வந்த புண்ணியம் யாது?' என முனிவர்கள் வினவ, அதற்கு உபமந்யு மாமுனிவர் 'சிதம்பரம், திருவாரூர், காஞ்சி, திருவையாறு, சீகாழி முதலிய பல சிவஸ்தலங் களுண்மையின் ஏனைத் திசைகள் அத் திசையையொவ்வா' என விடை பகர்ந்தன ரெனல் காண்க மேல்; திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தும், தொண்டை நாட்டு வளங் கூறப்புக்க ஆசிரியர் நானிலமும் பாகுபடுத்து அவற்றிற் கருப்பொருள் உரிப்பொருள் விரித்த தன்றி அந் நாட்டுக் குறிஞ்சியுள் திருக்காளத்தி, திருவிடைசுரம், திருக்கழுக்குன்றும்; முலலையுள் திருமுல்லைவாயில், திருவூறலும்; மருதத்துள் திருவல்லம், திருமாற்பேறும்; நெய்தலுள் திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூரு முண்டெனக் காட்டி அத் திருத்தலங்களின் சிறப்பையும் ஆங்காங்குக் குறித்தமை காண்க

( 13) கண்ணுதற் பெருமான் காட்சிமுறை கூறல்.

திருவாரூர்த் திருவீதிக்கண் ஒரு மைந்தன் மருமந்தன் றேராழி யுறவூர்ந்த மநுச்சோழற்குப் பெருமான் காட்சி தந்தமை கூறுகையில்,

"அணணலவன் கணணெதிரே யணிவீதி மழவிடை ,மேல்
விணணவர்க டொழநின்றான் வீதிவிடங் கப் (பெருமான்"

என உமையம்மையாரைப்பற்றி யொன்றுங் கூறாமையும், கற்புடை மனையாரோடு இன்னிலை நெறி வழாது நின்று தன் மாட்டுந் தன்னடியார் திறத்தும் பேரன்பு செலுத்தி அருஞ்செயல் புரிந்த நாயன்மாருள் திருநீலகண்ட நாயனார், இயற்பகை நாயனார், இளையான்குடி மாற நாயனா ரிவர்கட்குப் பெருமான் காட்சி தந்தமை சாற்றுகையின் முறையே,

'துன்னிய விசும்பினூடு துணையுடன் விடைமேற்
(கண்டார்'

'தன் றுணையுடனேவானிற்றலைவனைவிடைமேற்கண
(டார்'

'ஏலவார் குழலா டன்னோ டிடபவா கனனாய்த் தோ
(ன்றி'

என உமையம்மையாருடன் றோன்றினமை கூறுதலும்,

'தான்பெறு மழலை மொழிமகன் றன்னைத் தன்
[கையா லுளங்களித் தரிந்து
சமைத்துல கறிய விடுபெருந் தொண்ட'

ராகிய சிறுத்தொண்ட நாயனார்க்குக் காட்சி தந்தமை மொழிகையில்,

'மலைபயந்த
தையலொடுஞ் சரவணத்துத் தநயரொடுந் தாம
[ணைவார்

என உமையம்மையார், இளையபிள்ளையார் ஆகிய இருவருடன் அணைந்தமை கூறுதலுங் காண்க

## (14. வடநூற் பொருளோடு ஒப்பக் கூறல்.

'ஆயுக்த கேப்ய : சோரேப்ய :
பரேப்யோ ராஜவல்லபாத்
ப்ருதிவீபதி லோபாசய
நராணும் பஞ்சதா பயம்'

[சேவர்களானும் கள்வரானும் பகைவரானும் அரசற்குப் பிரியமானவரானும் அரசனுடைய உலோபத்தானுங் குடிகளுக்கு ஐந்து விதமான பயமுண்டு] என்னுங் காமந்தக நீதி நூற்பொருளொடு ஒப்ப,

'மாநிலங்கா வலனவான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லூனமிகு பகைதிறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ'

என்றமை கண்டு கொளக.

மாககவி 'ஹரதயகம் சம்பிரதி ஹேது ரேஷ்யத
சுபஸ்ய பூர்வாசரிதை: க்ருதம் சுபை
சரீர பாஜாம் பவதீய தர்சநம்
வ்யநக்தி காலதருதயேபி யோக்யதாம்

[உனது காட்சி உயிர்கட்கு நிகழ்காலத்திற் பாவங்களைப் போக்குகிறது, வருங்காலத்தின் மங்களத்திற் கேது வாகிறது, சென்றகாலத்திற் செய்த நல்வினைப் பய னாகிறது, ஆகலின் முக்காலத்தினும் (அவ் வுயிர்களின்) நன்மைக் குரித் தாகிறது]

என்னுஞ் சுலோகத்திற் கூறிய பொருளொடு,

'சென்றகா லத்தின் பழுதிலாத் திறமு மினியெதிர்
[காலத்தின் சிறப்பு
மின்றெழுந் தருளப் பெற்றபே றிதனு லெற்றைக்
[குந் திருவரு ளுடையோ
நன்றியி னெறியி லழுந்திய நாடு நற்றமிழ் வேந்
[தனு முய்ந்து
வென்றிகொ டிருநீற றொளியினல் விளங்கு மேன்
[மையும படைத்தன மெனபார்'

என்னுந் திருப்பாவிற் பொருளொடு ஒத்திருத்தலு மறி யத்தக்கதாம்.

இனி, காளிதாஸகவி தமது சாகுந்தல நாடகத் தில,

"சித்ரே நிவேஸ்ய பரிகல்பித ஸத்வ யோகா
ரூபோசச யேந விதிநா மநஸா க்ருதாநு
ஸ்திரீ ரத்ந ஸ்ருஷ்டி ரபரா ப்ரதிபாதி ஸாமே
தாதுர் விபுத்வ மநுசிந்த்ய வபுஸ்ச தஸ்யா:"

"அகணடம புணயாநாம பலமிவச ததரூப மநகம்"

[பிரமன் சித்திரத்தைத் தீட்டி (அதற்கு) உயிர் தர வந்தவளா (அல்லள்), (சந்திரன் முதலிய அழகிய இயற்கைப் பொருள்களின்) அழகைத் திரட்டி மனத் தினல் அமைக்கப் பெற்றவளா (அல்லள்), பிரமனுடைய சக்தியையும் இவளுடைய அங்கத்தின் அழகையும் ஆராயின் இவள் பெண்மணியின் தனிப் படைப்பாக எனக்குத் தோன்றுகிறுள்]

[இவள் குற்றமற்ற வுருவம் நிறைந்த புண்ணியங்க ளின் பயன் போலும்] எனக் கூறியவற்றின் பொரு ளொடு,

'ஓவியநான்முகனெழுதவொண்ணுமையுள்ளத்தான
மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிள
[க்கோ
மூவுலகின் பயனாகி முன்னின்ற தெனநினைந்து
நாவலாகா வலர்நின்றார் நடுநின்றார் படைமதனார்'[1]

என்னுந் திருப்பாவின் பொருளொருவழி யொத்திருத் தலு நோக்கித் தெளிக

## (15) திருக்குறளின்கண் மொழிகளையும் பொருளையும் பொன்னேபோற் போற்றல்.

படைகுடி கூழமைச்சு நட்பரணாறு
முடையா னரசரு ளேறு'

என்னும் பாவிற் 'குடி' 'கூழ்' என்னுஞ் சொற்கள் ஆக் கப்பொருளன. பரிமேலழகரும்,

ஸ்வாம்யமாத்ய சுகுர்த் கோச ராஷ்ட்ர துர்க்க
பலாநிச ராஜ்யாங்காநி'

[ராஜா, மந்திரி, நட்பு, பொருள், நாடு, அரண், படை இவை இராஜ்ஜியத்திற்கு அங்கம்] என அமரங் கூறற் கேற்ப ஈண்டுக் 'குடி' யென்பது அதனையுடைய நாட் டினை யென்றும், 'கூழ்' என்றது அதற் கேதுவாகிய பொருளை யென்றும் உரை வரைந்தனர்.

அவ் வருஞ்சொல் இரண்டையுமே ஆசிரியர்,

> தாழுஞ் செயலின் றெருமன்னவன் றுஙக வேண்
> [டுங்
> கூழுங குடியு முதலாயின கொள்கைத் தேனுகு
> சூழும படைமன் னவன்றேளிணேக காவ லினறி
> வாழுந் தகைத்தன் றிநதவையக மென்று சொன்
> ஞர் '

என்னுந் திருப்பாவின் வைத்தமை காண்க

மேலும்,

> உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
> போஒய்ப் புறமே படும்'

என்னும் பாவிற் 'பொருளாயம்' 'உருளாயம்' என்னும் மொழிகளை,

> இருளாரு மணிகணட ரடியார்க்கின் னமுதளிக்கப்
> பொருளாய மெய்துதறகுப் புகழ்க்குடந்தை யம்
> [பலததே
> யுருளாயச சூதாடி யுறுமபொருள்வென றனநமப
> ரருளாக வேகொண்டஙு கமுதுசெய்வித தின்புறு
> [வார்'

என்னுந் திருபபாவின் அமைத்தமை யறிக

இன்னும்,

> பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
> செய்யாமை செய்யாமை நன்று'

என்னும் பாவின் கருத்தாகிய 'பொய்மைக்கிற் பிற வறஞ் செய்கை நன்று' மென்பதனை அமைத்து,

'பொயகடிந் தறத்தின் வாழ்வார்'

என்றார்

பின்னும

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெயயெனப் பெய்யு மழை'

என்னும் பாவிற் பொருளை யுள்வைத்து ஆசிரியர்,

மழைக்குதவும பெருங்கற்பின் மனைக்கிழததியார்'

என்றதூஉங் காண்க

அன்றியும்,

புணர்சசி பழகுதல் வேணடா வுணர்சசிதா னட்பாங் கிழமை தரும்'

என்னும் பாவிற் பொருளை யுள்வைத்து,

'காணடகைமை யின்றியுமுன் கலந்தபெருங் [கேண்மையினர்'

என்றதூஉ மறிக

அஃதனறியும்,

நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி தானல்கா தாகி விடின்'

என்னும் பாவின் மொழிகளையும் பொருளையுங் கொண்டு,

'நிகழ்ந்த தன்மையி னிலவுமேழ் கடனீர்மை
[குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது
[வேனில்'

என்றமையுந் தெளிக

அதன் மேலும்,

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள'

என்னும் பாவிற் பொருளை,

'புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்
[தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காத
[லினல்'

என்றமையுந் தெளிக

(16) பாவேந்தோன் புகழ் பாவின் நிறுத்தல்.

ஆசிரியர் அடியார் புகழைப் பாடுமாறு தம்மைத் தூண்டி உரிய உதவிகள் யாவுஞ் செய்த அநபாய சோழன்மாட்டுத் தமக் குளதாய நன்றியறிவான் அவன் பெயரையும் பெருமையையும் உலகின் நிலைநிறுத்தல் வேண்டி அவற்றைத் தம் நூலகத்துப் பன்முறை யுரைத்தன ரேனும்,

'கையின்மான் மழுவர் கங்கைசூழ் சடையிற் கதிரி
[ளம் பிறைநறுங் கண்ணி
யையர்வீற் றிருக்குந் தன்மையி னாலு மளப்பருந
[பெருமையி னாலு

மெய்யொளி தழைக்குந் தன்மையி னுலு/ வெள்ளி
[வெண குடையா பாயன்
செய்யகோ லபயன் றிருமனத தோஙகுந் திருக்கயி
[லாயநீள் சிலம்பு/

என்னுஞ் சிலேடைக் கவியின்கண் அவன் பெருமையை நன்கு விளக்கினர்.

பின்னேரும் பாடுவித்தோன் புகழைப் பாவகத்து நிறுத்தலாகிய இச் செய்கையைப் பின் பற்றினமை காண்க

(17.) நாயன்மார்க்கு அடியார்மாட்டுப் பரிவினை விளக்கல்.

திருநீலகண்ட நாயனர் தாம் திருவோட்டைக் கெடுத்தமை குறித்து அந்தண ரவையின் வழக்குத் தொடுத்து அடியார் நிற்பத் தாம் வாய்ப்பிறப்புக் கூறப் புக்கவழி,

நீணிதியா மிதுவென்று நின்றவிவர் தருமோடு
பேணியான் வைததவிடம் பெயர்ந்துகரந் ததுகா
[ணேன்?

என்ருர். இதன்கண், 'நின்ற விவர்' என்றதனல் அடியார் நிற்றல் பொருராய் 'நெடுநேரம் அடியாரை நிற்க வைத்து அவர் வாய்ப்பிறப்புக் கேட்டீர் அந்தணீர்! அவர்க்கு ஓ ரிருக்கை நல்கவேண்டும்' என அவையத் தாருக்குக் குறிப்பித்தமை தோன்றலின் அவருக்கு அடியார் மாட்டுள்ள பரிவினை விளக்கிற் றென்க

இன்னும், அப்பூதியடிகள் ஆளுடையவரசினைக் காணு முன்னும் அவர்மாட்ட டன்புடையராய்,

' அளவைக ணிறைகோன் மக்க ளாவொடு மேதி

மற்று, முளவெலாம்' அரசின் நாமஞ் சாற்றி, மடங்கள் தண்ணீர்ப்பந்தர்கள் யாவும் அரசின் நாமத்தின் வழங்குவித்து வாழ்கையில் அவ்வரசு திங்களூர போந்து அடிகள் மனையின் றலைவாயிலி னின்று சிறிதுபோது சொல்லாடித் தாமே அவரென் றறிவித்த வளவில் அற்புக் குறிகள் யாவுந் தோன்ற வணங்கி முன்னின்று கூத்தாடிச் சூழ வோடிப்பாடி,

> "மூண்டபெரு மகிழ்ச்சியினான் முன்செய்வ தறி[யாதே
> மீண்டமனை யகத்தெய்தி யில்லவர்க்கு மக்களுக்கு
> மாண்டவர செழுந்தருளு மோகையுரைத் தார்வ[முறப்
> பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடுமீளப் புறப்பட்[டார்"

என்றனர் இதன்கண் பன்னெடு நாளாய்ப் பாராமலே பத்தி செய்து வந்து அரசினைத், தாமே நேரிற் பார்த்தவுடன முகமன் வழங்கி ஆசனமளித் துபசரித்தன் முறையாக, அவரை வாயிலின் நிற்க விட்டு இது முன் செய்வது இது பின் செய்வது என் றறியாது, மனையகம் புக்கு மனைவி மக்கண் முதலிய சுற்றத்தார்க்கு அந் நற்செய்தி கூறி அவர்களுடன் மீள வந்தன ரென அடிகள்பரிவிருந்தபடியை நன்கு விளக்குதல் காண்க

## (18) நாயன்மார் அநுபவங் கூறல்

ஆளுடையநம்பிகள் கனகசபையிற் றிருக்களிற்றுப் படியின்மருங்கு சென்று தாழ்ந் தெழுந்தா ரென்று சொல்லவந்த ஆசிரியர்,

'வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப மன்றுளே
[மாலயன் றேட
வையர்தாம வெளியே யாடுகின்றாரை யஞ்சலி மலா
த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கணகளோ வந்தக் கரணமோ
[கலந்த வன்புந்தச
செய்தவம் பெரியார் சென்றுதாழ்ந் தெழுந்தார்
[திருக்களிற் றுப்படி மருங்கு'

எனச் சொல்லினர்.

இதனுள், 'கைகளோ (முன்) குவித்த, கண்களோ (முன்) திளைத்த, அந்தக்கரணமோ (முன்) கலந்த' வென்ற தென்னை? அந்தக்கரணங் கலக்குமுன் கைகள் குவித்தலுங் கண்கள் திளைத்தலும் எங்ஙனம் கூடும்? நினைத்த லின்றி ஒன்றைச் செய்தலென்பது நமது அனுபவத்திற்கு மா றன்று?' எனின், அன்று,

'உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு'

என்புழிப் பரிமேலழகர் 'ஆற்றங் காத்தற்கட் கை தன் மனத்தினு முற்படுதலின், அவ் விரைவு இடுக்கண் களைவழியும் அம் முதற் கொத்த தொழிலுவமையினும் வருவிக்க' என் றுரைவகுத்தவாறு நம் அனுபவத்தினும் நம் மா லன்பு செய்யப்பட்டார்க் கோ ராபத்து நேருழி நமக்குந் தெரியாது நம்மாட்டு முயற்சி நிகழக் காண்டலின் என்க. எனினும், நினைப்பும் முயற்சியும் ஒரே காலத்து நிகழு மென்பதே கருத்தெனக் கொள்க.

கம்பரும்,

'புந்தி யோபே ருவகைப் பொருமலோ
வுந்தி யோஙகு மொளிவளைத் தோள்கொலோ
சிநதி யோடு கலையுடைத தோகொலோ
முந்தி யோங்கிய தியாது மூலைகொலோ'

என்றமை காண்க,

அதன்மேல்,

'ஐந்துபே ரறிவுங் கணகளே கொள்ள வளப்பருங்
[கரணமோர் நான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்து
[சாத துவிகமே யாக
விந்துவாழ் சடையா னாடுமா னந்தவெல்லையிறனிப்
[பெருங கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைதது மாறிலா
[மகிழ்சசியின மலர்ந்தார்'

என்றனர்

இதன் கருத்து:

'ஐம்பொறிகளுள் ஏனைய நான்கு பொறிகளுந் தத்தம் புலன்களை நுகராவாகக் கண்ணாகிய ஒரு பொறியே அவற்றின் வன்மையோடுந் தன் புலனாகிய உருவத்தை நுகரவும், அந்தக்கரண நான்கனுள் ஏனைய தத்தந் தொழில செய்ய வாகச் சித்தம் ஒன்றுமே விடயத்தின் அழுந்திநிற்றலாகிய தன்றொழிலைச் செய்யவும், குணங்கள் மூன்றனுள் ஏனைய குணங்கள் நில்லாவாகச் சாத்துவிக மென்னும் உத்தமகுணமே தலைப்பட்டு நிற்கவும் திளைத்து மகிழ்ந்தன' ரென்பது. ஆன்மாவிற்கும்

மனத்திற்குங் கூட்டரவும் பின் மனத்திற்கும் பொறிக்கும் கூட்டரவும் நேர்ந்தாலன்றி விடயஞானம் பிறவாதென்க. எனவே, மனம் ஒருபொறியொடு கூடி நின்று ஒரு விடயத்தைப் பற்று மென்பதாம் ஆகவே, மனம் ஒவ்வொரு பொறியொடுந் தனித்தனி கூடி நின்று,

'அர்க்க வுதயத தலாம் புடமாத
வெற்குவளை யாதலித ழெட்டிற்கு-நிற்குமதி
லூசி முனைதெறிக்கத லோரிதழிற செல்காலம்
மாசில் கணமாய் வரும்'

என்றபடி மிக நுண்ணிய கணமென்னுங் காலவெல்லையினும் மாறிமாறிப பல விடயங்களைப் பற்றும் வலியுடைத் தென்றறிக. இதனால், வடநூலாரும் 'இந்திரியாணாம் மனோராஜா' என்றனர். ஆயின், மனம் ஒருபொறியோடு கூடி நின்று ஒரு விடயத்தைப் பற்றுகையில் அதனோடு மற்றொரு பொறியோடு கூடி நின்று வேறு விடயத்தைப் பற்றும் வலியில்லை

இவ் வுண்மையை,

"சிற்றிடைச சீதையென்னு நாமமுந் தானு
முற்றிரண டொன்றாய் நின்ற லொனறொழிந் தொ
[ன்றை யுன்ன
மற்றொரு மனமு முண்டோ மறக்கலாம் வழிமற்றி
[யாதோ

'கற்றனர்ஞானமின்றேற்காமத்தைக்கடக்கலாமோ'

"பெண்ணிணைலா நீரேயாக்கிப் பேரெலா நுமதே
[யாக்கிச்

கணணெலா நுங்க ளுக்கி காமவே ளென்னு நாமத்
தணணலெய் வானு மாக்கி யைங்கணைக் கரியத தக்க
புணணெலா மெனக்கே யாக்கி விபரீதம் புணர்ததி விட்டீர'

என்னுங் கம்பர் கவிகளானுங் காண்க.

ஒரு பொறியொடு கூடி ஒரு ~~விடயத்தை~~ப் பற்றிய மனம் அ~~வ்விடயத்தி~~ற் சிறிதுபோது அழுந்திநிற்குமாயின் அதற்கு 'மனம்' என்னும் பெயரினொழியச் 'சித்தம்' அல்லது 'சிந்தை' என்னும் பெயருண்டாம். சுவாமிகள மனம் அவர் கண்களொடு கூடிநின்று ~~நடராஜ மூர்த்தத்~~தை விட்டுப் பெயரா வாயின; மனமும் அதன்கண் அழுந்திச் சித்தமாயின அஃதாவது கண்கள் தவிர மற்றைப் பொறிகள் வியாபரித்தில வாயின. சித்தவிருத்தி தவிர மற்றை விருத்திகள் அந்தக் கரணத்திற் கிலவாயின இங்ஙனங் கண்களுஞ் சித்தமும் நடராஜ மூர்த்தத்தொடு ஒன்றுபட்டு நிற்கவுஞ் சத்துவ குண மொன்றே தலையெடுப்பவுந் திளைத்தா ரென் றுணர்க.

இனி, திருநாவுக்கரசு சுவாமிகள் சிதம்பரத்திற் கெழுந்தருளி ~~நடராஜமூர்த்தத்தைத் தரிசித்த~~போது அருளிச்செய்த திருவிருத்தத்துள் 'என்றுவந் தாயெனு மெம்பெருமான்றன் றிருக்குறிப்பே' எனப் பணித்தமை கொண்டு,

இத்தன் மையர்பல முறையுந் தொழுதெழ வென்
[றெய் தினையென மன்றுடை
மத்தன் றிருவருள் பொதியுங் கருணையி னருள்பெ
[ற் றிடவரு மானந்தம்

என அப் பெரியார் அனுபவமுங் கூறினமை தெளிக.

### (19) நாயன்மார் பெருமை நன்கு விளங்கச் சொற்பொருள் விரித்தல்

நாயனொருவர் ~~சரித்திரங்~~ கூறும்வழி எவ்வெச சொல்லையும் எவ்வெபொருளையும் எவ்வெவவிடத்திற் பொருத்தின் நாயனார் செயலின் அருமைப்பாடு இனிதின் விளங்குமோ அவ் வச்சொல்லையும் அவ்வப்பொருளையும் அவ் வவவிடத்திற் பொருத்துவதும் ஆசிரியர் செய்கைகளி னொன்றாம்.

திருநீலகண்ட நாயனார் ~~சரித்திரத்தை~~ எடுத்துக் கொண்டு இச் செய்கையை ஆராய்வாம்:

> ‘வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலதது வந் [தார்’

என்புழி ‘வேதியர்’ என்னு மடைமொழியான் நாயனாரது நல்லினத்தையும், ‘புனற்சடை முடியார்க் கன்பர்’ ‘மெய்யடியார்கட் கான பணிசெயும் விருப்பி னின்றார்’ என்பவற்றாற் சிவபத்தி அடியார் பத்திகளையுந் தெரித்தார். இங்ஙனம் நல்லினம் பெற்றுச் சிவபத்தியும் அடியார்பத்தியுஞ் சிறந்து நின்றும் இளமையின் வலிமைக் கழிந்து இன்பநுகர்ச்சியிற் றலைப்பட்டு நின்றன ரென்பார் ‘இளமை மீதூர வின்பத் துறையினி லெளிய ரானார்’ என்றார். அவர் மனைவியார் கற்பினைக் கூறி அவர்

வேறொன்றின்மேல் ஆணை நிகழ்த்தாது பரனென்று ணர்தற்கு அடிகுறியாய்,

*'கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே'

'நவிலோ நீல கண்டாய நமவென் றுரைக்கு மெட்
[டெழுத்து
நுவல்வார் மீள மலக்கூட்டி னுழையா வாறு பெறவி
[மையோர்
கவலா திரங்கி யாலாலங் கதிர்ப்பூண் கந்தி னோநதி
[யரிச
சுவலா ரணையின் வீற்றிருக்குஞ் சோதிச சுடரோன்
[றிருவுருவம்

எனப் பெரியார் பணித்தவாறு அந்தணர் ஓதற் குரிய ஷடாக்ஷர மந்திரத்திற் கடியாய்,

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃத
[றிவீ
ருய்வினை நாடா திருப்பது முந்தமக் கூன மன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது மியா
[மடியோஞ்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலக
[ண்டம்'

என ஆசாரிய சுவாமிகள் பணித்தவாறு உன்னு மடியார் ஊறு துயர் களையுந் திருநீலகண்டத்தின்மே லாணை நிகழ்த்தினமைக்குக் காரணங் காட்டுவார் 'அவர் தங்கண் மனைவி யாரு மருந்ததி கற்பின் மிக்கார்' எனவும் 'திருநீல

கண்டமென்பார்'எனவுங் கூறினர் நாயனர்க்கும் அவர் மனைவியார்க்கும் பிணக்கு ஒன்று மிலலை யென்பார், 'ஆன தங் கேள்வர்' என்ருர். மனைவியார் ஐயமுற்றுக் கேட்கையில தாம் பரத்தைபா லணைந்தமை கூறினு ரென்பார், மேல் 'பொய்கடிந்தறத்தின் வாழ்வார்' என்று சொல்லிவைத்தார் தங்கற்பிற்கும் தங்கேள்வர் ஒழுக்கிற்கும் அடாதவாறு அவர் பரத்தைபா லணைந்து வருதலின் மான முதலியன வாதிக்கப பிணங்கின ரென் பார், 'மானமுன் பொருது வந்த வூடலான்' என்ருர். பெருங்கற்பின ராகலிற் பிணங்கி நின்றவழியும் பணி விடை செய்தலிற் சிறிதும் வழுவிலர், உடனிருக்கவே உடன்படா ராயினா ரென்பார், 'ஏனைய வெல்லாஞ் செய்தே யுடனுறை விசையா ராரு' என்ருர் அங்ஙனம் உடன்படாராயினர்பேரழகின ரென்பார்'திருவினு முருவமிக்கார்' என்ருர நாயனர இன்பச்சுவையுணர்ச்சி மிக்குடைய ராயினும் மனைவியார் பேரழகின ராயினும் தலைமயங்கி அவர் அவரை வலிதின் அணைந்தா ரில்லை, பிணக்குத் தீர்த்தற் பொருட்டு நயமொழி பல கூறித் தீண்ட வணைந்தா ரென்பார, 'வேண்டுவ விரந்து கூறி மெய்யுற வணையும்போதில' என்ருர் மேற்கூறியவாறு திருநீலகண்டமென அப்போதைக் கப்போது சொல்பவ ராகலின் அதன்மே லாணை நிகழ்த்தினா ரென்பார் 'திருநீலகண்ட' மென்ருர் 'தீண்டுவீராயி னெம்மை' எனப் பன்மையாற் கூறியவழி மற்றை மாதர்களையுந் தீண்டாமையாகிய அருஞ்செயல் செய்யப் புக்காரென் பார்,'செயற்கரிய செய்வார் பெரியர்' என் றிருத்தலின்

'ஆணை கேட்ட பெரியவர்' என்றார். பல வாண்டுகள் இருவரும் ஆணைவழி நின்றன ரெனபார், 'யாண்டுகள் பலவுஞ்செல்ல' என்றார் இங்ஙன மெல்லாஞ் சொற்களையும் பொருள்களையும் ஆங்காங்குப் பொருத்திக் கூறியதன் கருத்து யாதோ வெனிற் கூறுதும்:

நாயனார் நல்வினைத்தோடு பழகிச் சிவபத்தி அடியாரபத்திகளிற் சிறந்தார அருந்ததி கற்பும் திருந்திய பொற்புமுடைய மனைவியாரோடு இன்னிலை யொழுக்கின் வழாது நின்றா இளமைப் பருவத்தின் வலிமைக் கழிந்து இன்ப நுகர்ச்சியிற் பெரியவராய்ச் செம்மை நெறியினின்று விலகிப் பரத்தைபாலும் அணைந்தார் நல்வினமும் பத்தியுமுடையார் காமததாற் கட்டினில்லாது செல்லுதன் முறையோ வெனிற; காமம் வலிது, அதனைக் கடந்தார எவரு மிலலை; பிரமாதி தேவாகளையும் முனிவர்களையும் காமம் விட்டிலது இந்திரன அகலிகைபாற் சென்று கௌதமர் சாப மேற்று,

'மருவொரு குறியு ளாரும வான்பெரும் புடவை [கொண்டு
பெருகுறச சூழ்ந்து சூழ்ந்து பெருந்திரோ தானஞ் [செய்வா
ரொருவற வுடம்பு முற்று முளகுறி பல்ல வென்னி
லிருமைமிக் குடையேன் யாதா லெங்ஙன மறைததுவாழ்கேன்'

என்று வருந்தவில்லையா? நகுடன் என்னுஞ் சந்திர குலத்தரசன்,

‘ சுகுடஞ்சோ பரிமகநூ றியற்றிவா னரசுகன்னல்
[சுவைபோற் பெறலுன்
சகுடமபோ லவன்மனதிற் சசிகாமம் பிடித்தலைப்
[பத தலைகீ ழாக
மகுடமபோய் வானகம்போய் வையகம்போ யரசு
[போய் மலைப்பாம் பாக
நகுடன்போ யிறந்தகதை யறியாயோ தெரியாயோ
[நளினத தாரோய்’

என்றபடி, பரி வேள்வி நூறு முற்றி இந்திர பதம் பெற்று இந்திராணிபால் எழுமுனிவர் பொறுத்த சிவிகையி னூர்ந்து அவள்பாற் காமந் தலைக்கேற, முனிவரை நோக்கி, ‘சர்பப, சர்ப்ப’ வெனக் கூறி அகத்திய மாமுனிவரால் ‘சர்ப்பமாகுக’ வெனச சபிக்கப்பட வில்லையா? சந்திரன் குருபத்தினியாகிய தாரை முயக்காற் கயரோகம் பெறவில்லையா?

ஆகலின், நாயனர் இளம்பருவததிற் காம வயத்த ராயது வியப்பன்று அஃதிருக்க, அவர் மனைவி யார் பெருங்கற்பின ராகலின் எவ்வாறேனு ஐயமுற்று வினவ, அவர் நிகழ்ந்தமை நிகழ்நதவாறு கூற, மானஞ் சுசி முதலிய தடுப்ப அவரொடு உடனிருக்க விசைந்தா ரில்லை ..

‘ தோன்றுள் பிறனேக்கா டோகையரைக் காண
[வொட்டா

வீன்று ளெனவன் பியற்றுவாரண—மான்றேயோர்
காரிகையைக் கணனுற்ற காந்தனுடன் சேராளே
சீரியகற் போவாத திரு'

என்பது கற்பிய லாகலானும், ஜனகரும் இராமனுக்குச் சீதையைத் தாரைவார்க்கையில, 'இயம் ஸீதா மம சுதா சகத்ர்ம சரீதவா' அஃதாவது 'இந்தச் சீதை எனது மகள், தருமங்களை உடனிருந்து தலைக்கட்டு வள்' என்றுரே யன்றித் தீவழிச செல்கையினும் உடனிருந் துதவுவள' என்னுமையானும், கற்பினார் மாட்டு இச செய்கை நிகழ்ந்தமையுர் புதுமை யன்று.

அதன்மேல, நாயனார் இன்மொழி பல வழங்கிப் பிணக்கொழிக்க வேண்டி மனைவியாரைத் தொட வணைந்தார்; வலிதின் அணைந்தாரு மலலர் அக காலை அவ் வம்மையார் இருக்கினும் நிற்கினும் நடக்கினுங் கிடக்கினும் குனியினும் நிமிரினும் தும்மினும் இருமினும் 'திருநீலகண்டம்' என்னும் பழக்க முடையராகலின், அத் திருநீலகண்டத்தின்மீது ஆணை நிகழ்த்தினர். அங்ஙனம் நிகழ்த்துழித் 'தீண்டுவீராயின் எம்மை' என பன்மைப் பாலாற் கூறினமையின் நாயனார் அவரையும் பரஸ்திரீபோல நோக்கி 'மற்றை மாதரார் தமையு மென்றன் மனத்திலுந் தீண்டேன்' எனச் சூளியம்பி அக் கணமே காமத்தை வேரொடும் புதையறக் களைந் தெறிந்து பஞ்சவிசக்தராயச சுகப்பிரம்ஹத்தை யொத்தனர். இது வியப்பினும் வியப்பே! புதுமையினும் புதுமையே! நாயகற்கும் நாயகிக்கும்

பிரிவு கண்டுழி மன்மதன் மேன்மேலுஞ் சரமாரி பொழிந்தும் அச் சர மெல்லாங் கல்லின்மேல் விட்ட கல மாயின.

'அங்கார சந்திர்சீ நாரீ கிருதகும்ப சம புமாந்
ஊருஸ்திதாம் ஸ்திரீயம் திருஷ்ட்வா கஸ்ய நோசந்
[சரதே மந:'

மங்கை யொருததி யங்கி நோவ
னொருமக னெயக்குடம் பொருவுவ னென்ப
தனது கவானுறு தையலைக
காணூஉ வெவன்மனங் கரையா தம்ம']

'சூழ்ந்தழல் வதுவை முன்னாச சுற்றுவ தில்ல றத
[தின்
வீழ்ந்ததிற் சுழல்வ காட்டன் மெல்லிய லனலா
[மாந்த
ராழ்ந்தநெய்க் கடமாம் வைகு மகன்றிடி லணுகி'
[னெக்குத
தாழ்ந்திடுந் துயருக் கெல்லாந் தையலார் மூல
மன்றோ'

'உடம்புள்ள மட்டும் விடய மொடுங்காது'

என்னும் உண்மை மொழிகளை யெல்லாம் பொய்படுத்தினர். அம்மையார் சூளுரை கேட்டும் அக் கணந் தொட்டு இருப்புக் கோவணந் தரித்தனர் போலும் அஷ்டவக்ர மஹரிஷி ; என்பார் உத்தரதிக் என்பாளொடு ஒரு சயனத்து இடையில் வாளிட்டுப படுத்து,

'ய்வா யுவதயா சார்ததம் யத்
முக்த பர்த்ருவ தாசரேத

*அந்தர் நிவிர்த்தஸ் ஸங்கஸ்யாத்*
*ஆசிதாரா விரதம் ஹிதத'*

என்னும் இலக்கணமியைய 'அசிதார விரதத்தை' ஓர் ரிரவு அனுட்டித்தமையைப் பாரதம் புகழ்ந்து கூறும் (அசி-வாள்; தாரம்-மனைவி). அங்ஙனமாக, நாய ஞர் பல ஆண்டுகள் அவ் விரதத்தை மேற்கொண்டு ஒழுகினரெனின், எத்தனை அஷ்ட வக்ர மஹரிஷிகள் சேர்ந்து அவருக்கு நேராவரென் றுரைக்கலாம்? தேவர்க்கும் முனிவர்க்கும் யாவர்க்கும் கைகூடாத தொரு செய்கை நாயனர்க்கு எவ்வாறு கைகூடிற் றெனின், அவர் தம் பத்தியின் வலிமையா லெனக. அவரது பத்தியின் வலிமை காமத்தின் வலிமையின் மிக்கது திருநீலகண்டத்தின்மீது வைத்த அவரது பத்தி காமத்தின் றலையை மிதித்தது என்க வென் றுணர்த்தற்கேயாம்.

ஆசிரியர் கருத்தினை நுணித்தறிந்த சிவப்பிரகாச சுவாமிகளும்,

*மதிநுதற் பவள வாய்க்கருந் தடங்கட்*
*குவிமுலைப் பசும்பொற் கொடிதனையமையாக்*
*காதன்மீ தூரக் கலவிசெய் திடுவான்*
*புகும்பொழு தவளொரு பொருமையுட் கிடப்பப்*
*படாமுதிர் வேனிற் பகற்கொடும் பாலை*
*நிலததுநீா வேட்டோ னீரரி தினிற்பெற்*
*றுணபுழி யுணணு தொல்லையிற் றடுக்குஞ்*
*செயலென வெனாீ தீணடே லென்று*

நின்மே லாணை நிகழ்த்திட நீங்கிப்
புணரியுண டெழுந்த புயனிகர் வளர்குழ
லலைந்துறு முகில்போன் றழகுறுங் காலுந்
தீண்டா தொருபூஞ் சேக்கையிற் றுயின்று
மாறு வன்பு வளாமனத தவனே'

எனறனர்

## 20 கதைக் கேற்ப அடிப்படை யிடுதல்

ஆசிரியர்,

" அவ்வுரைகேட் டலுமடவார ரருளுடையா ரளித் [தருளுஞ்
செவ்வியபேரருள்விளம்புந் திறமன்றென றுரை [செய்யார்
கைவருகற் புடைநெறியாற் கணவனுரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல் விடமாட்டார் விதிர் [ப்புறுவார்"

"செய்தபடி சொல்லுவதே கடனென்னுஞ்சீலத்தாள்
மைதழையுங் கண்டர்சே வடிக்கண்மனத் துறவணங [கி
யெய்தவருங் கனியளித்தா ரியாரென்னுங் கண [வனுக்கு
மொய்தருபூங் குழன்மடவார் புகுந்தபடி தனை [மொழிந்தார்"

எனக் காரைக்காலம்மையாரது வாய்மையையும்,

' ஈங்கிவன் குறித்த கொள்கை யிதுவினி யிவனுக் [காகத்

சாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழிந்திங்
[குன்பா
லாஙகுநின் ருள்கள் போற்றுஞ்சேய்வடி வடியே
[னுக்குப்
பாங்குற வேணடு மென்று பரமனைப் பரவி நின்
[ரூர்'

என அவரது மானத்தையும் பற்றிப் பின்னர்க் கதை யின்கண் விரித்தமைக் கேற்ப,

மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினி
லூனமில்சீர்ப்பெருவணிகர் குடிதுவன்றி யோஙகு
[பதி'

என அவரது அறங்களை அவரது குடிமே லேற்றிக் கிளக்கத் தொடங்கின ரென்ப.

## (21) ஐயன்மார்க்கு நேர்ந்த தீங்கினைக் குறிப்பிற் சாற்றல்.

மெய்ப்பொருளுணராது பகைவனுகிய முத்த நாதன் என்பான் அவரை வஞ்சித்துக் கொல்லத் துணிந்தா னென்று சொல்லப் புக்க ஆசிரியர்,

' அப்பெரு வேடங் கொணடே யற்றத்தின் வெல்வா
[ஞ்கச்
செப்பரு நிலைமை யெண்ணித் திருகோவ லூரிற்
[சேர்வான்'

என்றனர்.

ஈண்டுக் 'கொல்ல வெண்ணி' என்றதூஉம் 'செய்ப நிலைமை யெண்ணி' என்றமை காண்க.

பின்னரும், அவன் நாயனாரை வாளால் வீழ்த்தி ஞன் என்று கூறற்கு மாருகப் 'பத்திரம் வாங்கித் தான்முன் னினைந்தவப் பரிசே செய்ய' என்றதூஉங் காண்க. மேல், ஏனாதி நாயனார் புராணத்தும் அதி சூரன் என்னும் நாயனாரது பகைவன் அவரைக் கொன்று னென்னாது 'முன்னின்ற பாதகனுந் தன் கருத்தே முற்றுவித்தான்' என்றனர்.

(22) நாயன்மார்க்குத் தீங்கிழைத்த பகைவரை வைதல் ஏனாதி நாயனார் புராணத்து ஆசிரியர்,

'போன வதிசூரன் போரி லவர்க்கழிந்த
மான மீதூர மணபடுவான் கண்படான்'

என்றனர்.

ஈண்டு 'மண் படுவான்' என்பதற்குத் 'தரை யிற் படுப்பான்' என்ப தொரு பொருள் கொள்ளக் கிடப்பினும், 'மண்ணாய்ப் போவான்' என்னும் பிறி தொரு பொருளு முளது; உலகர் 'படுவான்' என் றும் 'பட்டுக்கிடப்பான்' என்றும் 'மண் படுவான்' என்றும் 'மண்ணாய்ப் போவான்' என்றும் வைதல் கேட்குது மாகலின்.

மேலும், 'முன்னின்ற பாதகனுந் தன்கருத்தே முற்றுவித்தான்' என்றவழி அவனையே 'பாதகன்'

என்றமையுங் காண்க. இனித் திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் தீங்கு செய்ய முயன்ற சமணரைப் 'பொய்யொழுகு மமண்குண்டர்' 'புல்லறிவோர்' 'முதிரவரும் பாதகத்தோர் முடைவாயான் மொழிநதார்கள்' எனப் பலபடி வைதமையுங் காண்க.

(23.) காரணமின்றியே காதல்கூர்ந்தா ரெனல்.

கண்ணப்ப நாயனார் பன்றியைக் கொன்று பொன் முகரியாற்றங் கரை நோக்கிச் சென்று திருக்காளத்தி மலைச்சாரற் சோலையை அரைக் காவதத்திற் கண்ட வழிக் காரண மின்றியே காதல் கூர்ந்தன ரென்பார்,

'ஆவதெனிதனைக் கண்டிந கணைதொறு மென்மேற் [பாரம்
போவதொன் றுளது போலு மாசையும் பொங்கி [மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா [நிற்குந்
தேவரங் கிருப்ப தெங்கே போகென்றார் திண்ண [னார்தாம்.'

என்றனர்.

பெரும்பற்றப்புலியூர் நம்பிகளும், திருவாதவூரடிகள் திருப்பெருந்துறை யெல்லைை யணுகிய வழிக் காரணமின்றிக் காதல் கூர்நதமையை,

'அர்ரக ரணையா முன்ன ரங்நெஞ் சுரைவே றாகித்
துன்னுபே ரன்பு நீடத் துணைவிழி யருவி பாய

வுன்னரு மயிர்சி லும்ப வுயர்கரங் குவிய வா'ரு
வன்னிசேர் மெழுகே யென்ன வுருகினர்வாதவூரார்

என்னும் பாவிற் றெரித்தனர்.

கம்பரும், ஆஞ்சநேயர் கிஷ்கிந்தையின்கண்முதன் முதல் இராமனை யணுகியவழிக் காரணமின்றிக் காதல கூர்ந்தமையை,

'துன்பினைத துடைத்து மாயத தொல்வினை தன்
[னை நீக்கித
தென்புலத தன்றி மீளா நெறி யுய்க்குந் தேவ
[ரோதா
மென்பெனக் குருகுகின்ற திவாகின்ற தளவில்காத
லன்பினுக் கவதி யில்லை யடைவென்கொ லறித
றேற்றேன்

என்னுங் கவியி னமைத்தனர்

(24) இடத்திற்குத் தக ஈசற்குப் பேயர் வைத்தல்

'காதலுன் மகனைப பற்றிக் குளத்தினின் மூழ்
[கிப்போ'

என்றவழி மனைவியார் முயக்கமேயின்றிக் காலமெல் லாங் கழித்த நாயனாரை நோக்கி, 'காதலுன் மகனைப் பற்றி' என்றது கொடுமையாமெனற் கிட மிருத்தலின், ஈசனை யீண்டுக் 'கொடுமையிலலான்' என்றனர்

'வழிவிடுந் துணையின் போத வழித்துணை யாகி

யுள்ளார்' என்றார் எல்லாவுயிர்கட்கும் முத்தி நன்னெறியின் றுணையாய் நிற்பவனாகிய அவன்றான தனக்கு நாயனார் வழித்துணையாக வரச் சென்றமையி னென்க

இனி, குந்தள தேயத்தினின்று மிளகு வாணிபஞ் செய்யக் காஞ்சிக்குச் செல்கையில் இடைப்பட்ட திருவிரிஞ்சையிற் றங்கி ஆறலைப்போர் உண்டெனக் கேள்வியுற்று,

'வைத்த வான்பொதி பறிபடா வகைதுணை வந்தாற
பத்து வான்பொதி மிளகுன தாம்'

எனப் பரவிய தனபாலன் என்னும் வணிகற்குக் குதிரைச் சேவகனாய் வழித்துணை சென்றமையாற் றிருவிரிஞ்சைப் பெருமாற்கு 'மார்க்க சகாயர்' என்னுந் திருப்பெயர் வழங்குதலின் அது நோக்கி ஈண்டு 'வழித்துணையாகியுள்ளார்' என் றிடத்திற் கேற்பக் கூறினா ரென்பாரு முளர்.

## (25.) கூறுவான் தகுதிக் கேற்ற மொழிகளைப் பெய்துரைத்தல்

வேட்டுவக்குல நாயனன் மொழிகளாகக் 'கோணமில் குடுமித் தேவ ரிருப்பதுங் கும் பிடலாம்,' 'ஒன்றிய விலைப்பூச் சூட்டி யூட்டினான் பறைந்தோர் பார்ப்பான்,' 'அன்றிது செய்தா னின்று மவன் செய்தானாகும்,' 'அங்கிவன் மலையிற் றேவர் தம்மைக் கண் டணைத்துக்

கொண்டு, வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீங்கான்' என்பவற்றைப் பொருத்தினமை காண்க

(28. நாட்டிற்கேனும் நகர்க்கேனும் ஓரியல் கூறி அரும்பொரு ளொன்று தோற்றுவித்தல்

திருமுனைபபாடி நாட்டின் சிறப்புக் கூறவெழுந்த ஆசிரியர்,

'மங்கையா வதன சீத மதியிரு மருஙகு மோடிச
செங்கயல் குழைக ளோடு திருமுனைப் பாடி நாடு'

என அந் நாட்டு மகளிர் அழகின் மேம்பாட்டினைக் கூறிப் பரவை நாய்சசியாா கழி பேரழகின ரெனல் தோற்றுவித்தா ரென்க. என்னை? அழகுடை மகளிர் நிறைந்தவொரு நாட்டின்கண் அவதரித்த சுவாமிகள் ஒரு மக ளெழினலத்தைக் கண்டு மயங்கின ரெனின் அஃதவ்வெழினலம் இருந்தவா றுணர்த்திய தன்று? மேல், பூம்புகலூரின் சிறப்புக் கூற வெழுந்த ஆசிரியர்,

'நணணு மிசைதோ மதுகரங்க ணனமென் சினை
[யின் மருங்கலைய
வணண மதுரத தேன்பொழிவ வாச மலர்வா யே
[யல்ல
தணணென் சோலை யெம்மருங்குஞ் சாரு மட
[மென் சாரிகையின்
பணணின் கிளவி மணிவாயும் பதிகச செழுந்தேன்
[பொழியுமால்'

என அவ்வூரிற் பூவைகளும் பதிகச் செழுந்தேன் மணி

வாயாற் பொழிதல் கூறினமையின் முருக நாயனர் அஞ் செழுத் தோதுதலின் ஏற்றந் தோன்றுதல் காண்க

## (27) பழமொழிக ளுரைத்தல்

'ஊனுக்கூன்' 'பொடி மூடி தழல்' முதலிய பழமொழிக ளாங்காங்கு அமைந்திருத்தல் கண்டு கொள்க.

## (28) இருபொருள் பெறவைத்தல்

'செப்ப லுற்ற பொருளின் சிறப்பினு
லப்பொ ருட்குறை யாவருங் கொள்வரா
லிப்பொ ருட்கென் னுரைசிறி தாயினு
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வா மேன்மையால்'

என்னுந் திருப்பாவிற்கு இருபொருள் கூறப்படுமன்றோ

'சொல்லுகின்ற பொருளின் மேன்மைபற்றிக் (கேட்போர்) யாவருஞ் (சொற்களிற் குறையிருப்பினும்) அப் பொருட் கின்றியமையாத சொற்களை அமைத்துக் கொள்வர்; ஆகலின், (யான் சொல்ல நின்ற) இப் பொருளின் மேன்மைபற்றி மெய்ப்பொருளை யறிதற் குரியார் இப் பொருட்கு எனது சொற்கள் போதா வெனி' னும் (வேண்டியவற்றைப்) பெய்து கொள்வர்' என்பது தோன்று.

'சொல்லுகின்ற பிள்ளையின் மேன்மை பற்றி அச் சொல்லிய பொருட்கு இன்றியமையாத சொற்களை

யாவரும் வருவித்துக் கொள்வர்; அங்ஙன மன்றி, யான் (எடுத்துக்கொண்ட) இப்பொருட்கு என் சொற்களும் போதா வெனினும் பொருளின் மேன்மைபற்றி (வேண்டுஞ்) சொற்களை வருவித்துக் கொள்வர்' என்பது மற்றொன்று. 'பொருள்' என்னுஞ் சொல் இப்பொருட் டாதலை 'தம்பொரு ளென்ப தம்மக்க ளவர்பொரு, டந்தம் வினையான் வரும்' என்னுந் திருக்குறட் பாவானும்,

'நகைை நீ நடக்கல் வேண்டு நன்பொருட் கிரங்கல்
[வேண்டா'

என்னுஞ் சிந்தாமணி யடியானுங் கண்டு கொள்க.

சொலவோன் மேன்மையை 'வக்த்ரு வைலக்ஷண்யம்' என்றும், பொருளின் மேன்மையை 'விஷய வைலக்ஷண்யம்' என்றுங் கூறுப வடநூலார்

இனி,

அருளி னீர்மைத திருத்தொண் டறிவருந்
தெருளி னீரிது செப்புதற் காமெனின
வெருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய
பொருளி னுகு மெனப்புகல் வாமரோ'

என்னுந் திருப்பாவின்கண் முன் னிரண் டடிக்கு இருபொருளும் பின் னிரண் டடிக்கு இருபொருளுங் கூறுப புலவர்.

'அருட் டன்மையையுடைய திருத்தொண்டினை அறியத்தக்க தெளிவுடையீர (ஆகலின்). இத் திருத்தொண்டர் புராணத்தைச் செபபுதற்குக் கூடும்' எனப் பதப பொருளுரைத்து, இது 'கற்கறிக்க நன் கட்டாய்' என்புழிப் போல 'அருட்டன மையை யுடைய திருத்தொண்டினை அறியத்தக்க தெளிவிலீர் (ஆகலின்) இத் திருத்தொண்டர் புராணத் தைச் செபபுதற்குக் கூடாது' என்னும் பொருளுணர்த்திற் றென்ப. அங்ஙனங் கொள்ளின், குறிப் பெசச மென்க. வடநூலார் இதனை 'விபரீத லக்ஷணை' என்பர்

அன்றி, 'அருட் டன்மையை யுடைய திருத் தொண்டர் புராணத்தைச் செபபுதற்கு ஆமோ?' எனக் 'காகு' என்னும் இலக்கணம் பற்றி உரை கூறலுமொன்று. 'காகு' என்பது சோகம், பயம் முத லியவற்றை யுணர்த்தற் கெழுந் தொனி விகாரமாம். அஃது ஈண்டு எதிர்மறுத்தலை யுணர்த்தி நின்ற தறிக

தும்முச் செறுப்ப வழுதா ளுமருள்ள
லெம்மை மறைததிரோ வென்று'

என்னுந் திருக்குறட் பாவிற்குப் பரிமேலழக ருரை காண்க இனி, பின் இரண் டடிகட்கு,

மயக்கமில்லாத 'உலகெலாம்' என்னும் மெய்ம் மொழியை அசரீரி கூறிய தன்மையின் முடியுமென்ப் புத்தல்வாம்' என்னும் பொரு ளொன்று. . .

மயக்கமில்லாத (வேத சிவாகமங்களாகிய) மெய்ந் நூல்களை மொழிவானாகிய சிவபெருமானது நீழலாகிய அசரீரி கூறிய தன்மையின் முடியு மெனப் புகல்வா' மென்றாதல், மயக்கமில்லாத (வேதசிவாகமங்களாகிய) மெய்ந்நூலகளை மொழிவானாகிய சிவபெருமானது நீழலாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த 'திருத்தொண்டத்தொகை' யுண்மையின் முடியு மெனப புகல்வா' மென்றாதல கூறலுமாம்.

இயற்பகை நாயனார் புராணத்துள் நாயனார் தம் மனைவியாரைக் கைக்கொண்டு அவரைத் துணை செல்லுமாறு கேட்ட பெருமானை நோக்கி 'சாதி வேதியராகிய தலைவர்' என்றா ராண்டுச 'சாதிவேதியர்' என்னுந் தொடா 'உயர் சாதி வேதியர்' எனவும் 'ஒழுக்கத்தானன்றிப பிறப பொன்றானே வேதியா' எனவும் பொருள்படுத லறிக

> அநதிலேயே யுயிர்பிரிந்த வான்கன்று மவ்வரசன்
> மன்னுரிமைத தனிக்கன்று மந்திரியு முடனெழலு
> மின்னபரி சானெனன றறிந்திலன்வேந் தனும்
> [யார்க்கு
> முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளு
> [ளதோ'

என்னுந் திருப்பாவின் ஈற்றடிக்கு,

'(யாவர்க்கு) முன்னவனாகிய பெருமானே முன்னின்றான் (ஆகலின்) முடியாத பொருளுண்டோ' என

வும், '(யாவர்க்கு) முன்னவனாகிய பெருமானே முன் நிற்பின் முடியாதபொருளுமுண்டோ' எனவுங் கூறுப மேற்காட்டிய பொருளே சிறப்பிற் றென்க

' ஆற்றினீர் கடுகே வோடு மருங்குற வரச னேக்கி
நீற்றணி நிகழ்ந்த மேனி நிறைமதிப் பிள்ளையாரும
வேற்றரு வருகர் நீரும் விதித்தவே டுகே வென்
[றுன்
றேற்றவா தோலா ரென்று முன்னுறத் துணிந்திட்
[டார்கள் '

எனனுந் திருப்பாசுரப் ஸ்ரீற்றடி, '(முன்னர்த்) தோற்றவ ராகிய சமணர்கள் தோலா (ஆதாவது வென்றார்) ரென்று முன் வருதற்குத துணிந்து (தம் ஏட்டினை ஆற்றின்) இட்டார்கள்' எனவும், '(முன்னாத்) தோற்ற வரே (பின்னர்த்) தோலா ரென்று மிகத் துணிந்து (பிள்ளையார் ஏடு இடு) முன்னர்த் தமது ஏட்டினை இட்டார்க' ளெனவும் இருபொருள்படுதல் காண்க

## (29.) பல் பொருள் பெறவைத்தல்

மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திடத
தீதி லாததிருத் தொண்டத் தொகைதரப
போது வாரவர் மேன்மனம் போக்கிடக்
காதன் மாதரு காட்சியிற் கண்ணினர் '

என்னுந் திருப்பாசுரப் ஸ்ரீற்றடிக்குப பெரியோர் கூறும் பல் பொருள் காண்க

(i) காதற் கிடமாகிய மாதர், அல்லது, காதலைச்

செய்யும் மாதர், அல்லது, காதற் கேற்ற மா தா (சுவாமிகளின்) வடிவழகினல் (அவரைக் கண்ணினர் அஃதாவது நினைத்தார்

(ii) காதன் மாதரும் அவரது வடிவழகின்கட் கண்ணின ராயினர், அல்லது, அறிவின ராயினர்

என்டு 'இருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்' என்றிருத்தற் கேற்ப, ஆக்கமுங் காரணமு மில வாயின

(iii) காதன் மாதரும் வடிவழகை நினைத்தா என்டுக் 'காட்சியின்' என்பது வேற்றுமைமய க்க மென்க

(iv) காதன் மாதருந் (தாங்) கண்டவண்ணமே நினைத்தார்.

(v) காதன் மாதருஞ் சுவாமிகள் கண்ணின்பால் அல்லது பார்வையின்பாற் றங் கண்களை வைத்தார்;

இது,

'கணமென்டு கணணிணை நோக்கொக்கின் வாய்ச ளைனன பயனு மில' [சொற்க

என்னுந் திருக்குறட் பாவின் கருத்தோ டொத்திருத்த லறிக.

இனி,

வலலாண மையின்வண டமிழ்நாடு வளமபடுதது
நில்லா நிலையொன்றிய வின்மையி னீணட மேரு
வில்லா னடிமைத் திறமேவிய நீற்றின் சார்பு
செலலா தருகந்தா திறததினிற் சிந்தை தாழ்ந்
[தான்'

என்னுந் திருபபாவி னிரண்டாமடிக்கு,

(i) வறுமை (அத் தமிழ் நாட்டில்) நில்லா நிலை யைப் பொருந்தினமையால அஃதாவது பாண்டும் நிலலாமையின்' எனவும்,

(ii) (தன்) வில்வன்மையின் நிலலா நிலையைப் பொருந்த' எனவும்,

(iii) '(பகைவர்களாகிய முபபுரத்தோர் எதிர் வணங்கி) நில்லாத தன்மையொடு பொருந் திய விற் றன்மையில்லாத' எனவும்

(iv) 'அறிவினமையால் நில்லா நிலையைப் பொ ருந்த' எனவும் பொரு ளுரைப்பர்.

(30) குறிப்புப்பொருள் பெறவைத்தல்

'கொற்ற வாழி குவலயஞ் சூழ்ந்திடச
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச
செற்ற நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெய ராக்கினோன்'

என்னுந் திருப்பாவின் பின்னிரண்டடிக்குப் பொருள்

'பகைமை நீக்கிய செம்மையினையுடைய' அல்லது, 'பகைமை நீக்கிய செம்மையில்லாத' அல்லது, பகைமை நீக்கிய செம்மையினால் ஒன்றான மனுப் பெற்ற நீதியை யும் 'மனுநீதிகண்ட சோழன்' எனத் தன பெயரால வழங்குமாறு செய்தான்

இதன்கட் குறிப்புப பொருள்க ளாவன:,

(i) மனு நீதியைப் பெற்றான் அஃதாவது பிதா வென்னின், இவன் அந் நீதிக்குப பெயராக் கினான் அஃதாவது பேரன் அஃதாவது பாட்டன் என்பதாம்,

(ii) மனு நீதிக்குச் சனக னென்னின், இவன் அந்நீதியை ஸ்வீகரித்தான் என்பதுமாம்

'என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செய [விசைந்தே
னன்னியனே ருயிர்கொன்ற லவனைக்கொல், [வேனானற்
றான்மனுநூற் றுடைமனுவாற் றுடைப்புண்ட தெனும்வார்த்தை
மன்னுலகிற் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக் [கென்றான்'

என்னுந் திருப்பாவி ஸீற்றடிக்கு,

'நிலைபெற்ற உலகின்க ணுண்டாக மந்திரிகள் வழக்கு மொழிந்தீர்களென்றான்' என்றும், 'நிலைபெற்ற உலகின்க ணுண்டாக மொழிந்தீர்கள், இங்ஙனம்

மொழிவது மந்திரிகளுக்கு வழக்கமென்றான்' என்றும் பொருள் கூறி 'மந்திரிகள் வழக்கு' என்றதனால் இஃது அரசர் வழக்கு அஃதாவது ராஜசம்பிரதாயம் ஆகாதென்னுங் குறிப்புப் பொருளுங் கூறுப.

'பூவணத் தவரை யுற்றா ரவரலாற் புரங்கள் செற்ற
வேவணச சிலையினாரை யாரதொடர்ந தெட்ட
[வல்லார்'

என்புழிப் 'பூவணத்தவரை' என்பதற்குத் 'திருப்பூவணமென்னுந் திருபபதியின்கண் எழுந்தருளியிருக்கும் பெருமானை' என்பது பொருள்.

பூ வண்ணம் மென்மையாகலின், 'மென்மை மிக்க அவ் விருத்தரை' என்பது அதன் குறிப்பு இன்னும், பூளைப்பூப் போன்றார்' என்பது குறிப பெனபாரு முளர், பூளைப்பூ மெல்லிதாதலை 'பூளைப்பூ வாம்பிறவி' என்னுந் திருநாளைப்போவார நாயனார் புராணத்து வருந் தொடரானும்,'

ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை யின்றுபோய்ப் பொரற்கு
நாளை வாவென நல்கினா னாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்'

என்னுங் கம்பராமாயணப் பாவானு மறிக.

'குழைமறை காதினானைக் கோதிலா ரூரர் நோக்கிப்
பழையமன் றாடி போலு மிவனென்று பணபின்
[மிக்க

விழைவுறு மனமும் பொங்க வெண்ணெய்நல் லூரா
[யேனுன்
பிழைநெறி வழக்கை யாங்கே பேசநீ போதா
(வென்றார்'

என்னுந் திருப்பாவின்கண்,

'பழைய மன்றாடி' 'என்பதற்குப் 'பழைய வழக்காடி' என்பது பொருளும், 'பழைய சிற்சபையி லாடு வான்' என்பது குறிப்புமாம்

அன்னவின் மொழிகள் சொல்லி யமுதுசெய் வித்த
[வேடர்
மன்னனூர் திருக்காளத்தி மலையினார்க் கினிய
[நல்லூ
னின்னமு வேண்டு மென்று மொருபெருங் காதல்
[கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையிற்
(றாழ்ந்தான்'

என்னுந் திருப்பாவி னீற்றடிக்குச் 'சூரியன் அஸ்தகிரியின் மறைந்தன' னென்பது பொருளும், அவ் வேடர் பெருமானைப் பல நீண்ட கைகளையும் கூப்பித் தொழுது மலையின்கண் வணங்கினா னென்பது குறிப்புமாம்.

## (31) உள்ளுறை பெறவைத்தல்.

'ஊன டைந்த வுடம்பின் பிறவியைத்
தான டைந்த வுறுதியைச சாருமாற்
றேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மான டஞ்செய் வரதர்பொற் றாடொழ'

என்னுந் திருப்பாவின்கண் மூன்றாமடிக்கு 'அறுகா

லாகிய தேன்வண்டுகள் நெருங்கிய மலர் நிறைந்த சோலை சூழ்ந்த தில்லையுள்' என்பது பொருள்

'அறுதொழிலாளராகிய அந்தணர் நெருங்கிய பேரின்பங் கோத்த தில்லையுள்' என்பது உள்ளுறையாம்

'தந்தைநிலை யுட்கொண்டு தளர்வு கொண்டு
தங்கள்குலத் தலைமைக்கோர் சார்பு தோன்ற,
வந்தகுறை பாடதனை நிரப்பு மாறு
மனங்கொண்ட குறிப்பினான் மறாமை கொண்டு,
முந்தையவன் கழல்வணங்கி முறைமை தந்த
[illegible]ற்சுரிகை யுடைதோலும் வாங்கிக் கொண்டு.
சிந்தைபரங் கொளநின்ற திண்ண னார்க்குத
திருத்தாதை முகமலர்ந்து செப்பு கின்றான்'

என்னுந் திருப்பாவிற்கு,

(நாகனென்னுந் தமது) சோபாதிக பிதாவின் (மூப்பினாற் றளர்ந்த) நிலைமையை யுட்கொண்டு மனஞ் சோர்ந்து தமது வேடர்குலத் தலைமைக் கொருபற்றுக் கோடு தோன்று மாறும் (திங்கண் முறை வேட்டைவினை தாழ்த்தமை பற்றி) வேடர்க்கு வந்த மனக் குறையை நிறைக்கு மாறுந் தமது திருவுள்ளங் கொண்ட குறிப்பினான் (தந்தையின் சொல்லை) மறாது கொண்டு முன்பு அவன் கழல் கட்டிய அடிகளில் வணங்கி மரபிற் கேற்பத் தந்த பழைய உடை வாளையுந் தோலுடையையும் ஏற்று, மனத்திற் பாரந் தோன்ற நின்ற திண்ணனார்க்குத் திருத்தாதையாகிய அந் நாகன் முகமலர்ந்து சொல்லுகின்றான்' என்பது பொருள்.

நிருபாதிக பிதாவாகிய பசுபதியின் பார்த்வ சௌலப்ய நிலைகளையுட் கொண்டு அவனை யடையப் பெறுமையான் மனஞ் சோர்ந்து அடியார் குலத்தின் றலைமைப் பதவிக்கு ஒரு பற்றுக்கோடு தோன்றவும், (முற்பிறப்பிற் செய்யாது) விட்ட குறையை நிறைக்குமாறும் மனங்கொண்ட குறிப்பினன் (அரசுரிமையை) மறுது பெற்று, முன்னவனாகிய அப பரமபதியின் கழல் வணங்கி மரபிற் கேற்பப பழைய உடைவாளும் தோலுடையும் ஏற்றுச் சிந்தை பாரங் கொள்ள நின்ற திண்ணனார்க்குத் திருத்தாதை யாகிய நாகன் முக மலர்ந்து சொல்லுகின்றான்' என்பது உள்ளுறை யென்க 'தங்கள் குலம்' என்பது அடியார் திருக் கூட்ட மென்க,

" சிலம்பணி கொணடசெஞ் சீறடி பங்கன்றன் சீரடி
[யார்
குலம்பணி கொள்ள வெனைக் கொடுத் தோன் கொ
[ண்டு தானணியுங்
கலம்பணி கொணடிடமம்பலங் கொண்டவன் கார்
(க்கயிலைச்
சிலம்பணி கொண்டநுஞ் சீறூர்க் குரைமின்கள்
(சென்னெறியே

என்னுந் திருக்கோவையார் அடிகளில் 'அடியார் குலம்' என்றிருத்தல் காண்க.

'உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த யோகமே
யூத்தையேன் றனக்கு

வம்பெனப் பழுதத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
யெம்பொருட் டுன்னைச சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே'

என்னுந் திருவாசகப் பாசுரத்தும்,

'உன்குல முன்னதாக்கி யுயாபுகழ்க் கொருத்தியாய
தன்குலந் தன்ன தாகக்கித் தன்னையித் தனிமை
(செய்தான்
வன்குலங் கூற்றுக் கீந்து வானவர் குலத்தை வாழ்
[வித்
தென்குல மெனக்குத் தந்தா ளென்னினிச செய்வ
[தெம்மோய'

என்னுங் கம்பராமாயணக் கவியினும் முறையே 'என் குடி' 'என் குலம்' என்பன 'அடியார் கூட்டம்' எனப் பொருள்படுத லுணர்க

அவ் வடியார் குலத்தலைமைக் கொரு சார்பு தோன்ற லாவது அடியார் திருக்கூட்டத்திற் கொரு தலைவ னுண்டெனற் கிடனுதல் அடியார் திருக்கூட்டத் திற்குத் தலைவர் யாவரெனிற் கண்ணப்ப நாயனுரெனற் கிடனுய தறிக

'கணணப்ப னொப்பதோ ரன்பின்மை கணடபி
னென்னப்ப னென்னொப்பி லென்னையுமாட்கொ
[ண்டருளி

வணணப் பணிதலென்னை வாவென்ற வான்கரு
[ணைச்
சுணணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்து
[மபீ'

எனத் திருவாதவூரடிகள் அருளிச்செய்தமை அதனை வலியுறுத்துமாறு காண்க குறைபாடாவது தவக்குறை அஃதீண்டு விட்டகுறை யென்க அதனை நிரப்புதலாவது அதனைச் செய்து முடித்தல்

மனங்கொண்ட குறிப்பாவது காரண மின்றியே மனத்தின்கண் நிகழு மோ ரெண்ணம்

'மறுமை கொண்டு' என்றது நாயனர் அரசவின்பத்தினை ஒரு சிறிதும் வெஃகினு ரில்லை யென்பது தோன்ற நின்றது

'சிந்தை பரங்கொள நின்ற' என்றது (அங்ஙனம் அரசவின்பத்தினை ஒரு சிறிதும் வெஃகாமையின்) அரசுரிமையைப் பாரமாகக் கொண்டா ரென்பது குறித்து நின்றது.

இங்ஙனம் அரசுரிமை இராமற்குப் பார மாயதனை,

'ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகடாங்கித் தாங்கருந் தவமேற் கொ
[ண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைகளாடி
யேழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரச
[னென்றான்'

'இப்பொழு தெம்மனோராலியம்புதற்கெளிதேயாருஞ்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்
[கி'
லொப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
வப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்
[மா'

(முன்பு பின்பு ஒப்பதே - ஏறக்குறைய ஒப்பதே)

'தெருளுடை மனத்து மன்ன னேவலிற் றிறம்ப
(வஞ்சி
யிருளுடை யுலகந் தாங்கு மின்னலுக் கியைந்து
[நின்று
னுருளுடைச் சகடம் பூண்ட வுடையவ னுய்த்த கா
[ரே
றருளுடை யொருவ னீக்க வப்பிணி யவிழ்ந்த தொ
[த்தான்'

என வரூஉம் பாக்களா னறிக

இத்தகைய அன்பர் தலைவரைப் பெற்ற புண்ணிய
னென்பார் 'திருத்தாதை' என்றார்

## 32. கருத்துடையடையுந் தகுஞ்சொல்லும் புணர்த்தல்

மனுச்சோழன் சரிதத்தில்,

'வளவனின் புதல்வ னங்கோர் மணிநெடுந் தேர்மே
(லேறி
யளவிறேர்த் தானை சூழ வரசுலாந் தெருவிற் போகக்
[கா

விளையவான் கன்று தேர்ககா லிடைப்புகுந் திறந்த
(தாகத்
தளாவுறு மிததாய வந்து விளைததிித தன்மை யெ
(ன்ருன்'

எனருர்

நீ 'செம்மையா' யென்பான் 'வளவ' எனவும், நீ பெற்ற பிள்ளையாகலின் 'மகனறிவு தந்தையறிவு' என்னும் மூதுரைபபடி அவனுஞ செம்மையுடையன், தீங்கு செய்யா னென்பான் 'நின் புதல்வன்' எனவும், எந்தப் பிராணியும் மணியோசை கேட டொதுங்கவும் பலதேர்கள் புடைசூழவும் அகன்ற வீதியிற் சென்ருகைலின் இவன் ஒருகாற் செய்ய எணணினு னெனினும் அதற்கிடமில்லை யென்பான் 'மணிநெடு தோமே லேறி அளவிறேர்த் தானை சூழ வரசுலாந் தெருவிற் போங்கால்' எனவும், துள்ளுத லதற் கியல பென்பான் 'ஆன் கனறு' எனவும, பயமறியா தென்பான் 'இளைய' எனவும், தானே வந தகபபட்ட தென்பான் 'புகுந்து' எனவும், இவ் வான் தன் கன்றை இழந்ததனுலாகிய மனச சோர்விற் செய்த தன்றி முறை வேண்டிச செய்திலதென்பான் 'தளர்வுறு மித்தாய்' எனவும், அங்ஙனஞ சோர்விஞல் அறியாது செய்தது கெடுதியே யென்பான் 'விளைத்தது' எனவும், கன்றிழந்து கதறும் ஆன் கெடுதி செய்ததெனக் கூறின் அரசன் வெகுள்வகுகலின் 'இத் தன்மை' எனவுங் கூறினு னென அமைசசன்மேல வைத்துக் கூறுதல காண்க

திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தில்,

மாலைவெணகுடை வளவர்சோ ணாட்டுவெணபுகலிச
சூல பாணிபான் ஞானம்பெற் றானென்று சுருதிப
பால னன்பாதங் குழாததோடும பணிமுததின்
[சிவிகை
மேல ணைந்தன னெஙகளை வாதினில் வெல்ல'

எனச் சமணர்கள் பாண்டியற் குரைத்ததாகக் கூறினா

செல்வ மிக்க சோழாகளாகிய நின்பகைவர் நாட்டின்கண் ஒ ரு ருறைவானென்பார் 'மாலை வெண்குடை வளவர் சோணாட்டு வண்புகலி' எனவும், தாமதத் தொழிலாகிய போர்த்தொழிலுடைய னென்பார் 'சூல பாணி' யெனவும, அவன்பான் ஞானம் பெறுதல கூடா தாயினும் பெற்றதாக நினைத்தா னென்பார் 'ஞானம் பெற்றானென்று' எனவும், நாம் வெறுக்கத் தக்கதாகிய வேத மோதியவ னென்பாா 'சுருதிபபாலன்' எனவும, அவனும் இளமைப் பருவத்த னென்பார் 'பாலன்' எனவும், பாலனாயினும் அன்பர் பல்லோர் சூழ ஆடம்பரத்துடன் வந்தன னென்பார் 'அன்பர்தங் குழாத் தோடும்' எனவும், நீயும் நின்னைப் போலும் அரசரும ஊர்தற் குரிய சிவிகை மேல் வந்தன னென்பார் 'பணி முத்தின் சிவிகைமே லணைந்தனன்' எனவும், இத்தனை பெயர்களாகிய எங்களை யெல்லாம் வாதினில் வெலல அவ வொரு பாலன் வந்தன னென்பார் 'எங்களை வாதினில வெல்ல' எனவும் அரசற்குக் கோப மூட்டக் கூறத்

தருஞ் சொற்களை யெல்லாம் புணர்த்தமை சால வழகி தா மென்க

> மேவிய காதற் றொண்டு விரவுமெய் விருத்திபெற்று
> ராவியின விருத்தி யான வந்தணர் புலியூர் மன்றிற
> காவியங் கண்டார் கூத்துக் கண்டுகும் பிடுவதென்று
> வாவிசூழ் தில்லை மூதூர் வழிக்கொள்வான் வணங்
> [கிப் போவார்'

என்றார்

சுவாமிகள் திருத்தொண்டு விருப்பு மேவிய தொண் டென்பார் 'மேவிய காதற் றொண்டு' எனவும், அத் தகைப தொண்டே உடம்பின் பய னென்பார் 'விரவு மெய் விருத்தி' யெனவும், உடம்பின் பயன் அஃதாக உயிரின் பயனாவது திருக்கூத் தென்பார் 'ஆவியின் விருத்தியான கூத்து' எனவும், திருக்கூத்து பல மன் றங்களின் நிகழுமேனும் அங்ஙனம் உயிரின் பயனாவது தில்லையிற் றிருக்கூத்து எனபார் 'புலியூர் மன்றில் கூத்து' எனவும், அத் திருபபதி 'நாடாகொன்றோ காடா கொன்றோ, வவலா கொன்றோ மிசையா கொன் றோ, எவ்வழி நல்லவ ராடவ, ரவ்வழி நல்லை வாழிய நிலனே' என்றபடி 'கற்றாங் கெரி யோம்பிக் கலியை வாராமே செற்றா' ராகிய அந்தணர் வாழ்தலிற் சிறந்த தென்பார் 'அந்தணா புலியூர்' எனவும், அத் திருக்கூத் துப புரிபவன் உயிர்களை யெல்லாம் ஒருங்கே யுண்ணச் சீறி யெழுந்த நஞ்சினைத் தா னுண்டு காத்த அழகு திகழுங்கண்டத்த னென்பார் 'காவியங் கண்டர் கூத்து'

எனவும், அக்கூத்தினைச் சுவாமிகள் எஞ்ஞான்றும் யாண்டுங் கும்பிடுவரேனும் நேரிற் கண்டு கும்பிட வெண்ணின ரென்பார் 'கண்டு கும்பிட வென்று' எனவும், அத் திருப்பதிக்கு வழிக்கொள்கையினும் வணங்கி வழிக்கொண்டன ரென்பார் 'வழிக்கொள்வான் வணங்கிப் போந்தார்' எனவுங் கூறுதல் காண்க

(33) ஒரு சொல் பல்லாறு பிரிந்து பல பொருள்பட மொழிதல்

'பேர்பரவை பெணமையினிற் பெரும்பரவை விரும் [பல்கு
லார்பரவை யணிதிகழு மணிமுறுவ லருமபரவை
சீர்பரவை யாயினு டிருவுருவின் மென்சாய
லேர்பரவை யிடைப்பட்ட வென்னுசை யெழு [பரவை.'

என்னுந் திருப்பாவிற்குப் பொருள்:

'பெயர் பரவை யென்பது, பெண்டன்மையிற் பெருமை பொருந்திய தேவாக்குத் தெய்வமாகிய இரதி, விரும்பு முறைப்பாகிய அல்குலினது பரப்பு ஆதிசேடன் படம், அழகு விளங்குகின்ற முத்தைப் போன்ற பற்கள் (முல்லை) யரும்புகள், பரவை என்பது தனக்குக் கூத்தாக வுடையளாகிய (இந்த) இலக்குமியின் றிருவுருவின் மெல்லிய சாயலி னழகு (ஒரு) கடல்; அதன்கண் விளைந்த எனது ஆசை எழுகடல்' என்பது.

இதற்குப் பிற பொருள் கூறுவாரு முளர்.

'பெண்மையினிற் பெரும்பரவை'

என்றது இரதியை யென்க; ஆசிரியர் முன்னும்,

'கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவா
[ழ்வோ'

என்றமையும்,

வில்லிபுத்தூரர்,

'பெணமைக் கிரதி யெனவந்த பெண்ணா ரமுதே'
என்றமையுங் காண்க.

பெரும்பா என்பது விகாரம் 'அரும்பரவை'
என்புழி 'அவை' பகுதிபொருள் விகுதி

மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்க
ளுந் தமது 'சேக்கிழார் பிள்ளைத் தமி'ழுள்,

'குறையுடைய பாம்பொன றெடுத்துண டுமிழ்ந்தி
குலைகுலைந் துழல்வைா யெங்கள் [டக்
கோமான் பெருங்கல்வி மாட்சியை யுணர்ந்துசெங்
குருமணிச் சூட்டு மோட்டு
நிறைவுகெழு துத்திப் பணுடவிப் பாம்பொன்று
நேரடைய மன்று னுனு
நினையின்ற தொருபரவை யிலகுவே பாரமென
நென்னுனைத் தனையு மெணணேன்
முறையினொரு சிறுதாக்கி னெழுபரவை யும்புக
முடித்துற நிறுததா னிவன்
மொழியெங்க டம்பிரான் வல்லப முணர்ந்திலை
முத்தமா ளிகைவா னயாற், [கொன்

றைமணித் திடராய குன்றைநக ராளியுட
னம்புலீ யாட வாவே

யருளுருத தேசுபொலி யருணமொழித்தேவனுட
னம்புலீ யாட வாவே'

என்னும் பாவில் 'முறையினொரு சிறுதூக்கி னெழு பரவையும் புக முடித்தற நிறுத்தா னிவன்' எனப பாராட்டிக் கூறினமை காண்க

## 34 அரும்பதப் பிரயோகம்

திருமலைச்சிறப்பு

5 அநிதம்—இஃது 'அநியதம்' என்னும் வட மொழிச சிதைவு

திருநாட்டுச் சிறபபு

21. ஆவின-தழைத்த

திருவாரூரச் சிறபபு

5 பதியிலார்-வரைவின் மகளிர்.

10 அணங்கிய-விரும்பிய

11 சைவர்-ஆசாரியாபிஷேக முடையார், தபோ தனர்-சந்நியாசிகள, முனிவர்-வானப் பிரஸ்தர், மறைய வர்-பிரமசாரிகள்

18 சிவம்-பரசிவம் அல்லது நன்மை

'சிவம்புரி நெறியைச் சேரப் செப்புமிப் பொரு

ளுங் கேண்மின்' என்னுஞ் சிந்தாமணிப் பாவினடியிற் 'சிவம்' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'நன்மை' என்றுரை வரைந்தமை காண்க

21 வந்தியா-மங்கலபாடகர்; சூதர்-நின்றேத்துவார்

42 அனகன்-ந அகன்-பாவமில்லான்

தடுத்தாட்கொண்ட புராணம்

7 சடங்கவி-'ஷடங்கவித்' என்னும் வடமொழிச் சிதைவெனப

35 பிஞ்ஞகன்-மயிற்பீலியை யுடையான்; வேள்வி-திருமணம்; 'விருந்தினாக ணின்னுடைய வேள்வி கா ணியவந்தார் வில்லுங் காண்பார்' எனக் கம்பர் சிலேடையாகக் கூறியதூஉங் காண்க.

56 மாட்சி-ஈண்டுப பெருமையன்று; அழிவாமெனக

75 புகல்-பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திற மென்பன. இவையிற்றைச் சம்பூரணம், சாடவம், ஔடவம், சதுர்த்த மென்ப வடநூலார்

96 மது-தேன்;

'பொன்மன்றம் பொற்று மரையொக்கு மம்மன்றிற்
செம்ம றிருமேனி தேனொக்கு மத்தேனை

யுண்டு களிக்குங் களிவண்டை யொக்குமே
யெம்பெரு மாட்டி விழி'

என்னுங் குமரகுருபர சுவாமிகள் பாவினும் சபாபதி யைத் தே னென்றல் காண்க

97 வரை-மலை, ரேகையுமாம்;

'வரையகன் மாரபிடை வரையு மூன்றுள

என்னுஞ் சிந்தாமணி யடியினை யறிக

101 நாசி-(கோபுர) மேலவாயிற்படி; பின்னர்த் திருக்குறிபபுத் தொண்ட நாயனர் புராணத்தும்,

'காமர்மணி நாசிகையின மருஙகு தங்குங
கருமுகில்கள் செம்முகில்க ளாகிக் காட்டும்

என்னுர்.

இளையான்குடிமாற நாயனர்

9. தாரிப்பு-தரித்தல்; தரித்தற் கான வழியுமாம்; தாங்குவா ரெனினு மமையும் பாரித்து—அடியிட்டு;

'கனித தொணடை வாய்சசி கதிர்முலைப் பாரிப்புக்
[கணடழிவுற்
றினிக்கண டிலம்பற்றுச சிற்றிடைக கென்றஞ்சு
[மெம்மனையே'

என்ற விடத்துப் பேராசிரியர் 'பாரிப்பு அடியிடுத லெனினு மமையும்' என்றமையும், ஆசிரியர் பூசலார் நாய

ஞர் புராணத்து 'ஆகமத்தா லடிநிலே பாரித்து' என்ற மையுங் காண்க

பாரித்தல் வளர்தலுமாம்; அஃ தீண்டுத் தன் வினையென்க. பின்னாச 'சைவநெறி பாரித்தன்றி ஒன் றுஞ்செய் யேனுணே யுமதென்ருர்' என்புழிப் பிறவினை யாவதூஉங் காண்க

' இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும
பணபின்மை பாரிக்கு நோய் '

என்னுங் குறட் பாவினும்,

திரந்தவி
' தாரித் னந்தவி ராவடி யார்தவ மாற்றமென்னு
மூரித திரைப்பெளவ நீக்குகண டாய்முன்னொருகா
[ளொருகால்'
வேரித்தண பூஞ்சுட ரைங்கணே வேள்வெந்துவிழச
[செந்தீ
பாரித்த கண்ணுடை யாயெம்மை யாளும் பசுபதி
யே'

என்னுந் தேவாரப் பாசுரத்தும் இச்சொற் பிரயோ கங்க ளிருத்த லறிக

மெய்ப்பொருணயஞர் புராணம்

1 மலாடர்-மலாடு என்பது மலேயமானுடு என்ப தன் மரூஉ

17 தாதன்-தாசன்; அடிமை

அமர்நீதி நாயஞர் புராணம்

41 சலத்தால்-வியாஜத்தால்; தலைக்கிட்டால.

கண்ணப்ப நாயனார் புராணம்

10. பராய்க் கடன்-பிரார்த்தனை; நேர்கடன்

26 சாபம்-குட்டி 'செந்நாய்க் கொடுஞ்செவிச் சாப மான' என்பது பாட மென்க.

49. ஈயல-ஈசெல்.

61 சரணம்-கால்; எனவே, 'சரணத் துரியாடை' என்பது 'காலாற் கழற்றுஞ் சட்டை' என்னும் பொருட்டாமாறு காண்க

இனி 'புலித்தோலாடை' என்பாரு முளர் அவர் 'சரணம்' மயிற்பீலி எனக் கொள்வர்.

72 சேடு-திரட்சி ; வேடு-வேடர் ;

'ஆடு கொடிப்படை சாடிய றததவ ரேயாள
வேடு கொடுததது பாரெனு மிப்புகழ் மேவீரோ'

என்றார் கம்பரும்.

134 எய்-அறிந்த 'எய்யாமை-அறியாமை' (தொல்-உரி); இனி,

'வய்' என்பதன் விகாரமெனக் கொண்டு 'பொருந்திய'

என்பாரு முளர்.

145. குட்டமிட்டு-தோண்டி, கொத்தி;

குணிப்பொரேட்டமிட்டுக் குழிசிகள் பலவிற்
[சேர்த்தி'

என்றார் கந்தபுராண முடையாரும் [வில்வலன் வாதாவி வதைப்படலம்-16] வக்குவன-வதக்குவன

மானக்கஞ்சாற நாயனார் புராணம்

29 பஞ்சவடி - விரிந்த வடங்களையுடையது, பஞ்ச-விரிவு. 'பஞ்சானனம்' விரிந்த முகத்தையுடையது அஃதாவது சிங்கம் என்னும் பொருட்டாதல் காண்க.

அரிவாட்டாய நாயனாா்புராணம்

3 ஐம்பால்-கூந்தல், ஐந்து வகையாக முடிக்கப் படுதலின் அப் பெயர்த் தாயிற்று

'ஐம்பான் முடியுங் கொண்டையுங் குழலும்
வம்பார் கணிச்சியும வாண்மயிர்ச் சுருளும்'

என்ப.

குழை-காதிற்குழை, குழைதல், இலை என முறையே கொள்க

5. முழுப்பு-குறுங்கான்; இதனை,

'பண்பல தெளிதேன் பாடிநின் றாடப்
பனிமலர்ச் சோலைசூழ் முழுப்பிற்
செண்பக மரும்பும் பெரும்பற்றப் புலியூர்
திருவளர் திருச்சிற்றம் பலமே'

என்னும் ஆன்றோர் தொடர்பினுங் காண்க 'முழுப்

பை எனக் கொண்டு 'நிறை கருப்பை' என்பா ரொரு சிலர்.

12. [illegible]சனை-ஊதல், இப் புராணத்துள் இன்றும் ஈரிடத்து இச் சொல்லைப் பிரயோகித்தமை காண்க.

மூர்த்தி நாயனார் புராணம்

16. மிறை-துன்பம்; 'மிறைபடு [illegible] வாழ்வை மெய்யென் றெண்ணி வினையிலே கிடந்தழுந்தி வியவேனெஞ்சே' என்றருளினர் அப்பர் சுவாமிகளும். 'இறை' யெனப் பிரித்து இடர்ப்படு வாரு முளர்.

முருக நாயனார் புராணம்

3. சரிகை-நாகணவாய்ப்புள்.

திருநாளைப்போவார் நாயனார் புராணம்

8. முழை-பொந்து

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்

15. முரம்பு-பரன்முண் முதலிய நிறைந்த விடம் என்பர் கல்லாட வுரையாசிரியர்.

86. காஞ்சி-(11991) பதினொ ராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்றாகிய ஆதியிசை களுள் ஒன்றென்ப.

101. [illegible]கர்கள்-மாடங்கள்

சண்டேசுர நாயனார் புராணம்

25 பயனும்-சுவையு மென்றுதல், கன்று மென்று தல், பூசையு மென்றுதல் உரை கொள்க

திருநாவுக்கரசு நாயனார் புராணம்

9 ஆடி-கண்ணாடி

36. கடப்பாடு-கடமை ; ஒப்புரவுமாம்

76 கிளை-புல்லாங் குழல் ; புல்-புறக்காழ் அது புறக் காழினையுடைய மூங்கிற் காகி அம் மூங்கிலானாய கருவிக் காயிற் றென்க

78 தாபதியார்-கைம்மை விரதமுடையார்

83 தவவை-மூத்தாள் ; லங்கணம்-தாண்டுதல் ; அஃதாவது விட்டொழிதல்

107 சாதியா-சொல்லாத.

150 இலசினை-முத்திரை

202. இறை-இடம் ; தலைமையுமாம்

266. வற்கடம்-பஞ்சம், வறுமை ; 'அடம்' தொழிற்பெயர்விகுதி யென்க

275 பேழ்கணித்து-பிழை கருதிச சிந்தித்து ; இதனைப் 'பிற்பா னின்று பேழ்கணித்தாற் பெறுதற் கரியன் பெருமானே' என ஆளுடைய வடிகள் தமது திருவாசகத்தும்,

'பிறையணி வாணுதலா ளுமையா ளவள் பேழ்க [ணிக்க

நிறையணி நெஞ்சனுங்க நீலமால்விட முண்ட
தென்னே'

என ஆளுடைய நம்பிகள் தமது தேவாரத்தும்,

'பின்சென்று காதல் கூரப் பேழ்கணித் திரங்கு
கின்ற'

எனக் கம்பர் தமது இராமாயணத்தும் பிரயோகித்
தல் காண்க

குலச்சிறை நாயனுர் புராணம்

3 வாரம் - உரிமை.

காரைக்காலம்மையார் புராணம்

33. கம்மியர்-தொழில் செய்வோர் ; கர்மிய ரென்
னும் வடசொற் றிரி பென்ப.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம்

34 பவனம்-மாளிகை

35. சூதம்-பிரசூதம், பிரசவம், பிள்ளைப் பேறு.

38. கடி-காப்பு

270. கந்தை-கிழி ; கந்தம் எனப் பாடமோதுதல்
சிறவா தென்க

386. புள்-சாதகப் பறவை.

473 பதிகன்-வழிச்சொல்வோன்.

638. குரத்தி-குரவன் என்பதன் பெண்பால்

917. அநுவாதம்-வழிமொழிதல்; இது 'புரோவாதம்' என்பதன் மறுதலை மொழி

922 துணர்-கொழுந்து

1099. காமரூபி - பச்சோந்தி.

ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம்

54 இட்டிகை-செங்கல்; 'இட்டிகையும் கோடும்' என்னும் நாலடியார்.

சட்ட-இது செப்பப் பொருட்டாயதோர் அகரவீற் றிடைச்சொல் என்பர் சிவஞான முனிவர்;

'நான்சட்ட நும்மை மறக்கினு மென்னைக் குறிக்கொ
[ணுமினே'
'சட்ட விக்கத வந்திறப் பிம்மினே' (தேவாரம்)
'சட்ட நேர்பட வந்தி லாத சழக்கனேன்' (திருவாசகம்)

எனப் பரமாசாரியர் பணித்தமை காண்க.

கழறிற்றறிவார் நாயனார் புராணம்

4 சரளம் - தேவதாரு.

27 காணம் - பொற்காசு; 'கையிலொன்றுங் காணமில்லை'

எனப் பரமாசாரியர் அருளிச்செய்தமை காண்க.

அதிபத்த நாயனார் புராணம்

4 ஆடிமண்டலம்-கண்ணாடி; 'வயக்குறு மண்டிலம்' என்னும் கலித்தொகைத் தொடர்க்கு நச்சினார்க்கினிய ருரை காண்க

முழுநீறுபூசிய முனிவர் புராணம்

3 நிசையம-திரள்

## 35. அருந்தொடர்ப் பிரயோகம்.

பாயிரம்

3. 'தாழ் செவி நீண்முடி' என்றார்; இது விசுவரூப விநாயகர் வணக்க மென்பது குறித்தற் கென்க.

திருமலைச் சிறப்பு

11 நெற்றியிற்......மேனியர்-சிவசாரூப்யம் பெற்றிருப்பார்; [தம்பிரா னடியார்-சிவசாமீப்யம் பெற்றிருப்பார்;] பிஞ்ஞகன்றன் னருள்பெறுவார்-சிவலோக்கியம் பெற்றிருப்பார்.

33 வேத மூலம்-பிரணவம்

திருநாட்டுச் சிறப்பு

5. வெண்டலை நுரை பொருது-வெள்ளிய இடத்தையுடைய நுரை மோதிச் செல்லுதலால், வெண்டலை மாலை நுரை யொப்பச் செல்லுதலால்

'நாம வேற்படைக்' கடவுளைப் பயந்தரு ணங்கை
[தென் கமலேசா

வாம பாகத்தைக் கொளவலப் பாகநீா மஙகை
[கொண டனள்போலாங்
தாம நீறெருளி தன்னிறங காட்டவெண டலேநிரை
[நுரைகாட்டக்
காமா பூஙகொடி மடந்தையர் மதர்விழிக கயலுலா
[வரலாலே'

என்னுங் குமரகுருபர சுவாமிகள் வாக்கினை நோக்குக.

14. மலாகளேக் கொடுகைத்து-மலர்களைக் கொடு உகைத்து எனப பிரிக்க

17 குழைக் கரும்பு— ஒரு குழைக்கு ஒரரும்பு விழுக்காடுண்டு

திருவாரூர்ச சிறபபு

5 உரைக்கு என் அளவு-(திருவாரூரின் பெருமையைச சொல்லின்) அச சொல்லுக்கு எல்லை இல்லை என்றபடி; இனி, 'என் அளவு உரைக்கு' என முடித்து '(திருவாரூரின் பெருமையை) என்ன அளவு உரைப்பேன் அஃதாவது 'ஓரளவும் யான் உரைத்தல் கூடாது' என்பாரு முளர்

11 தாழ்ந்த வேணியா—நைஷ்டிக பிரமசாரிகள; வாழ்ந்த சிந்தை முனிவா—வானப்பிரஸ்தர்; வீழ்நத வின்பத் துறையுள் விரவுவாா-கிருகஸ்தர்.

45 வீதிவிடங்கப பெருமான்—ஈண்டு 'விடங்கு' அழகு. 'சைவ விடங்கி னணிபுனைந்து' என்றார் தடுத்

தாட்கொண்ட புராணத்தும்; இனி, 'விடங்கம்' 'உளி (படுதல்) இல்லாத' என்பது மொன்று

திருக்கூட்டச் சிறப்பு

2 தேவாசிரியன்—'தேவாசரயம்' எனபதன் சிதைவு ; ஆச்ரயம்-இடம்

தடுத்தாட்கொண்ட புராணம்

11 பந்தர் நிகழ்ச்சியின்—பந்தர் அமைந்த விடத்தின்கண் இனி, 'நிகழ்சசியின் மைநதர்' எனக் கூட்டித் '(திருமணத்தை) நடத்தும் மைந்தர்' என்பது மொன்று அதன்மேலும், நிகழ்சசியின்-சொன்னவளவில என்பாரு முளா

16 உகிர் நுதி முறையிற் போக்கி—நக நுனிகளைச (சிக்கறுத்தற்குக் குஞ்சியினுள) முறையாகச செலுத்தி இதற்கு ஏலாவுரை கூறி இடர்ப்பட்டாரு முளர்.

39 மிசை உததரியத் துகில் தாங்கி—இது கோப மூண்டுழிச செய்வதொரு செய்கை. குடுமியைத் தட்டி முடித்தலு முண்டு ; அதனை,

'மறையோ ருள்ளார், உருத்துவாய் மடித்தெழுந்து கோகு தட்டிட் டேன்றியதண் டெதிரோசசியுடன்ற வேந்தர், கருத்துவார் தகவெருக்கொண் டோடவோடக் கையுரங்காட் டினர்வளர்த்த கனலேயன்னார்' என்னும் பாரதப் பாவி னடிகளா னறிக. திரௌபதி மாலையிட்ட சருக்கம்;

(கோகு—குடுமி).

52. வந்த ஆறு இசைவே யன்றோ வழக்கு—(நடைமுறையில்) வந்தபடி சம்மதமே வழக்கிற் கேது வன்றோ ?

92 தா மலங்குகள்—தா மலங்கு உகள் எனப் பிரிக்க. 'வலிமையுடைய மலங்குகள் உகளும்' எனப் பொருள் கொள்க 'தாம் மலங்கு உகள்' எனக் கொண்டு 'தாவுந் தன்மையுடைய மலங்குகள் (நீர் மிக்கிருத்தலின்) உகளும்' எனினுமாம்

109 புறவிடை—(அகத்திற்) பிரியா விடை.

132 கதிர்மணி பிறந்த தென்ன—இப்பியினின்றும் ஒளிபொருந்திய முத்துப் பிறந்தாற்போல இவ்வுலகை தோன்றிய குலத்தி னிழியும் பரவையாரின் உயர்வும் விளக்குதல் காண்க

இயற்பகை நாயனார் புராணம்

4 உம்பர் நாயகிக்கும் அஃது அறியவோ—முடிமே லுள்ள கங்கைக்கும் அது தெரியவோ ?

இளையான்குடிமாற நாயனார் புராணம்

12 போதும் வைகிற்று—போதுங் கழிந்தது

விறன்மிண்ட நாயனார் புராணம்

8 பேணாது ஏகும் ஊரனுக்கும்— விரும்பிப் பணியாது செல்லும் ஆரூரனுக்கும், 'ஆரூரன்' என்னாது

ஊரன்' என்றது இகழ்ச்சியா னென்க உம்மை இறந் ததுதழீஇயது

ஏறிபத்த நாயனார் புராணம்

11. நவமி முன்னாள்—தசமிநாள்

ஏனாதி நாயனார் புராணம்

8 கால் சாயும்—மறையும 'அவன் இறந்தான்' எனல் வேண்டியவழி 'அவன் கால் சாய்ந்தது' என்னும் வழக்குண்மை யறிக சிலர் 'கால்சீக்கும்' என்புழிப் போல ஈண்டுக் 'கால்' தமிழுபசர்க்க மென்ப

கண்ணப்ப நாயனார் புராணம்

92 நாணன் காடனை—நாணனை காடனை; அஃ தாவது நாணனுங் காடனும்

103. மஞ்சு இது—இந்த அழகினை

131 ஐந்துமார்—ஐம்புலப்பகையை

அரிவாட்டாய நாயனார் புராணம்

'களிறு உண் விளங்கனி-'வெஞ்சினவேழமுண்ட வெள்ளிலின் வெளிய மாக' என்னுஞ் சிந்தாமணியடி காண்க (குணமாலையாலரிம்பகம்—174). 'தேரை போயிற் றென்றாற் போல்வதோர் நோயென்க; இனி, யானை யுண்டது வெறுவிதா மென்று முரைப்ப' என்பது நச்சினார்க்கினிய ருரை

ஆனாய நாயனார் புராணம்

23 தாது பிடிபபன போல—சுருதி பிடிப்பன போல; இது பண்டைக் கால வழக்குரை யென்ப-இப் பொருள் வினையானும் விளங்குதல காண்க ஆசிரியர் பிருண்டும் 'குழலசெய் வண்டினங் குறிஞ்சியாழ் முரலவன குறிஞ்சி' (குழல—வேணுகானம்) என்றமை யும; மணிமேகலை, 'குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட' என்றமையும்; பரிபாடல், 'ஒரு திறம், கண் ணார் குழலின் கரைபெழ ஒருதிறம், பண்ணார் தும்பி பரந்திசை யூத,' 'ஊதுசீரத் தீங்குழ லியம்ப மலர் மிசைத் தாதூது தும்பி' என்றமையுங் காண்க

மூர்த்தி நாயனா புராணம்

3 மெய்வைத்த காலும்-உடம்பின்கண் வீசிய காற்றும்; 'கால' என்பதற் கேறப 'வைத்த' என்றா

35 ஓதம கிளா வேலையை-சைத்ய மிக்க கடலை, 'ஓதங்கொள கடலன்றி யொன்றினே டொன்றுவ் வாப, பூதங்க டொறுமுறைநதா லவையுன்னைப பொ றாக்குமோ'

என்றார் கம்பரும்

46 நுதலின்கண் விழித்தவர் - நெற்றியினிடத்தே பார்த்தவர் ; அஃதாவது நெற்றியிற் கண்ணுடை யார்.

நூலின் பதம்-நூலின்க ணருளிய உயர் நிலை

நூலின்க ணருளிய பரிபாகமுமாம். மும்மை-மூன்றென்னும் பொருட்டு; 'தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன் என்புழிப்போல வென்க

முருக நாயனார் புராணம்

10. பரமர் பதிகப் பற்றுன ஓங்கி சிறந்த அஞ்செழுத்தும்—சிவபெருமா னருளிசசெய்த பாயிரத்தையுடைய பற்றப்படுவன வாகிய வேதங்கள் ஓங்கிச சிறந்த தற் கேதுவாகிய அஞ்செழுத்தும் இங்ஙனம் கூறியது 'த்ரயீ' என்னும் ரிக், யஜுர், சாமம் என்கிற மூன்று வேதங்களின் இடைப்படுவதாகிய யஜுர் வேதத்தின் ஏழு காண்டங்களின் இடைப்படுவதாகிய நான்காங் காண்டத்தின் ஒன்பான் பிரச்நங்களின் இடைப்படுவதாகிய 'ஸ்ரீருத்ரம' என்கிற ஐந்தாம் பிரசநத்தின் இடைபபடுவதாகிய 'நம: ஸோமாயச' என்கிற அநுவாகத்தின் இடைப்படுவதாகிய பதம் புஞ்சாக்ஷரமாகலி னெனக

)றுக பற்றற்றான் பற்றினை' என்பதற்குப் பரி)ழக ருரை காண்க சிறந்த-காரணப் பொருட்டில் வந்த பெயரெச்சமென்க இனி, சிவபெருமா னருளிச செய்த வேதங்கட்குப் பற்றுக்கோடான உயர்ந்து சிறந்த அஞ்செழுத்தும் எனினுமாம். ஈண்டுப் 'பதிகம்' ஆகுபெயர்.

திருநாளைப்போவார் நாயனார் புராணம்

2 கரும்பின் சாற்று அலை - கருப்பஞ் சாற்றின்

அலைகளையுடைய அலம் வன் கொழு-கலப்பையின் வலிய கொழுமுனை

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்

72 தீபம்—சூரியனும் சந்திரனும்; 'இரு சுடர் விளக்கிட்டு' என்றார் பிறரும் 'நல்லறம் மன்னத் தீபம் மன்னும்' என முடிக்க

98. 'அவனூர்தித்தேர்' என்பது பாடமென்ப; அவன்—சூரியன்.

99 அணித்தாகக் கொண்டு செல்லும்—(நெடுந் தூரஞ் செல்ல வேண்டாது) சமீபமாக அழைத்துச் செல்லும்

109 'நன்று முள்ளது' என்பது பாடமென்க

திருநாவுக்கரசு நாயனார் புராணம்.

10. பயிர்க்கண—'பயிர்க்கு அண்' எனப் பிரிக்க

73 எதிர்செய் குறை என்கொல்—பிரதி செய்தற்குரிய வேண்டும்பொருள் யாதுளது? ஒன்றுமில்லையென்றபடி என்னை? வேண்டுதல் வேண்டாமை யிலாருகலின்.

89. பாவி வாயால்—பெரியார்க்குக் கேடுரைத்தற் கொடுமை பற்றி, வாயினைப் 'பாவி' யென்றார்; கொடியாரைப் பாவி யென்னும் வழக்குண்மையின

'அழுக்கா றெனவொரு பாவி'

எனத் திருக்குறளினும்,

'பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்'

என மணிமேகலையினும் வருதல் காண்க

90. பொருள் கொண்டு விடாது-அவனது பொருளைக் கவர்ந்து கொண்டு அவனை விடாமல் இனி, உயிரைக் கொண்டு விடாமல் எனவும், அவனைப் பொருட்படுத்து விடாமல் எனவுங் கூறுப சிலர்.

110 தாடத்தில-தாள் தத்தில எனப் பிரித்து, 'காலின தாண்டுதலால்' எனப் பொருள் கொள்க

121. முட்டி நிலை-கலை அறுபத்து நான்கனுள் 'முட்டி' என்பது (கைவந்த) நிலையால் இம் முட்டியென்னுங் கலை விடம் கொடுநோய் முதலியன தடுத்தற்கு மறைமொழி சொல்வ தென்ப. எதிரேறு-பகைச் செய்கை

202. இறை கொள்ளப் பெற்ற பெருந்தவத் தொண்டர்-பெருந்தவம் இறை (தனக்கு இடமாகக்) கொள்ளப் பெற்ற தொண்டர் என மாற்றுக இனி, 'இறை கொள்ளப் பெற்ற' என்பதற்கு 'இறைவன் கொள்ளப் பெற்றதாகிய' எனவும், 'தலைமை கொள்ளப் பெற்றதாகிய' எனவுங் கூறுவாரு முளர்

211 அடை மாலைச் சிலம்-அடைதற்குக் காரணமான இயல்பாகிய சிலம்.

காரைக்காலம்மையார் புராணம்

60. மீண்டும் பிறப்புண்டேல்—மேலும் பிறப்புண்டாயின்; 'ஈண்டும் பிறப்புண்டேல்' எனப் பிரித்து 'நேர்ந்த (இந்தப்) பிறவி (இன்னுஞ் சில காலம் இவ்வுலகின்கண்) இருக்குமாயின்' எனப் பொருள் கூறுவாரு முளர்

நமிநந்தியடிக ணாயனார் புராணம்

10 'பொய்யு மெய்யுமாம்......நெறியார—அஸ்தி நாஸ்தி வாதிகளாகிய சமணர்கள்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம்

163 காலம் பெற அழுதார—தக்க காலத்தி லழுதார்; 'கால முண்டாகவே காதல் செய்துய்ம்மின்' என்றருளினார் ஆளுடைய வடிகளும்

165 அல்குந் திறம்—தங்குஞ் செயற்றிறம

265 தியானப் பொருள்—~~நிலையமாகிய~~ பரம் பொருள்

795 மேற்கோள் ஏற்பார்-~~பிரதிஞ்ஞை~~ (சொல்லுதலை) ஏற்றுக் கொள்வார். உள்ளதன் மேலுங் குற்றத்தை ஏற்பார் எனவுங் கூறுப.

852. அற்றை அருள் பெற்ற—அன்றருள் பெற்ற; எதுகைநோக்கி மெலி வலியாயிற் றென்க இனி, 'அத்தன்மைத்தான அருள் பெற்ற' எனினுமாம்.

ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம்

2 'நஞ்சு சூழ் வனம் நயனியர்' எனப் பிரிக்க

134. 'அம்பலத்துக்கண் உளனும்' எனப் பிரித்து 'கனக சபையின் உள்ளவனாகிய' வெனவும் 'அம்பலத்து கண்ணுளனார்' எனப்பிரித்து 'சபையின்கட் செய்யுங் கூத்தனாகிய' வெனவும் பொருளுரைப்ப

நரசிங்கமுனையரைய நாயனார் புராணம்

9. கடன் ஆகை கவின்—செய் கடனாகிய தோன்றன் அழகினை.

கோட்புலி நாயனார் புராணம்

4 திருவிரையாக்கலி—இது சிவபெருமானைக் குறித்துச் சொல்வதோ ராணை. 'பெய்தீர், விரையாக் கலியெனு மாணையும்' எனப் பட்டினத் தடிகளுந் தமது 'கோயி னான்மணி மாலை' யுட் பணித்தமை காண்க

## 36. வடசொற் பிரயோகம்.

ஆசிரியர் தமிழின் விரவி வழங்கும் வடசொற்களையே தமது திருப்பாவின் அமைத்துக் கொள்வார்.

'தெரிவருமபெரு மைததிருத தொணடாதம்
பொருவ ருஞ்சீர் புகலலுற தேன்முற்றப்
பெருகு தணகட லூற்றும் பெருநசை
ஒருசு ணங்களை யொக்குந் தகைமையேன்'

1. திருத்தொண்டர் புராணம் பாயிரம் - 6ு

என்னுந் திருப்பாவின்கண் ஒரு வடசொல்லேனும் விரவாமை காண்க.

'மற்றி தற்குப் பதிகம்வன் றொண்டாதாம்
புற்றி டத்தெம் புராண னருளினாற்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகையெனப்
பெற்ற நற்பதி கந்தொழப் பெற்றதால்'

என்னுந் திருப்பாவின்கண் 'பதிகம்' என்னும் வடசொல் ஈரிடத்துளது. முன்னது 'பிரதீகம்' என்னும் வடசொற்றிரிபு 'பிரதீகம்' என்னுஞ் சொல் 'பிண்டம் அஃதாவது சரீரம்' என்னும் பொருட்டு. 'பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத், தொகுதி யாகச் சொல்லுத ற்றே' என்ப தோத் தென்க

பின்னது; 'பங்திகம்' என்னும் வடசொற்றிரிபு. இப் 'பங்திகம்' என்னுஞ் சொல்லிற் 'பங்தி' என்பது 'பத்து' என்னும் பொருட்டு; இராவணனுக்குப் 'பங்தி கண்டன்' என்னும் பெயரிருத்தலறிக.

ஆசிரியர் வடமொழிப் புலமையு முடையா ரென்பது அங்கையி னெல்லியா மென்க.

## (37) அரிய இலக்கணம்.

திருமலைச்சிறப்பு

25. போதுவார் - ஈண்டுப் 'போது' என்பது 'புகுது' என்பதன் மரூஉ

(2)

திருவாரூர்ச் சிறப்பு

8 ஆர் - யார் என்பதன் மரூஉ

18 சிவமுயன்றி அடையும் தெய்வக்கலை - அடையும் என்பது காரியத்தின்கண்வந்த பெயரெச்சம்

19. உளமகிழ் காதல் - 'மகிழ்' என்பதனைக் காரியத்தின்கண் வந்த பெயரெச்சமு மென்றுதல் முதனிலைத் தொழிற்பெய ரென்றுதல் கொள்க

24. உணர்வெனும் பெருமை - காரணத்தைக் காரியமாக, உபசரித்தார். 'நிரபபென்னு மல்ல லடையப்பட்டார்' என நாலடியாரினு மிருத்தல் காண்க. அஃது அபே தாத்தியாவசாய மென்ப வடலார்

44 அருமந்த - அருமருந்தன்ன என்பதன் மரூஉ மொழி

47 முன்னவனே - ஏகாரம் சிறப்பு

தடுத்தாட்கொண்ட புராணம்

52. இசைவே - ஏகாரம் பிரிநிலை

திருநீலகண்ட நாயனார் புராணம்

4 மனைவியாரும் - உம்மை எச்சவும்மை யென்க.

கண்ணப்ப நாயனார் புராணம்

92 நாணன் காடனே - எண்ணேகார முன்னுங் கூட்டுக

135. எந்திய சீர் - இது வடநூன் முடிபு

142 ஒளி நின்று - 'ஒளி' என்னும் முதனிலைத் தனிவினை வினையெச்சமாயிற்று; 'வரிப்புனை பந்து' என்புழிப்போல வென்க

(மூர்த்தி நாயனார் புராணம்

22 செய்திடல் - இஃது அல்லீற்று எதிர்மறை வியங்கோள்.

25 மெய் - ஆகுபெயர்

29. சரித்து - இது பிறவினைப் பொருளின் வந்த தன்வினை; இதனை 'அந்தர்ப்பாவிதணிச்' என்ப வடநூலார்

45 நிரமபிய-செய்யிய வெ னெச்சமுமாம்

1 முருக நாயனார் புராணம்

13. அருளின் பொருள் - பண்புத் தொகையின் கண் 'இன்' சாரியை வந்த தென்க

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்

(௪) 14. மைஞ்ஞீலம் - நகரத்திற்கு ஞகரம் போலி

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம்

௰ 821 ஏன்றிந்த - அகரம் விகாரத்தாற் றொக்கது

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்

44. 'சிறுகழிச்சியர், அவரை யேனலுக் கெயிற்றியர் பவளமுத் தளந்தும்'-இது தழாத்தொடர். எயிற்றியர் அவரை யேனலுக்குச் சிறு கழிச்சியர் பவள முத்து அளந்தும் என மாறுக; 'சுரையாழ வம்மி மிதப்ப,

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப, கானக நாடன் சுனை' 'என்றார் பிறரும்

ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம்

42 உரியது யான் - இது திணைவழுவமைதி யா தல் காண்க

மூர்க்க நாயனார் புராணம்

எழுந்தருள - காரணப பொருட்டில் வந்த செய வெனெச்சம்

சிறுத்தொண்ட நாயனார் புராணம்

11 மன்னவனை - இது வேற்றுமை மயக்கம் .

38 அநுவயம்

ஆசிரியர் திருப்பாக்களின் ஓரோவழித் தூராநுவ யமு முண்டு.

'கரும்பல்லநெல்லென்னக்கமுகல்லகரும்பென்னச
சுரும்பல்லி குடைநீலத தூகளல்ல பகலெல்லா
மரும்பல்ல முலையென்னவமுதல்லமொழியென்ன
வரும்பல்லா யிரக்கடைசி மடநதையாகள் வய
[லெல்லாம'

என்னுந் திருப்பாவிற்கு அநுவயம்:

'அருமபலல முலையென்ன அமுதல்ல மொழியெ ன்ன வரும் பல்லாயிரக் கடைசி மடந்தையர்கள் வய லெல்லாம் கரும்பல்ல நெல்லென்னக் கமுகலல கரும்

பெண்ணச் சுரும்பல்லி குடைநீலத் துகளலல' என்பது துகள் அல்ல - மகரந்தத்தான் இருளுடையன; அவ்வாறு (பகலெல்லாம) இருளுடைமையின் இவை கரும்பல்ல நெல்லென்னவும் இவை கமுகல்ல கரும்பென்னவும் நேருமெ என்றபடி )

'தேம லஙகணி மாமணி மாாபிற
செம்ம லஙகயலகள செங்கம லததண
பூம லஙகவெதிா பாய்வன மாடே
புள்ள லமபுதிரை வெள்வளே வாவித
தாம லஙகுக டடமபணே சூழுந்
தன்ம ருங்குதொழு வாாகட மும்மை
மாம லங்களற வீடரு டில்லே
மல்ல லமபதியி னெல்லே வணஙகி'

என்னுந் திருப்பாவிற்கு அநுவயம்:

'தேமலங்கணி மாமணி மார்பிற் செம்மல் புள்ளலம்பு திரை வெள்வளே வாவி அங்கயல்கள் செங்கமலத் தண்பூமலங்க எதிர் பாய்வனமாடே தாம் மலங்கு உகள் தடம்பணே சூழுந் தன்மருங்கு தொழுவார்கடம் மும்மை மாமலங்க ளற வீடருள் தில்லே மல்லல் அம் பதியின் எல்லே வணங்கி' என்பது

• நண்ணுந திருநா வுக்கரசா நம்ப ரருளென றறிந்
[தார்போ
லுணணு மென்று திருமறையோா ருரைததுப் பொ
[திசோ றளிததலுமே

யெண்ணு நினையா தெதிர்வாங்கி யினிதா வமுது
[செய்தினிய
தண்ணீ ரமுது செய்தருளித் தூய்மைசெய்து தளா
[வொழிந்தார்"

என்னுந் திருப்பாவிற்கு அநுவயம்:

'அறிந்தார்போல் உண்ணுமென்று திருமறை யோர் உரைத்துப் பொதிசோறு அளித்தலுமே நண்ணுந் திருநாவுக் கரசர் எண்ணம் நினையாது நம்பாரு ளென்று எதிர்வாங்கி இனிதா வமுதுசெய் தினிய தண்ணீர் அமுதுசெய்தருளித் தூய்மை செய்து தளர்வொழிந்தார்' என்பது

(அறிந்தார்போல் - ~~பரிச்சய~~ பழக்க முடையார் போல)

## (39) அலங்காரம்

ஆசிரியர் திருப்பாக்களில் அமைந்து கிடக்கும் அணிகள் பற்பல அவற்றுள், 'மடக்கணி' யென்பதொன்று. அது திருப்பாக்களி னீற்றின் விளங்குவதே இந்நூலிற் சிறப்பாகத் தோன்றுவ தென்க.

செய்வணத் திறமொழிவேன் தீவினையின் றிறமொழிவன்.

எனவும்,

'கமழ்சாறா கஞ்சாறா' எனவும்,
'புடைத்தெங்கும் முடைத்தெங்கும்' எனவும்,

'திருவாரூரா திருவாரூர்' எனவும்,
'உள்ளூறையூ ராமுறையூர்' எனவும்,
'மிக்கதிரு விளக்கிட்டார் விழுததொண்டு விளக்கிட்டார்'

எனவும் வருதல் காண்க மகாகவி - மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும் 'ஏற்றாத தலையொரு மவுலி புனைந்தா லென்னச சொலலணி யொன், றெய்திய பொலிய'

என்றனர்

சிலேடையணியும் இந் நூலின்கண் பயின்று வருவதாட் அவ வணியை,

'அருஙகடி யெழுநத போழ்தி னாததவெள் வளைக ளாலு
மிருங்குழை மகரத தாலு மிலஙகொளிமணிகளாலு
நெருங்கிய பீலிச சோலை நீணிறத தரஙகத தாலுங
கருஙகடல் கிளாந்த தென்னக காட்சியிற் பொலிந் தன்றே'

[கடி-திருமணம் வெளவளைகள்-வெள்ளிய வளையலகள, சங்குகள் குழைமகரம்-மகரகுண்டலம்; மகரம்-ஒருவகை மீன் மணிகள்-இரத்தினாபரணங்கள், முத்துக்கள் பீலிசசோலை-மயிற்றோகை விசிறி. தரங்கம்-வரிசை தரங்கம்-அலை.]

'வேத வேதியர் வேள்வியே தீயன
மாத ரோதி மலரே பிணியன
காதல் வீதி விலக்கே கவலைய
சூத மாதவி யேவனஞ் சூழ்வன'

[தீயன—நெருப்புடையன, கொடியன பிணியன—கட்டுடையன, நோயுடையன கவலைய—கவர்வழியுடையன; துன்பமுடையன அனஞ் சூழ்வன—அன்னப் பறவை விரும்புவன, அன்னத்தை (சோற்றை) விரும்புவன].

காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற் கடிக
[மழுந்
தாமரையும் புல்லிதழுந் தயங்கியநூ லுந்தாங்கித்
தூமருநுண் டுகளணிந்து துளிவருகண் ணீர்ததும்
[பித்
தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடு
[மால்'

['தாமரையும்' என்புழி உம்மை எச்சவும்மையென்க புல் இதழ்—தருப்பைப் பவித்திரம், புறவிதழ்; நூல்—முப்புரிநூல், நாளநூல் துகள்-விபூதி, மகரந்தப் பொடி கண்ணீர்—ஆனந்தக் கண்ணீர்; கள் நீர்-தேன்] என்னுந் திருப்பாக்களிற் காண்க

ஏனை அணிகளுக்கெல்லாம் அடியாய் நிற்கும் உவமையணி இந் நூலின்கண் யாண்டுமுளது.

'மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு
[வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த
[நாதன்'

என்னும் அடிகளினும்,

‘ மொய்யளிசூழ் நிரைநீல முழுவலயங் களினலையச
செய்யதளிர் நறவிரலிற் செழுமுகையி னகஞ்சிறப்ப
மெய்யொளியி னிழற்காணு மாடியெனவெண் மதியை
வையமகள் கையணைந்தாற போலுயர்வ மலாசசோலை’

என்னுந் திருப்பாவினும்,

‘ கார்கெழு பருவம வாய்ப்பக் காமுறு மகளிருள்ளஞ்
சீர்கெழு கணவன றனபால விரைவுறச செல்லுமாபோ
னீர்கெழு பௌவ நோககி நிரைதிரை யிரைததுச செல்லும
பார்கெழு புகழின் மிகக பணபுடை வைகை யாறு’

என்னுந் திருபபாவினும் அவ வணி சிறந்து நிற்றல் காண்க

‘மைபொதி விளக்கே யென்ன’ என்னும் உவமை யான் ஆசிரியர் இயற்கைப பொருளைக் கூர்ந்து நோக்கு மியலபுடையா ரென்பது வெளிப்படை விலங்கலா மென்க என்னை? விளக்கின் சுடரின்கணுள்ள முப் புரைகளிற் றிரிக் கடுத்த புரை இருட்புரை யாதலை யுற்று நோக்கின் மை யுணரக்கிடத்தலின் ‘மை’ என் பது திரிநுனியிற் கருமை யென்பாரு முளர்.

‘ பஞ்சின் மெல்லடிப் பாவையர் நெஞ்சமும்
வஞ்ச மாக்கடம் வல்வினை யும்மா

ஞஞ்செ ழுதது முணரா வறிவிலோர்
நெஞசு மென்ன விருணடது நீணடவான்'

என்பதும் அவ் வணியாம்.

பொன்னின் வெணடிரு நீறு புனைந்தெனப்
பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கு மறிவரியா னென்று
மன்னி வாழ்கயி லைததிரு மாமலை.

இங்குள்ள உவமைபான் ஆசிரியர் உயாபொருட்கு அதனின் உயருவமை கூறுங திறங் காண்க இங்குக் கைலை மலைக்குத் திருநீற்றை யுவமை கூறியது 'உயர்ந்த தன் மேற்றே யுள்ளுங் காலை' என்னும் இலக்கணத்திற் கொத்திருத்த லறிக

இனி,

மாலினுங் திசசுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினுற் பல்லுயிா தருதன் மாணபினுற
கோலநற் குணடிகை தாங்குங கொள்கை
[யாற்
போலுநான் முகனையும் பொன்னி மாநதி'

திங்கள்சூ டியமுடிச சிகரத துசசியிற்
பொங்குவெண டலைநுரை பொருது போதலா
லெங்கணு யகன்முடி மிசைநின் றேயிழி
கங்கையாம் பொன்னியாங கன்னி நீததமே'

என்னுங் திருப்பாக்களினுள்ள அணி சிலேடை யுவமையாம்.

அவ் வுவமையினும் காவிரிக்கு பிசைனயும் கங்கையையும் உவமை காட்டுதல் காண்க.

மேனாட்டுப் புலவர் பெரிதும் பாராட்டுந் தன்மை நவிற்சி யணியும் இந் நூலின்கண் ஆங்காங்குப் பொலிவதாம்.

'புனைவாரபொற் குழையசைசயப் பூந்தானை பின்
[போக்கி
வினைவாய்ந்த தழல்வேதி மெழுக்குறவெண சுதை
[யொழுக்கும்
கனைவான முகிற்கூந்தற் கதிரசெயவட மீன்கற்
[பின்
மனைவாழ்க்கைக் குலமகளிர வளமபொலிவ மாட
[ங்கள்'

என்னுந் திருப்பாவி னுஃ திருத்தலுணாக

பண்டை இன்னிசைப் புலவர் காவியங்களிற் காண்டற் கரிய 'உயாவு நவிற்சி யணி' [illegible]ந் நூலினும் அரிதாகலின், இந்நூலின் பழைமை[illegible] பண்டைப் போக்குந் தெரிகின்றவென்க

'உ துளைக்கையைரா வதககளிறுங துரங்கவா சுந்
[திருவும்
விளைத்தவமு துந்தருவும் விழுமணியுங் கொடு
[மோது
வுளைததகட லிவற்றொன்று பெறவேணடி யும்பரூர்
வளைததறுபோன் றுளதங்கண் மதில்சூழ்ந்த மலர்க்
[கிடங்கு'

என்னுந் திருப்பாவின்கண் 'தற்குறிப்பேற்ற வுவமை' யும்,

'மதிவளா சடைமுடி மனறு ளாரைமுன்
றுதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல நுகர்தரு புனிதா பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே'

என்னுந் திருபபாவின்கண் 'ஏகதேசவுருகவணி' யும்

'சீலங்கொடு வெமபுலன் றெவ்வுடன் வென றுநீக்கி'

என்னு மடிக்கண், 'புணாநிலே' யணியும்,

2 'வணணநீள் வரைதர வாந்த மேன்மையா
லெணணிலபே ரறஙகளும வளர்கரு மீகையா
லணணல்பா கததையா ளுடைய நாயகி
யுணவெணகிழ் கருணேயி னெழுக்கம் போன்றது'

என்னுந் திருபபாவின்கண் 'நிரனிறை' யணியும்,

3 'சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம
பவமதனே யறமாற்றும் பாங்கினிலோங கியஞான
முவமையிலாக் கலேஞான முணாவரிய மெய்ஞ
[ஞானந்
தவமுதல்வா சம்பந்தா தாமுணர்ந்தா ரந்நிலேயில்'

என்னுந் திருப்பாவின்கண் 'எதிர்நிரனிறை'யணியும்,

4 'செம்மை வெண்ணீற் றொருமையினு ரிரணடு பிறப்
[பின் சிறப்பினர்

மும்மைத் தழலோம் பியநெறியார் நான்கு வேத
[முறைபயின்றா
தம்மை யைந்து புலனும்பின் செல்லுந் தகையா
[ரறுதொழிலின்
மெய்ம்மை யொழுக்க மேழுலகும் போற்று மறை
[யோர் விளங்குவது'

என்னுந் திருப்பாவின்கண் 'அரதனமாலை' யணியும இருத்தலறிக'

ஏனையணிகளைக் கற்றுத் தெளிக

---

## 2. ஆசிரியர் திருமனப்பாங்கு

### 1. தேயப்பற்று

'திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைந் திணை
[வளமுந் தெரித்துக் காட்ட
மருத்தொண்டை வாய்ச்சியர்சூழ் குன்றைநகாக்
[குலக்கவியே வல்லா னல்லாற்
கருத்தொண்ட ரெமபோல்வா ரெவ்வாறு தெரிந்
[துரைப்பார் கலந்தார்க இனப
மருத்தொண்ட ரணியிலவை யொன்றோ டொன்
[றியைந்தனவு மாங்காங குண்டால்'

எனத் தவஞானச் செல்வராகிய சிவஞான யோகிகள் பணித்தவாறு திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்துள் நமது நாடாகிய தொண்டைநாட்டு நானிலத்-

தைந்திணை வளத்தை நன்கு தெரித்துக் காட்டியதே யன்றிக்,

'கறை விளங்கிய கண்டராபாற் காதல்செய் முறைமை
நிறை புரிந்திட் நேரிழை யறம்புரிந் ததனாற்
பிறையு ரிஞ்செயிற பதிபயில் பெருந்தொண்டை [நாட்டு
முறை யாமெனவுலகினின் மிகுமொழியுடைத் தால்']

எனவும்,

'ஆய நானிலத் தமைதியிற் றத்தமக் கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங் [கித்
தீய வென்பன கனவிலு நினைவிலாச் சீர்மைத்
தூய மாந்தர் வாழ் தொண்டைநாட் டியல்புசொல் [வைத்தோ'

எனவும்,

பின்னும் பூசலார் நாயனார் புராணத்துள்,

'உலகினி லொழுக்க மென்று முயர்பெருந் [தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க நான்மறை விளங்கு மூதூர்'

எனவும், தொண்டைநாட்டின் ஒழுக்க மேம்பாட்டினைச் சிறப்பித்துக் கூறுதலின் ஆசிரியர் தேயப்பற்று வெளியாதல் காண்க.

## 2. குலப்பற்று

'நம்பு வாய்மையி னீடு சூத்திர நற்குலம்' எனவும்,

'நற்றிறம் புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்
துற்ற போது தம்முயிரையும் வணிகனுக் கொருகாற்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கியச சொல்லையேகாக்
[கப்பெற்ற மேன்மை'

எனவும்,

'சேணு லாவுசீரச சேரனூர் திருமலை நாட்டு
வாணி லாவுபூண வயவாகண மைத்துனக் கேண
மைபேண

எனவுங் கூறி வேளாள மரபினை வாய்மை மிக்க மரபென நிறுத்தலின் ஆசிரியர் குலப்பற்றுடையா ரென்பதும் வெளிப்படையாம்

## 3. மொழிப்பற்று

தங் தாய்மொழியாகிய தமிழ்மொழிமாட்டு ஆசிரியர் மிக்க பற்றுடையா ரென்பது,

பாட்டியற் றமிழுரை ' எனவும்
' மருவு வாய்மை வணடமிழ்' எனவும
' தண்டமிழ்' எனவும்;

'பொங்குதமிழ்'

எனவுங் கூறுமாற்றானும், யாம் நூற் றொடக்கத்துக்காட்டிய 'மும்மைப் புவனங்களின்' என்று தொடங்குந் திருப்பாவானும் எளிதி னுணரற் பாலது.

## 4 புலவர்மாட்டுப் பற்று

✱ 'காவளர்த்துங் குளந்தொட்டுங் கடப்பாடு வழுவாமன்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்து
நாவலர்க்கு வளம்பெருக நல்கியுநா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத வீகைவினைத் துறைநின்ருர்'

என்னுந் திருப்பாவின்கண், 'நாவலர்க்கு வளம் பெருக நல்கியும் என' விதத்தலின் ஆசிரியர்க்குப புலவர்மாட்டுளதாம் பற்றும் நன்கு விளங்கிற் றென்க

## 5 நூற்பற்று

'வேதநெறி தழைத்தோங்க' என்றமையானும்
துங்க வாகமஞ் சொன்ன முறைமையால்'

என்றமையானும் ஆசிரியரது வேதசிவாகமப பற்றும் விசதமாம்.

## 6 சைவப் பற்று

ஆளுடைய பிள்ளையார் புராணத்துள்,

'மிகுசைவத் துறைவிளங்க' என்றமையானும்; ஆளுடைய வரையர் புராணத்துள, சுவாமிகள் திருப்பழையாறை என்னுந் திருப்பதியை யடைந்து பெருமான் றிருவுருவத்தைச சமணாகள் மறைத்து அருகன் விமானத்தை அங்கு வைத்தனரெனக் கேட்டு மனமிகப் புழுங்கினரெனக் கூற வந்த ஆசிரியர்,

'அமணர்கடம்
'பொயகொள் விமான மெனக்கேட்டுப்பொருதவு
[ள்ளமிகப்புழுங்கி'

என்றனர் ஈண்டு அமணர்கடம் பொய்த்தெய்வத்தைக் கொண்ட விமானம் எனக் கூறுதன் முறையாக அருகனைத் தெய்வமெனற்கு வாய் கூசி 'அமணர்கடம் பொய்கொள் விமானம்' என்றமையானும் ஆசிரியர்சைவப் பற்று வெளியாமாறு காண்க

## 7. சிவபத்தி.

சிவபெருமான் நாயன்மார் பெருமையை உலகர் உணர்ந் துய்யுமாறு அறிவிக்க அவர் திருமனை நோக்கி,

'அரவணையான் சிந்தித தரற்றுமடி யருமறையான்
[சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாருமடி சார்ந்தார்
[கட்கெல்லாஞ் சரணு மடி
பரவுவார் பாவம் பறிக்குமடி பதினெண கணங்க
[ளும் பாடுமடி
விரவுநீத தென்கெடில நாடனடி திருவீரட்டான
[த்தெஞ்செல்வனடி

'அணியனவுஞ் சேயனவு மல்லாவடி யடியவர்கட்
[காரமுத மானவடி
பணிபவர்க்குப் பாஙகாக வல்லவடி பற்றற்றார் பற்
[றாம் பவளவடி
மணியடி பொன்னடி மாணபாமடி மருந்தாய்ப்
[பிணிதீர்க்க வல்லவடி

தணிபாடு தண்கெடில நாடனடி தகைசார் வீரட்
[டத் தலைவனடி

'பேணித் தொழுமவர் பொன்னுல காளப் பிறங்
[கருளா
லேணிப் படிநெறி யிட்டுக் கொடுத்திமையோர
[முடிமேன்
மாணிக்க மொத்து மரகதம் போன்று வயிரமன்னி
யாணிக் கனகமு மொத்தவை யாற னடித்தலமே'

என ஆசாரிய சுவாமிகள் தமது காதல் கலக்குமாறு பல நீச்சோபமானங்களுங் கூறிப் பலபடி வாயாரப் பாடிய திருவடி படி தேய நடந்து வந்ததாகக் கூறுமிடங்களில்,

1 'இடும்பலிப் பாத்திர மேந்து கையராய்
நடந்துவேட் கோவர்தம் மனையி னண்ணினார்'

2 'பெற்ற மூர்வதும் மின்றி நீடிய பேதையா ளுட
[னின்றியோர்
நற்ற வத்தவர் வேட மேகொடு ஞாலமுய்ந்திட நண
[ணினார்'

'வஞ்ச வல்வினைக் கறுப்பறு மனத்தடி யார்க
ணெஞ்ச நீங்கிடா வடிமலர் நிலம் பொலிய'

எனக் கூறுதலானும்,

வன்றொண்டர்க் காகப் பரவைநாய்ச்சியார்பாற் பெருமான் தூது நடந்த திருவாரூர் வீதி இன்னுஞ் செந்தாமரையடி நாறுமெனப் பொருள்பட,

படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிபா
ரிடந்த வேனமு மன்னமுந் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன்றொண்டர்க்குத தூது
[போய்
நடந்த செந்தா மரையடி நாறுமால்'

என ஆர்வந் தோன்றக் கூறுதலானும் ஆசிரியர் சிவ பத்தி தெற்றெனத் தெரிதல காண்க. பின்னர்க் காட்டிய திருப்பாவிற் பொருளைப் பின்னேரும்,

'சென்றவழி யின்றளவுந் துளவ நாறுஞ் சேதுதரி
[சனஞ் செய்தான்
திறல் வல்லோனே'

எனவும்,

'உரைசெறி மாயோன் கணமலர் வருடு முமைதிருக்
[கைம்மல ரயன்வெள்
வரைநிகர் களிற்றூன் வானவர் மௌலி வனைமல
[ரடியருண மலர்நன்
புரைமதி யமுத மறைமுடி நாளும் பொலிதர
[நாறுமொண செந்தா
மரைமலர் நாறு மறுகுமுற் பலபொன் மறுகுடை
[யதுதிரு வாரூர்'

எனவும்,

தமது பாவின அமைத்துக் கொண்டமை காண்க.

## 8. அடியார் பத்தி.

நாயன்மாரைப் பற்றிக் கூறுகையில் ஆண்பாலாற்

கூறுது யாண்டும் பலர்பாலாற் கூறுதலானும், ஆளு
டையவரசரைப் பற்றிக் கூறுகையில்

'இறைகொள்ளப் பெற்ற பெருந் தவத் தொண்டர்'

அஃதாவது பெருந்தவமென்ப தொன்று (தேடி யடை
ந்து) தங்கப் பெற்ற தொண்டரெனப் பெருமை
இனிது தோன்றப் போற்றலானும்,

ஆளுடைய பிள்ளையாரைப் பற்றிக் கூறுகையில்,

'ஞானத்தின் றிருவுருவை நானமறையின் றனித்
[துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்
கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்
[சீர் தொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்
[கள'

என ஆர்வம் பெருகவும் ஆசை யொருவழி யடங்கவும்
பலவாறு புனைதலானும்,

பிள்ளையாரும் அப்பருஞ் சீகாழியிற் றலைக்கூடி யளவ
ளாவித் தோணியப்பரைத் தரிசிக்கச் சென்றார்களென்
புழி,

அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதஞா னங்
[கொடுப்ப வழுகை தீர்ந்த
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக் கரசரெனச்
[சிறந்த சீர்த்தி

யெம்பெருமக் களுமியைந்த கூட்டத்தி லரனடியா
[ரின்ப மெய்தி
யும்பர்களும் போற்றிசைப்பச் சிவம்பெருகு மொலி
நிறைத்தா ருலக மெல்லாம்

அருட்பெருகு தனிக்கடலு முலகுக் கெல்லா
மன்புசெறி கடலுமா மெனவு மோங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவனமுய்ய
விருட்கடுவுண் டவரருளு மிலமெல்லா
மீன்றுடன் றிருவருளு மெனவுங் கூடித்
தெருட்கலைஞா னக்கன்று மரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தா ரன்றே'

எனனுந் திருப்பாக்களின,

'சிறந்த சீர்த்தி யெம்பெரு மக்கள்' எனவும்,

'அருட் பெருகு தனிக்கடல்' எனவும்,

'உலகுக் கெல்லா மன்புசெறி கடல்' எனவும்,

'சைவநெறி பெற்ற புண்ணியக் கண் இரண்டு' என
[வும்,

'இருட்கடு வுண்டவ ரருள்' எனவும்,

'உலகமெல்லாம் ஈன்றுடனருள்'

எனவுங் காதல தீரக் கழறலானும்,

~~பரிசாசாரியா~~ திருக்காளத்தி மலையைத் தொழு தேறிப் போய்க் கோயிலை வலங்கொண்டு காளத்தியப்பர் திருமுன் சென்று நின்று வணங்கி நிலத்தின் வீழ்ந்தெழுந்தெழிப் பெருமானுரை அப்போது தரிசித்தன் பயன் கைகண்டார் போலக் கண்ணப்ப நாயனுரைக் கண்டு அன்பின் மெய்ம்மை யுருவினையும் அவ்வன்பினில் நிலை

பெற்று நிற்கும் பெருமானுரையுங் கண்டு தலைவிரிய விருப்பத்தால் பன்முறை வீழ்ந்து வணங்கினோனை,

'தாழ்ந்தெழுந்து திருமலையைத் தொழுது கொண்டே
  தடஞ்சிலா தலசோபா னத்தா லேறி
வாழ்ந்திமையோர் குழாநெருங்கு மணிநீள் வாயின்
  மருங்கிறைஞ்சி யுட்புகுந்து வளர்பொற் கோயில்
சூழ்ந்துவலங் கொண்டிறைவர் திருமுன் பெய்தித்
  தொழுதுதலை மேற்கொண்டு செங்கைபோற்றி
வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண பார்போல்
  மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்'

'உள்ளத்திற் றெளிகின்ற வன்பின் மெய்ம்மை
  யுருவினையு மவ்வன்பி னுள்ளே மன்னும்
வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
  விமலரையு முடன்கண்ட விருப்பம் பொங்கிப்
பள்ளநதி யிழிபுனல்போற் பரந்து செல்லப்
  பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன்
வள்ளத்தின் ஞானவா ரமுத முண்டார்
  மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்குகின்றார்,

என்னுந் திருப்பாக்களின் அன்புபெருகி அகமுருகிச் சாற்றுதலானும் ஆசிரியர்க்கு அடியார் மாட்டுள்ள அன்பு வெளிப்படுதல் காண்க.

---

## 3. ஆசிரியர் பன்முக ஞானம்.

### (1) இசை நூல் ஞானம்.

இமூன்றை மறை நூன்மரபின் மொழிந்தமுறை
  [யெழுந்தவே
பந்தமுத லிரணடி லரிந்துநரம் புறுதானம்

வந்ததுளே நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளே
யந்தமில்சீ ரிடையிட்டி னங்குலியெண் களினமை
[த்து'

* * * *

'எண்ணிய நூற் பெருவண்ண மிடைவண்ணம்
வனப்பென்னும்
வண்ணவிசை வகையெல்லா மாதுரிய நாதத்தி
னணணியபா ணியுமியலுந் தாகருநடை முதற்கதி
யிற்
பண்ணமைய வெழுமோசை யெம்மருங்கும் பரப்பி
னோர்'

என்னுந் திருப்பாக்களி னமைந்துகிடக்கும் இசைநூற்
பொருளை ஓராற்றான் விரிக்குதும்

மறையென்றது உபவேதமாகிய கந்தருவத்தை.

மரபாவது வழக்கு.

மொழிந்த முறை எழுந்த வேயென்றது 'உயர்ந்த
ஓத்த நிலத்திற் பெருக வளர்ந்து மயங்கின் நாதமில்லை
யாதலான் மயங்கா நிலத்தினகண் இளமையும் நெடும்
பிசாசமுமின்றி ஒரு புருடாயுப்புக்க பெரிய மரத்தை
யாம்.

'உலர்ந்த சமதலத தோங்ககா னுன்னன்
மயங்காமை நின்ற மரத்தின்—மயங்காமே
முற்றிய மாமரந் தன்னை முதறடிந்து
குற்றமிலோ ராணடிற் கொளல்' என்றாராகலின்-

அந்த முதல் நாலிரண்டி லரிதலாவது வேரினின்றும்
எட்டுவிரல் அளவு நீக்கி யரிதல்.

நரம்புறு' தான மென்பது யாழ் நரம்புகட் குரிய சுரஸ்தானங்களை எண்டு நரம்பு ஆகுபெய ரென்க. இதனைத் 'தந்திரி' யென்ப வடநூலார்

வாயு முதல் வழங்கு துளை யென்பது வாய்வைத் தூதுவது 'அந்தமில் சீரிடையிட்டின் அங்குலி யெண்களின் நரம்புறு தானம் வந்த துளை நிரையாக்கி வாயு வழங்கு முதல துளை அமைத்து' என்பது முடிபு. 'அந்தமில் சீரிடையிட்டின் அங்குலி யெண் களின்' என்றார், இருபது விரலளவுகொண்ட மூங்கி லின் தூம்பு முகத்தின் இரண்டு நீக்கி முதல் வாய் விட்டு இம்முதல் வாய்க்கு எழங்குலம் விட்டு வளைவா யினும் இரண்டு நீக்கி நடுவினின்ற ஒன்பது விரலினும் துளைகளின் இடைப் பரப்பு ஒரு விர லகலமாமாறு எட்டுத் துளை யிடல் வேண்டுதலினென்க.

ஏழிசையாவன: சட்சம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன.

தடுத்த சராசரங்களென்றது சிவசம்பந்தமுடைய இடபம், அரவு முதலிய சரப் பொருள்களும், கொன்றை, ஆத்தி முதலிய அசரப் பொருள்களுமம நாயனா மேற்செல்லாது தம்பால் தங்கிக் குழலூதுமாறு தடுத்தமையினென்க. மேல் 'தங்கவரும்' என்றிருத்தலுங் காண்க.

'ஏழு விரலிடையிட்ட வங்கியம்' என்றார், முதல் வாய்க்கும் ஏனைத் துளைகட்கும் இடைப் பரப்பு ஏழு

விரலாகலின். வங்கியம்—'வம்ஸம்' என்னும் வட சொற்றிரிபு

வமஸம்-மூங்கில்; ஈண்டுப் புல்லாங்குழற்கு ஆகு பெயரென்க. தாது பிடித்தலாவது சுருதிபிடித்தல்; தாது என்பது நரம்பு

அஃதீண்டு ஆகுபெயராய்ச் சுரத்தை யுணர்த்திற் றெனக தனித்துளையாவது தூம்புமுகத்திற் கடுத்து ளது முதததிரையாவது எட்டுத் துளைகளினென்றும்; அது விரல் வையாது கழிக்கப்படுவது

வக்காணமாவது ஆளத்தி 'மீத்திறம் படாமை வக் காணம் வகுத்து' என்றார் சிலபபதிகாரத்தும் அதற்கு அளவுகோடாதபடி ஆளத்தியிலே வைத்து என்று ரை வகுத்தார் அடியார்க்கு நல்லார். ஈண்டுக் கூறியது ஆராய்சசி ஆளத்தி யென்க

வழிபோக்குத லாவது முறைபபடிசெய்து முடித்தல் ஆரோசையை ஆரோகணம என்ப வடநூலார் அது குழ லின் விரலூாந் தூதுந் துளைகள சுட்டு விரன்முதலாக விட்டுபபிடிப்பது அமரோசையை 'அவரோகணம்' என்ப வடநூலார் அது சிறுவிரன் முதலாக விட்டுப் பிடிப்பது இரண்டு கூறும் இப்படிச் செய்தல் வர்த் தனை யென்ப

'மாறுமுதற் பண்ணின்பின்' என்றதனை முதற பண் மாறிய பின் எனமாற்றுக முதற்பண்ணுவது

குறிஞ்சிப்பண் ணென்ப பண்மாற்றென்பது இப் பொருட்டாதலை சிலப்பதிகாரத்து அரங்கேற் றுகாதை 153-ம் அடியின்கீழ் அடியார்க்கு நல்லார் 'முடிக்கை-பண்மாறு' என்பதனாலறிக இனி மாறு முதற பண்ணினாபின் என்பது பாடமாயின், 'மாறு' வர்த்தனைக் காமென்க அவ்வாறு வர்த்தனையை முதலிற் பண்ணிய பின்னர் என்பது பொருளாகக் கொள்க

தாரமும் உழையுங் கிழமை கொளலாவது பா லை பிறத்தல; என்னை ?

> தாரத்துழைதோன்றப் பாலையாழ் தணகுர
> லோருமுழைத தோன்றக குறிஞ்சியாழ்-நேரே
> யிளிகுரலிற்றோன்ற மருதயாழ் துத்த
> மிளியிற் பிறக்கநெய்த லியாழ்'

என்றிருத்தலின்,

பட்டடை-நரம்புகளின் இளிக்குபெயா எல் லாப் பண்ணிற்கும் அடிமனையாகலின் பட்டடைக் கு ரலென்றது இளிகுரலாய கோடிப பாலையை,

இசைப்புநூல் நாள்காவன: பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறமென்பன; 'நாற்பெரும் பண்ணுஞ் சா திநான்கும் பாற்படு திறனுர் பண்ணெனப் படுமே'

என்றிருத்தல் காணக.

இசைக் கிளை கொள்ளுந் துறையஞ் சென்றது ஐந்தா நரம்பினை.

துறை' எண்டு நரம்பிற் காயிற்றென்க.

இனி,

'கிளையெனப் படுவ கிளக்குங் காலை
குரலே யிளியே துத்தம் விளரி
கைக்கிளை யெனவைந் தாகு மென்ப'

என்பதற் கேற்ப,

'குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை' என்னும ஐந்து சுரஸ்தானங்களின்' எனபபொருள் கூறினுமாம்

மந்தரம் படுத்தலோசையும மத்திமம் நலிதலோசையும தாரம் எடுத்த லோசையுமாம்

எண்டுத் தந்திரிகளென்றது சுரஸ்தானத்திற்குரிய துளைகளை சொல்வகை நான்கு-அவை சுண்ணம், சரிதகம், வண்ணம், வரிதகம் என்பன அவற்றுள் வண்ணம பதினறடி யான் வருவது: என்னை?

'சுணண நான்கடி சரிதக மெட்டடி
வணண நாறென்கு வரிதக மெணணென்கென்
றெணணிய வடித்தொகை யெய்தவும் பெறுமே'

என்றாராகலின் அவ்வண்ணம் மூன்று வகையாம்; பெருவண்ணம், இடைவண்ணம, வனப்பு வண்ணமென அவற்றுட் பெருவண்ணம் ஆறாய் வரும். இடைவண்ணம் இருபத் தொன்றாய் வரும். வனப்பு வண்ணம் நாற்பத் தொன்பதாய் வரும் [இவற்றை அடியார்க்கு

நல்லாருரையுட் காண்க] பாணியும், இயலும், தூக்கும் ஆகிய மூன்றும் தாளப்பகுதிக ளென்ப. ஈண்டு இய லென்றது சீரை.

கலித்தொகையுள் நச்சினார்க்கினியர் 'தாளம்—பாணி, சீர், தூக்கு என்னும் பகுதிகளுடையது' என் றமை காண்க

நடைமுதற்கதி யென்றது முதனடை, வாரம், கூடை, திரள் என்னும் நான்கு கதிகளை (கதி—இயக்கம்) முதனடை தாழ்ந்த செலவு; வாரமுங் கூடையும் இடைபபட்ட செலவு; திரள் முடுகிய செல வென்க

இத்துணை இசை நுணுக்கங்களை யெல்லாம் ஒரு ங்கு திரட்டி முறைப்படுத்திக் கூறுதலின் ஆசிரியர் இசை நூன் ஞானம் இனிதிற் காணக் கிடத்த லுணர்க

## (2) மருத்துவநூன் ஞானம்

'எரிவிட முறையே யேறித் தலைக்கொண்ட
[வேழாம் வேகந்
தெரிவுற வெயிறுங் கணணு மேனியுங் கருகித்
[தீந்து
விரியுரை குழறி யாவி விடக்கொண்டு மயங்கி
[வீழ்வான்
பரிகலக் குருததைத தாயர் பால்வைத்துப் படி
[மேல வீழ்ந்தான்'

என்னுந் திருப்பாவின்கண், ஆசிரியர் 'ஏழாம் வேகம்' என்றனர்.

அரசத் தீண்டப்பட்டார்க்கு விட வேகம் எட்டுண்டு அவை முறையே மூர்ச்சை, வெதுப்பு, கண் செருகல, வாந்தி, கபம, உணர்ச்சிக்கேடு, விறைப்பு, மரணம் எனபனவாம்
இறப்பு

இம் மருத்துவ நூ லுண்பொருளை அறிந்து 'மூர்சசை முதலிய எழு வேகமு மெய்தினதனமேனை மரண மொன்றே எய்த நிற்பதெனக் கூறியமை காணக

## (3) கணிதநூன் ஞானம்

அருக்கன்முதற கோளனைதது மழகியவுச சஙக
[ளிலே
பெருககவலி யுடனிறகப் பேணியநல் லோரை
[யெழுத
திருக்கிளரு மாதிரைநாட் டிசைவிளங்கப் பரசமயத
தருக்கொழியச சைவமுதல் வைதிகமுந் தழைத்த
[தோஙக'

என்னுந் திருப்பாவினுள் 'அருக்கன் முதற் கோளனைத்து மழகிய வுசசங்களிலே, பெருக்க வலியுடனிற்க' வென்றனா இதற்குப் பலா, 'சூரியன் முதலிய ஒன்பான கோள்களும் நல்லிராசிகளின் மிக்க வலிபெற்று நிற்ப' என வுரைகூறுவர். கணிதநூல் வல்லோர் சிலர் 'ஆசிரியர் அங்ஙனம் பொதுப்படக் கூறினாரல்லர்,' 'கோளனைத்தும்' என்னாது 'அருக்கன் முதற் கோளனைத்து' மென விதந்தமையின 'பாவக் கிரகங்கள் யாவம்' என்பது கருதது என்னை ? முறையே காற்

பாவி, அரைப்பாவி, முக்காற்பாவி, முழுப்பாவி எனப் படுஞ் சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனியாகிய நான்கு கிரகங்களும் முறையே மேஷம், மீனம், மகரம், துலாம் என்னுந் தத்தமக் குரிய உச்சவீடுகளின் நிற்பது வாயா வாய்ப்பு ; பிள்ளையார் போன்ற பேரருளாளர்க்கே வாய்ப்பதாகலின்' எனக் கூறி மறைபொருளை விளக்கிக் காட்டி ஆசிரியர் கணிதநூன் ஞானத்தைப் பலபடி பாராட்டினரெனத் தெரிந்து கொள்க

(4) மானசதத்வநூன் ஞானம்

'திருவாரூர்ப் பூங்கோயிலிற் புற்றிடங் கொண்ட புராணன் பொன்னடி வணங்கப் போந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆண்டுப் பரவையாரைக் கண்டு

'கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெரு வாழ்வோ' என நினைத்த அப்போது பரவையார் சுவாமிகளைக் கண்டு

'முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ பெருகொளியாற் றன்னேரில் மாரனோ'

என நினைத்தன ரென்றார்

இதனாற் சுவாமிகள் 'கற்பகத்தின் பூங்கொம்போ [கற்பகக் காட்டிற் பூங்கொம்பு போல விளங்கிய தெய்வயானை யம்மையோ] என நினைத்த அக்கணம் பரவையார் 'முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ' என நினைத்தன ரெனவும்,

சுவாமிகள்,

'காமன்றன் பெருவாழ்வோ (இரதியோ)' என நினைத்தவளாவிற் பரவையார் 'தன்னேரின் மாரனோ' (மன்மதனோ) என நினைத்தன ரெனவும் போதருதலின், ஆர்வல ரிருவர் ஒருவரை யொருவர் காண்புழி ஒருவர் மனத்தினுதிக்கும் சங்கற்பத்திற் குறவாகிய சங்கற்பமே மற்றையவர் மனத்தினும் உதிக்கு மென்னு மாணிக்க தத்வநூற்பொருள் கொள்ளக் கிடத்தல கண்டு தெளிக.

ஈண்டு மற்றொரு பொருளுங் குறிக்க இங்ஙனம் ஒரு தலைவிக்கு ஐயம் நிகழ்வுழி முருகன்போலக் கட்டழகுடையார் பிறரில்லை யெனக் கேட்கப்படுதலின அவன் முன் நினைவிற்கு வருதல் இயல்பெனபார் 'முன்னேவந் தெதிர்தோன்று முருகனோ' என முன்னோர் கூறினார் 'சிறந்துழியையம்' (தொல்-பொருள்-களவு-94) என்னுஞ் சூத்திரவுரைக்கண் நச்சினார்க்கினியர் 'முருகனோ இயக்கனோ மகனோ வென ஐயம் நிகழின்' என்றதூஉம் 'அதுவே, தானே யவளே' (இறையனார்-2) என்னுஞ் சூத்திர வுரைக்கண் நக்கீரனார் கடம்பமர் கடவுள் கொல்லோ இயக்கன் கொல்லோ அன்றி மக்களுள்ளான் கொல்லோ வென்று இங்ஙனம் ஐயப்படும்' என்றதூஉங் காண்க

## 5. வியவகார ஞானம்

திருவெண்ணெய் நல்லூர் அந்தண ரவையத்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகண் மீது வழக்குத் தொடுத்து

நின்ற அந்தணராகி வந்த பெருமானை நோக்கி 'மறையவர் அடிமையாதல் இந்த மா நிலத்தி லில்லை, என் சொன்னாய், ஐயா!' என்று ரெனபுழி 'வந்தவாறு இசைவே யன்றோ வழக்கு' அஃதாவது (நீதிபதிகளாகிய பெரியோர், அநுசரித்து வந்தபடி வழக்கிற் கேதுவாவது சம்மதமே யன்றோ? என்கையானும், 'ஆட்சியிலாவணத்தி லன்றி மற்றயலார் தங்கள், காட்சியின் மூன்றிலொன்று காட்டுவாய்' அஃதாவது அநுபவத்தினேனும் ஓலையினேனும் சாட்சியினேனும் ஒன்று காட்டுவாய்' எனக் கேட்டா ரென்கையானும்,

'மூட்சியிற் கிழித்த வோலை படியோலை மூலவோலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்',

என விருத்த வேதியர் விளம்பின ரென்கையானும்,

அருமறை நாவலாதி சைவனூ ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் [கியானு மென்பால்
வருமுறை மரபு ளோரும் வழிதொண்டு செய்தற் [கோலை
யிருமையா லெழுதி நேர்ந்தே னிதற்கிவை யென் [னெழுத்து'

எனப் பத்திர மெழுது முறை பிறழாது கூறுகையானும், கைச்சாத்துக்கொண்டும் ஓலையெழுத்தோடொப்பு நோக்கின ரெனக் கூறுகையானும் ஆசிரியர்க்கு வியவகாரஞான முண்டெனற்கு ஐயமொன்று மின்று.

## 6 உறுப்பு நூன் ஞானம்.

கருங்கதிர விளங்குமேனிக் காமரு குழவி தானு
மிரும்புலிப் பறழி ஞெங்கி யிறவுளரளவே யன்றி
யருமபெற லுலக மெல்லா மளப்பரும பெருமை
[காட்டித்
தருநகுறி பலவுஞ் சாற்றுந் தன்மையிற் பொலிந்து
[தோன்ற'

எனவும்,

'நல்லவென வுறுப்புநா லவருரைக்கு நலகிரம்பி'

எனவும் உறுப்புநூ லமைப்பைப்பற்றிப் பொது வகை யாற் கூறினரேயன்றிச சிறபபுவகையாற் கூறிற்றிலர். சிலவிடங்களின அதனைச சிறபபுவகையாற் கூறிய கமப ரும் ஒரு வழி,

கரநதில னிலக்கண மெடுத்துக் காட்டிய
பரந்தரு நான்முகன பழிப்புற் றுனரோ
விரநதிவ னிணையடிப் பொடியு மேற் கிலாப்
புரநதர னுலகெலாம் புரக்கின்று னென்றுன்'

எனப் பொதுவகையானுங் கூறியது காண்க.

இனி, மானக் கஞ்சாற நாயனூர் புராணத்துள் மாவிரத முனிவராக வந்த பெருமான் றிருவடியிற் பத் மம், சங்கம், மத்ஸ்யம், சக்கரம், தண்டமென்னும் ரேகைக ளிருந்தன வென்பார்,

'இருநிலததின் மிசைதோய்ந்த வெழுதரிய திரு
[வடியுந்

திருவடியிற் றிகழ்பஞ்ச முத்திரையுந் திகழ்ந்
[திலஙக'

என்றவையுங் காண்க.

7 திருக்கோயிலமைப்பு நூன் ஞானம்

'அடிமுத லுபான மாதி யாகிய படைக ளெல்லாம
வடிவுறுந் தொழில்கண முற்ற மனததினல் வகுத
[துமான
முடிவுறு சிகரந் தானு முன்னிய முழததிற்
[கொணடு
நெடிதுநாள் கூடக் கோயி னிரமபிட நினைவாற
[செயதார்'

'தூபியு நட்டு மிக்க சுதையுநல் வினையுஞ் செய்து
கூவலு மமைதது மாடு கோயில்சூழ் மதிலும்
[போக்கி
வாவியுந் தொட்டு மற்றும் வேணடுவ வகுத்து மன்
[னுந
தாபனஞ் சிவனுக் கேற்க விதிததநாள் சாருநாளில்'

என்னுந் திருப்பாக்களின்,

'அடிமுத லுபான மாதியாகிய படைகளெல்லாம்'
'முடிவுறு சிகரந்தானும் முன்னிய முழத்திற்
[கொணடு'

தூபியு நட்டு'

எனக் கோயிற்க ளுறுப்புக்களேயுஞ் சிகரத்தி னளவை
யையும் குறித்தலின், ஆசிரியர்க்குத் திருகோயி[illegible]

ப்பு ஞானமும் இருத்தல் வேண்டுமெனவுணர்த்தற் கிட்டுண் டென்க.

8. நீற்றியன் ஞானம்

ஆதார மாயனைத்து மாகி நின்ற வங்கணனெம்
பெருமானீ ரணிந்த வேணிக்
காதார்வெண் டிருக்குழையா னருளிச் செய்த
கற்பமநு கற்பமுப கற்பந் தானும்
ஆகாதென் றங்குரைத்த வகற்ப நீக்கி
யாமென்று முன்மொழிந்த மூன்று பேத
மோகாதி குற்றங்க ளறுக்கு நீற்றை
மொழிவதுநம் மிருவினைகள் கழிவ தாக'

* * * *

'சாதியினிற் றலையான தருமசீலர்
தத்துவத்தி னெறியுணர்ந்தோர் தங்கள் கொள்கை
நீதியினிற் பிழையாது நெறியி னிற்போர்
நித்தநிய மத்துநிக ழங்கி தன்னிற்
பூதியினைப் புதியபா சனத்துக் கொண்டு
புலியதளி னுடையானைப் போற்றி நீற்றை
யாதிவரு மும்மலமு மறுத்த வாய்மை
யருமுனிவர் முழுவதுமெய் யணிவ ரன்றே'

என்னுந் திருப்பாக்களான்,

திருநீறு கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பமென நான்கு வகைப்படு மெனவும், அவற்றுண் முன் மூன்றும் ஆமெனவும் பின்னொன்று ஆகா தெனவும், நோயொன்று மில்லாத புனிற்றான் சாணத்தை மந்திரத்தா னேற்றுச் சிவாக்கினியின் இட்டெடுத்தது கற்பமெனவும், காட்டி னுலர்ந்த சாணத்தைக் கைக்

கொண்டு பொடியாக்கி ஆவி ஸீரான் மந்திரஞ் சொல்லித் திரட்டிப்பிடித்து ஓம நெருப்பின் இட்டெடுத்தது அநுகற்பமெனவும், காட்டுத் தீயான் வெந்த நீறும் ஆனிலைகள் தீப்பிடிக்க வெந்த நீறும், சிலவகை இடங்கள் தீப்பிடிக்க வெந்த நீறும், சுள்ளையின் எரிந்த நீறும் வெவ்வேறு ஆவி ஸீரான் மந்திரஞ் சொல்லி யுண்டையாக்கி மடத்தின்கண் எரிகின்ற சிவாக்நியின் இட்டெடுத்தது உபகற்ப மெனவும், அகம் புறமென்னும் இருதிறமுஞ் சுத்தி வரும் அத்தகைய திருநீற்றைத் தெளித்தல் வேண்டுமெனவும், அரன், அக்நி, நதி, ஞானகுரு, அசுத்தநிலம் இவற்றின முன் அணியலாகாதெனவும், உடம்பு முற்று மணிதலும் புண்டரமாகவும், மதிப்பாதி போன்றும், தீப வட்டம் போன்றும் அணிதலும் ஆமெனவும், சத்வநிஷ்டராய்ச் சதாசாரியராயுள்ள உத்தம பிராமணர்கள் நித்யோமாக்நியிற் திருநீற்றைப் புதுப்பாத்திரத்திற் கொண்டு மெய்ம் முழுவதும் அணிதலா மெனவும் ஆகமத்துக் கண்டவற்றைத் தெரித்தலின் ஆசிரியர் நீற்றியன் ஞானம் விசதமா மென்க.

## 4. சில தடைகளுக்கு விடை.

**முதலாவது தடை :** சிவகுமாரன் கருவிருந்து அவதரித்தா னென லடாதென்பர் ஒரு சிலர்.

**விடை :** பரமன் தனது மூல பண்டாரமாகிய திருவருண் முதலின் ஈட்டிய ஊதியம் போன்ற தத்துவப் பகுதியின் ஒவ்வோருயிர்க்கும தொண்ணூற்றாறு புகரித்துப் 'பிழைக்க' வெனப் பணித்தனன். அவ்வுயிர்

கள் இவ்விருடருமா ஞாலத்திற் புக்குத் தம் நிலையும் பிற பொரு ணிலையும அறியாது மயங்கின. அது கண் டிரங்கிக் காரிருளிற் புக்காாக்குக் கைவிளக் குதவுதல் போல வேதசிவாகமங்களைத் தந்து 'உய்க' வென ஏவி னன் அதன் பின்னும் அவை அவ வேதசிவாகமங் களுக்கு அபார்த்தங் செயயப புக்கன பரமன் பரி வுகூர்ந்து தன் குழவி குளத்தின் விழக்கண்ட தந்தை அக்குளத்திற் பாயநதெடுத்தல்போலத் தானும் தன் அருண்மூர்த்தமொன்றன் அம்சமாய் ஓரோவழி அஞ் ஞாலத் தவதரிபபன அதனால் அவற்கென் ? மண மேனும் பிறகுணமேனும் ஆகாயத்தைப் பற்றுமோ ? பேரிகை அடிபபின் ஆகாயஞ் சலிக்குமோ ? ஞானா காசமாய நம்பன் ஞாலம் புகி னெனன் ?

'ஒன றுநீ யலலை யன்றியொன் றில்லை யாருன்னை
யறியகிற் பாரே'

என நமது பெருந்துறைப் பிள்ளையா - சருளியபடி, அவன் ஒரு பொருளுமாகான் அவனை யன்றி யொரு பொருளுமிலலை அவன் 'தோய்ந்தும் பொருள்களைத் துந் தோயாது நின்ற தனிச்சுடர்.' அவன் அருட்குண. கணங்களை அறிய வல்லார் யாவர் ?

'எதொழிலுங காரணங்க ளிறந்தனக் கில்லை யைந்து
மெய்தொழிலசெய் வதுமடிகேள் விளையாட்டு நிமித்
[தமே'

என்றபடி, அகில லோகங்களையும் ஆக்கியளித்தழித் தல் அவற்கு விளையாட்டி னளவே. அவன் செயற்றிறம் சிந்தை செய்தற்குரியார் இங்கில்லை, அங்கிலலை, எங்கு

மில்லை. அவன் எங்கணுமிருப்பன், ஏகதேசத்திருப்பன், வானிலிருப்பன், வளியிலிருப்பன், நீரிலிருப்பன், நெருப்பிலிருப்பன, கண்ணிலிருப்பன், எண்ணிலிருப்பன் ; எல்லாம்வல்ல அவன் சொரூப ரூப குண விபூதிகளைச் சிற்றறிவுடைய சீவன் அளவிட முயறல் நரி தன் வாலைக் கொண்டு கடலாழங் காண முயறற்கு நேர் அவன் பந்தத்தாற் பிறப்பானுஞ் சாபக்காற் சனிப்பானு மல்லன் ஆகலின் அவன் அவதாரமாமதத்தை அறிய வொண்ணாது நம் ஆசிரியர் ஆன்றோர் கொள்கையைப் பின்பற்றியே சிவகுமாரன் திருஞானசம்பந்தப்பிள்ளையாராக அவதரித்தன னென்று ராகலின் அவர்க்கு அச்சமொன் றில்லை யென்க

2-வது தடை : ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் சமணரைக் கழுவேற்றின ரெனலடாது.

விடை :

என்றமண கையர் கூறவேறுசீர்ப்பு கலிவேந்தா
நன்றதுசெய்வோ மென்றங் கருள்செய நணுக [வந்து
வென்றிவே லமைச்ச ரூர்தாம் வேறினிச செய்யு [மிவ்வா
தொன்றினுந் தோற்றார் செய்வ தொட்டியே செய் [வ தென்றார்'

'அந்தது கேட்டு நின்ற வமணரு மவாமேற்.சென்ற
பொங்கிய வெகுளி கூரப் பொருமைகா ரணமே [யாகத்
தங்கள்வாய் சோர்ந்து தாமே தனிவாதி லழிந்தோ [மாகில்

வெங்கழு வேற்றுவானிவ் வேந்தனே யென்று [சொன்னார்'

என்னுந் திருப்பாக்களான் ஆசாரிய சுவாமிகள் புனல் வாதத்தில் தோற்றார் ஓட்டிச் செய்யத் திருவுளம் பற்றினாரலரெனவும் அவ்வாதத்தை அங்ஙனஞ் செய்வதென எடுத்துச் சொற்றவர் குலச்சிறை நாயனாரெனவும் அச்சொற்கேட்ட சமணர்கள் அவ்வழி அவர்பான்மூண்ட பெருங்கோபத்தானும் மானம் பொறுக்கலாமையானும் 'வாய்சோர்ந்து' இவ்வொரு வாதில் அழிந்தோமாகில் இவ்வேந்தனே கழுவேற்றுவான் என்றொட்டினரெனவும்,

'புகலியில் வந்த ஞானப் புங்கவ ரதனைக் கேட்டு
மிகலில ரெனினுஞ் சைவ ரிருந்துவாழ் மடத்திற் [றீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் சாலு மென் [றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த [வேலை'

பண்புடையமைச்சனாரும்பாருளோரறியுமாற்றாற்
கண்புடைபட்டுநீண்டகழுத்தறிநிரையிலேற்ற
நண்புடைஞானமுண்டாரமடத்துத்தீநாடியிட்ட
வெண்பெருங்குன்றத்தெண்ணாயிரவருமேறினார் [கள்'

என்னுந் திருப்பாக்களான் அச்சமணர்கள் தோற்றமை கண்ட வேந்தன் குலச்சிறையாரை நோக்கி 'வாதில் ஓட்டித் தோற்ற இச்சமணர்கள் பிள்ளையார் எழுந்தருளியிருந்த திருமடத்திற் றீக்கொளுவிப் பெருந்தீங்கி

மைத்தாராகலின் அவர்களைக் கழுவிலேற்றி முறை செய்க வென்றானெனவும் சுவாமிகளுக்கு அசசமணர் பாற் பகை யொன்றுமில்லையேனும் வேந்தன் கட்டளை கேட்டுஞ் சிவனடியார் தங்கியிருந்த திருமடத்திற்றீங்கு செய்தமையாற் குற்றமற்ற வேந்தன் செய்கை தக்கதேயாமெனக் கொண்டு ஒன்றுங் கூறாது வாளா விருந்தனரெனவும் குலசசிறைநாயனார் யாவருங் காணும்படி எண்ணாயிரஞ் சமணர்களையுங் கழுவேற்றினரெனவும் அறியக் கிடக்குமொனைக.

குலசசிறையார், வேந்தன், பிள்ளையார் இம்மூவர் செய்கையும் தக்கவோ வெனிற் சாற்றுதும் :—

"பாண்டி மன்னனையும் பாண்டி நாட்டுக் குடிகளையும் மயக்கி அவர்களை நிரயம் புகுத்தற்கான முயற்சியின் மிக்கவர்ந்த சமணர்பாற் குலசசிறையார்க்கு நெடு நாளாகப் பகை மேன்மேல வளர்ந்தமையானும், 'சூழ்வார் கண்ணுகை வொழுகலான்' என்றிருத்தலின் சைவர்களுஞ் சுவாமிகளுந் தங்கியிருந்த திருமடத்திற் றீக்கொளுவிய சமுக்கராகிய அசசமணர்களை ஒழித்தற்கோர் சூழ்ச்சி அரசற்குக் காட்டல அமைச்சர் கடப்பாடாகலானும், அவர் அச்சமணர்களை நோக்கி 'தோற்பார் உறுவது இதுவென ஒட்டியே இவர்தஞ் செய்தல் வேண்டும்' என உலக வழக்கை முன்னிட்டுக் கூற அவர்களை அவர்பால் மூண்ட சினத்தானும் மானத்தானும் தங்கள் எண்ணத்திற்கு மாறாக வாய் சோர்ந்து,

'தோற்போமேல் இவ்வேந்தனே கழுவேற்றுவான்'

என ஒட்டினராகலிற் குலச்சிறையார்பாற் குற்றமின்றென்க

திருமடத்திற் றீக்கொளுவி ஆசிரியர்களாகிய சமணர்கள்பாற் கண்ணோடிக் கொல்லாவழிப் புற்களையான் நலியாநின்ற பைங்கூழ்போன்று நலிவு பல வெய்தி உலகு இடர்ப்படுமாகலின்,

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்
களைகட் டதனொடு நேர் ' [கூழ்

என்னுந் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனுருரைக் கேற்ப அச்சமணர்களைக் கழுவேற்றக் கட்டளையிட்டதும் வேந்தற்குச் சாதி தருமமா மென்க.

காத்திருத்துவமுடைய பிள்ளையார் ' அரசன் அன்று கொல்வன, தெய்வம் நின்று கொல்லும் ' என்னும் பழமொழிப்படி நின்று கோறற் குற்றவரேயாகலின் அன்று கோறற்கெழுந்த வேந்தனை விலக்காதொழிந்தது மறக்கருணையா லென்க

' ஒடியதே ரின்கீழ் முயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவமனறே நீங்குமென—நாடித்தன்
மஞ்சனையு மூர்ந்தோன் வழக்கே வழக்காக
நஞ்சனைய சிந்தை நமன்றாதா—வெஞ்சினத்தா
லல்ல லுறுத்து மருநரகங் கண்டிற்க
வல்ல கருணை மறம்போற்றி '

என்றிருத்தல் காண்க

இனிச் சமணர்களைக் கழுவேற்றுமாறு வேந்தனுங் கட்டளையிட்டிலன் குலச்சிறையாரும் அவர்களைக் கழுவேற்றிலர்

'புத்தா சமணகழுக் கையர் பொய்கொளாச
சித்தத் தவர்க ளெளிந்து தேறினை
வித்தக நீறணி வார்வினைப் பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே'

எனனுந் திருப்பாசுரத்திற் 'சமண் கழுக் கையர்' என் றிருத்தலின் அவர்களே கையிற் கழுமரங் கொணர்ந் தேறினை ரென்ப ஒரு சாரார்.

'சமண் கழுக்கையர்' எனபதற்குப் பொருள் 'சமண் மிண்டர்' என்ப; 'கழுக்கை மொழுக்கையாக வுளன்' என்பது உலக வழக்குரையாகலின்.

கர்த்திருத்துவம் தமக்குள தாயிருந்தும் பிள்ளை யார் இறைவன் விடைபெற்றே இதுசெய்தன ரென் பது,

வேத வேள்வியை நிந்தனை செய்துழ
லாத மிலலி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதிமா துடனாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
னால வாயி லுறையுமெம் மாதியே'

என்னுந் திருப்பாசுரமுதலிய 'திருவாலவாய் - ஈரடி மேல் வைப்புத் திருப்பதிகத் திருப்பாசுரங்களான் இனிது விளங்குமாறு காண்க

யாவரேனும், தற்போத மிழந்து நின்று - சிவபோத மேலிட்டுக் குற்றஞ் செய்யின் அது குற்றமாகாது,

குணமாம். சண்டேசுர நாயனா முதலினோர் செய்கை காண்க. அற்றாக, பிள்ளையார் செய்வதுங் குற்ற மாமோ ?

'நற்றமிழ் வல்ல ஞானசம பந்த நாவினுக் கரைய
[னாளைப்போ வானுங்
கற்ற சூதனற் சாக்கியன் சிலந்தி கண்ணப் பன்
[கணம் புல்லனென் றிவர்கள
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங் கொள்
[கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றிரண் மணிக் கமலங்கண் மலரும் பொய்
[கைசூழ்திருப் புன்கூரு ளானே'

என ஆளுடைய நம்பிக ளருளிச்செய்தமை இப்பொ ருளை இனிது விளக்குதற்கே யன்றோ ?

3 வது தடை :

'மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்ன நீண்ட
வெயிலுடை யிலங்கை நாத னிதயமாஞ் சிறையில்
[வைத்தான்'

என இராவணன் சானகியை அசோகவனத்திற் சிறை வைப்பதன்முன் தன் மனச்சிறையின் வைத்தமை கூறிய கம்பர் பின்னர் அசோக வனச் சிறையை இரா மன் மீட்டல் கூறுதன் முன்,

'கள்ளிருக்கு மலர்க் கூந்தற் சானகியை மனச
[சிறையிற் கரந்த காத
லுள்ளிருக்கு மெனக் கருதி யுடல் புகுந்து தட
[வியதோ வொருவன் வாளி'

என மனச் சிறையினின்றும் மீட்டமை குறிப்பிற் கூறி யது முறை

குங்கிலியக் கலய நாயனார் தாலி விற்றமை கூறிய ஆசிரியர் மீட்டும் அதனைப் பெற்றமை குறிப்பானுங் கூறாமை முறையன்று

விடை: சானகியை இராவணன் மனச்சிறையி லிட்டமை கூறிய கம்பர அச்சானகி மனசசிறையி னின்மை கூறாதொழிவரேற் குறையா மென்க

குங்கிலியக்கலய நாயனார் ஈசற்குத் தாலி விற் றமை கூறிய ஆசிரியர் பின்னா;

'கொமபனா ரில்லமெஙகுங குறைவிலா நிறைவிற் காணு
மம்பொனின்குவையு நெல்லு மரிசியு முதலாயுள்ள
வெம்பிரா னருளா மென்றே யிருகரங குவிததுப் [போற்றித்
தம்பெருங கணவ னார்க்குத திருவமு தமைக்கச [சார்ந்தார்'

எனப் பெருநிதி பெற்றமை கூறினமையிற் றாலி பெற் றமை கூறுதன் மிகையாமென விடுத்தனர் 'அம்மி யுங் குழைவியும் ஆகாயத்திற் பறந்தன' வெனக் கூறிப் பின் 'இலவம் பஞ்சும் பறந்தது' என்பதும் மேதையருரையாமோ? ஆகாது, பேதையருரையே யாமென்க.

தாலி பெற்றமை கைமுதிய நியாயத்தாற் பெறப்படு மென்ப வடநூலார்.

4 வது தடை: மங்கையர்க்கரசியார்க்குக் கண வன் வழிச்சேறல் கடனா யிருபப அவற்கு விருத்தமா கச் சைவசமயத்தி னின்றமை அடாது;

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேருய்
பிசியு நொடியும் பிறர்வாய்க் கேட்டு
விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக்
கடவுட் பேணற் கடவியை யாகலின்
மடவர லேவ மழையும்பெய் யாது
நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
பிறா நெஞ்சு சுடூஉம் பெற்றியு மில்லை'

மணிமேகலையும்,

'சோதிப் பதியன்றி வேறொரு தெய்வந் தொழுதற் [இல்லை
யோதிற் பிறரென வசச முரும லுயிர்களெல்லா
நீதிப் புதலவா களாயின வாதலி னீகொள்கற்புப்
பேதிப்ப தன்றுகண டாய்குன்றை வாழும் பெரி
யம்மையே'

எனப் பெரிய நாயகியம்மை கலித்துறையுங் கற்பியல் விளக்குதல் காண்க

விடை: (1) மனைவி உடற்றொடர்புடைய கணவன் சென்றவழிச் சேறலும், அவன் சொல்வழி நிற்றலும் இன்னோரன்ன பிறவும் பொதுவற (சாமாந்யதர்ம)மெனவும், உயிர்த்தொடர்புடைமையின் 'ஆத்மநாயகன்' எனப் பெறுகின்ற கணவனாகிய பரமன்பால் நேயம் வைத்து அவன்மாட்டு மனமொழிமெய்களைச் செலுத்தல் சிறப்பற (விசேஷ தர்ம)மெனவும் ஆன்றோர் பகர்வர்.

வேதாகம முதலியன யாவும் 'ஆத்மநாயகன்' என்புழி, ஆண்பாலார்க் கென்றுதல் பெண்பாலார்க்

கென்றுதல் விதவாமையானும், 'ஸ்திரீபிராயம் இதரம் ஜகத்' என்பதற் கிணங்க ஆசாரியர்களும் தம்மை மனைவிராக வைத்துப் பரமபதியை நாயகனைப் பாவித்து அனுபவித்தலானும், ஆத்ம நாயகனை வழிபடுதலின் ஆண், பெண் என்னும் வியவஸ்தை யின்றென்க ஆதலின், உயிர்த்தொடர்புடைய நாயகனை அம்மையார் வழிபடுதலிற் குறை யென்னும்?

(2) முற்பிறப்புக்கள் பலவற்றிற் செய்த புண்ணிய முதிர்ச்சியான மனம் பரமேசுவரன் றிருவடிக்கண் இ[illegible] பெற்றார்க்கு விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் வேண்டா; அவர் செய்தவை யெல்லாந் தவமாம்

'அரனடிக் கன்பர் செய்த பாவமு மறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே'

என்றதூஉம் அப் பொருளையா மென்க.

எனவே, அத்தகைய புண்ணிய முதிர்ச்சியுடைய அம்மையார் விதித்தன செய்யாமையுந் தவமாயிற்றும்

(3) தம்து நாயகன் சைவப்பற் றுடையானுமிரு ப்புழி அவற்கு வேண்டிய வெல்லாஞ் செய்த அம்மையார் அவன சமணப் படுகுழியின் வீழ்ந்தமை கண்டு வழித் தாமும் அதன்கண் வீழின் அவன் எடுப்பாரு றுப் போவ னென்னும் இரக்கத்தால் தாம் வீழாது நின்று அவனை அப படுகுழியினின்றும் எடுத்தற்கு வேண்டிய எல்லா முயற்சியுஞ் செய்தெடுத்தமையி அம்மையார்பாற் குறை யாண்டைய தென்க.

சேக்கிழார் பெருமான் சேவடி வெல்க.